
செப்டம்பர் 2019

@NewsRotary /RotaryNewsIndia

Vol.2, Issue 4 | Annual Subscription ₹420

# ரோட்டரி நியூஸ்






தி ரொட்டேரியன் பத்திரிக்கையின் வருடாந்திர புகைப்பட போட்டியில் வெற்றிப் பெற்ற இப்புகைப்படம் பந்தரிப்பூர் விட்டலா கோவிலை மையப்படுத்துகிறது. இக்கோவிலுக்கு வருடா வருடம் வருகைத் தரும் 'வாரி' என்னும் பக்தர்கள் யாத்திரை படமாக்கப்பட்டிருக்கிறது.

படம் : சந்தோஷ் காலே, RC ஷிரோல், RID 3170.

# உள்ளே


**12** **இந்தியாவின் 4வது ரோட்டரி இண்டர்நேஷனல் தலைவராகிறார் சேகர் மேத்தா (2021–2022)**
PRID சேகர் மேத்தா நியமனக் குழுவால் ரோட்டரி இண்டர்நேஷனல் தலைவராக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

**14** **12 வருடங்களைக் கடந்த RC சோலாப்பூர் டிபன் உணவுத் திட்டம்**
சோலாப்பூரில் முதியவர்களுக்கு டிஃபன் பாக்ஸில் ஊட்டச்சத்துமிக்க உணவு வழங்கப்படுகிறது.

**24** **குழந்தைகளின் வாழ்வில் மறுமலர்ச்சி!**
நாக்பூரில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்குக் காதலர் தினம் மேலும் சிறப்பானது.

**30** **தொற்று அல்லாத நோய்களை கட்டுப்படுத்துவோம்**
ரோட்டரியின் புதிய முயற்சி இந்தியர்களிடையே தொற்று அல்லாத நோய்களை நிவர்த்தி செய்வது.

**32** **கிராமங்கள் நோக்கி பயணிப்போம்!**
DG தீபக் குப்தா தன்னுடைய பதவியேற்பு விழாவின் போது, தன்னுடைய மாவட்டம் 3012க்கான திட்டங்களைப் பகிர்ந்துகொள்கிறார்.

**36** **வெற்றியும், தோல்வியும் சகஜமப்பா!**
ரோடராக்ட் மாவட்டக் கூட்டத்தில் ரோடராக்டர்களுக்கு ஓர் ஊக்க உரை ஆற்றுகிறார் RID பரத் பாண்ட்யா.

**38** **தொழுநோயாளிகளுடைய வாழ்க்கையை மேம்படுத்துதல்**
தொழுநோய் அமைப்பு மருத்துவமனையில் உள்ளோருடைய வாழ்க்கையை எளிதாக்கும் ரொட்டி இயந்திரம், சலவை இயந்திரம்.

**42** **பிரிட்டிஷ் இந்தியாவின் "லிட்டில் இங்கிலாந்து"**
கர்நாடகாவிலுள்ள கோலார் தங்க வயல்களைப்பற்றிய ஒரு சுவையான கதை.


















**அட்டைப்படத்தில்:** RC சோலாப்பூர் டிஃபன்-உணவுத் திட்டத்தால் பலன்பெறுவோர்.

**புகைப்படங்கள்:** ரஷீதா பகத்

## சுதர்ஷன் அவர்களுடைய மரபு என்றென்றும் தொடரும்

*கருணை, எளிமையின் மறுவடிவமாகிய PRID சுதர்ஷன் அகர்வாலுடைய அஞ்சலிக்குறிப்பு சிறப்பாக அமைந்திருந்தது. அவர் ஓர் உயர்ந்த, அரசியலமைப்புப் பதவியில் இருந்தாலும், நான்கு-வழிப் பரிசோதனையை அமல்படுத்தி ரோட்டரியுடன் தன்னுடைய பிணைப்பை உறுதிப்படுத்தினார்.*

*சிறந்த மனிதராகிய அவருடைய வாழ்க்கையை ரோட்டரியின் சிறந்த மனிதர்களாகிய PRIP-கள் சாபு, K R ரவீந்திரன் மற்றும் PRID சுஷில் குப்தா சிறப்பாக விவரித்திருந்தார்கள்.*

*RI இயக்குநர் கமல் சங்வி, ரோட்டரியில் புதிய உறுப்பினர்களை ஈர்ப்பது, திறமைமிகுந்த பணிக்குழுவை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு அளிப்பது ஆகியவற்றை வலியுறுத்தியுள்ளார். RC சென்ட்ரல் சென்னை அமைத்திருக்கும் எலும்பு வங்கி ஒரு பாராட்டத்தக்க முயற்சியாகும்.*

*நவீன் Rகார்க்,*
*RC சுனாம் — RID 3090*



*PRID சுதர்ஷன் அகர்வால் உடைய மரபு என்றென்றும் தொடரும் என்பதை வலியுறுத்திய உங்கள் அஞ்சலிக் கட்டுரைக்கு நன்றி. அவர் உத்தராஞ்சல் ஆளுநராவதற்காக டெஹ்ராடூனுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, ஹரித்வார் நிலையத்தில் RC ராணிப்பூருடைய மற்ற உறுப்பினர்களுடன் நானும் அவரை வரவேற்றேன். ஹிம் ஜ்யோதி பள்ளியைத் திறப்பதற்கான நன்கொடைகளைக் கோரினார். பின்னர், எங்களுடைய கோரிக்கையின் பேரில், கிராமவாசிகளுக்குச் சேவை புரியும் எங்களுடைய மருத்துவ மையத்தை அவர் தொடங்கிவைத்தார்.*

*T D பாட்டியா, RC தில்லி மயூர் விஹார் — RID 3012*

*PRID அகர்வால் அவர்களைப் பற்றிய அஞ்சலிக் குறிப்புக்காக PRIP ராஜேந்திர சாபு, ஆசிரியர் ரஷீதா பகத் ஆகியோருக்கு நன்றி. அவர் ஓர் உண்மையான சமூகச் சீர்திருத்தவாதி.*

*பிரதீப் கூட்டலா, RC ஆலப் புழை கிரேட்டர் — RID3211*

## RIDகளிடமிருந்து சிந்தனை நிறைந்த செய்திகள்

கடிதங்கள் பகுதியில், RI தலைவர் மார்க் மலோனியின் சிந்தனைகளைப் பாராட்டி பாகிஸ்தான், கானா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ரோட்டரியன்களிடமிருந்து வந்திருந்த இரு எதிர்வினைகளைக் கண்டு மகிழ்ந்தேன். அனைத்துத் தொழில்முறை வகைகளிலிருந்தும் பிரதிநிதிகளைக் கொண்டு உறுப்பினர்களை அதிகரிக்கும் PRIP பேரி ரஸ்ஸினுடைய யோசனை சிறப்பானது.

மறைந்த சுதர்ஷன் அகர்வால் உடைய சிறந்த பணிகளைச் சிந்திக்கும் ஆசிரியர் குறிப்பு நன்கு அமைந்திருந்தது, RIDக்களிடமிருந்து வந்திருந்த செய்திகள் பொருளோடு அமைந்திருந்தன.

நம்முடைய சேவை மனப் பான்மை கொண்ட மருத்துவர் களுடைய ஆப்பிரிக்கப் பணியை அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளதைப் பற்றி வாசிக்கும் போது இந்திய ரோட்டரியன்கள் பெருமைப் படுகிறார்கள்.

ஹாம்பர்க் நினைவுகள் மற்றும் குழு விஷயங்கள் ஆகிய புகைப்படப் பக்கங்கள் சிறப்பாக இருந்தன.

ஃபிலிப் முலப்போனெ M T
RC திருவனந்தபுரம்
புறநகர் — RID 3211

## குறிப்பிடத்தக்க பன்னாட்டு நல்கைத் திட்டங்கள்

சென்னையில் ஓர் எலும்பு வங்கி கட்டுரை, ரோட்டரியின் பணியைப்பற்றி என்னைப் பெருமைப்படச்செய்கிறது.

N ஜகதீசன், RC எலுரு — RID 3020

## வளமான, சுவையான கட்டுரைகள்

மாதந்தோறும் ரோட்டரி செய்திகளை வாசிப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது, சிறப்பாக, தற்போதைய பிரச்னைகள், ரோட்டரி திட்டங்களைப்பற்றிய ரஷீதா பகத்துடைய ஆசிரியர் பக்கம் அற்புதமாக அமைந்து ள்ளது. ஜூலை இதழில் வளமான கட்டுரைகள் நிறைந்துள்ளன; RI தலைவர் மார்க் மலோனி மற்றும் கே-யின் வண்ணமயமான புகைப்படங்கள், ஈர்க்கக்கூடிய பகுதிகளால் இந்த இதழ் சுவையாக வாசிக்கும்படி அமைந்துள்ளது. பெருநிறுவனங்கள் CSR வழியாகத் தங்களுடைய நிதிகள் எப்படிச் செலவிடப்படவேண்டும் என்று விரும்புவதற்கும், சமூகத் தேவைகளுக்கும் இடையிலுள்ள பொருந்தாத்தன்மையைப்பற்றிய TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதியுடைய கருத்துகளை ரோட்டரி மதிப்பிடவேண்டும். இதைப் புரிந்துகொள்வதன்மூலம், பன்னாட்டு நல்கைகளுடைய நிராகரிப்பைத் தடுக்கலாம். CSR

நிதிகள் ஓர் எளிய அமைப்பின் மூலம் நேரடியாகத் திட்டங்களுக்குச் செல்ல TRF அனுமதிக்கவேண்டும், அதன்மூலம் குழுக்கள் சமூகத்துக்குப் பெரிய, அதிசயமான பணிகளைச் செய்யலாம்.

அடுத்த ஆண்டு, RI வாரியத்தில் ஆறு பெண்கள் இருப்பார்கள்; பெண்கள் ஆற்றல் வழங்கலுக்கான ஒரு மிகச்சிறந்த முன்னெடுப்பு இது. கர்நாடக ரோட்டரியன்களுடைய பூமியைப் பசுமையாக்குதல் மற்றும் என்னுடைய சொந்தக் குழுவாகிய RC ஜெய்ப்பூர் பாபு நகர், RID3054ன் தாளத்தைத் தொடர்தல் ஆகியவை உண்மையில் குறிப்பிடத்தக்கவை.

PC சங்கி, RC ஜெய்ப்பூர்
பாபு நகர் — RID 3054

TRF அறங்காவலர் குலாம் வாஹன்வடியுடனான பேட்டி கவர்ந்திழுக்கும் குறிப்புகளுடன் ஊக்கமளித்தது. தெற்காசிய ரோட்டரியன்களை PRIP பேரி ரஸ்ஸின் பாரட்டியுள்ளது, புதிய தலைவர்களை ஊக்கப்படுத்தும். நினைவில் நிற்கும் ஹாம்பர்க் கணங்கள் மகிழ்ச்சியளித்தது.

Rtn அருண் ஊம்மென்
RC மேற்குக்
கொச்சின் — RID 3201

## ரோட்டரிக்கு இளைஞர்களை ஈர்த்தல்

இந்தியாவில் ரோட்டரியைப் பாதிக்கும் பிரச்னைகளைப்பற்றிய உங்கள் அலசல் மதிப்புமிக்கது.

தெற்காசியாவிற்கான PRIP ரஸ்ஸினுடைய எதிர்பார்ப்புகள், நாம் அனைவரும் பதிலளிக்க வேண்டிய ஒரு தெளிவான அழைப்பாகும். தெற்காசியாவின் மிக விரைவான உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி யையும், TRFக்கு அது இரண்டாவது மிகப்பெரிய பங்களிப்பாளராக இருப்பதையும் அவர் பாராட்டுகிறார்; ரோடராக்டர்ஸுடைய முக்கியத் துவத்தை வலியுறுத்துகிறார்; ரோட்டரியின் தன்னார்வலர் நேரங்கள், அதன் நிதி மதிப்பு பற்றிய ஜான்ஸ் ஹாப்கின்ஸுடைய புள்ளிவிவரங்கள் பல இளைஞர்களை மனிதகுலத்துக்குச் சேவை செய்யத் தூண்டும்.

அருண் குமார் டாஷ்
RC பரிபடா — RID 3262

உடற்பயிற்சியில் மனம்-உடல் இணைப்புல் “அனைத்து உடற்கட்டுச் செயல்பாடுகளிலும் ஒரு மன-உடல் இணைப்பு உள்ளது’’ என்று சொல்லும் ஷீலா நம்பியாரை வாழ்த்துகிறேன்.

A S ஐயர், RC வடக்கு
ஈரோடு — RID 3202

## இந்தியாவில் ரோட்டரியுடைய 100 ஆண்டுகளைக் கொண்டாடுவோம்

மிகச்சிறந்த ஆசிரியர் பக்கம், நாடு முழுவதிலுமிருந்தும் உலகம் முழுவதிலுமிருந்தும் அற்புதமான செய்திகளுடன் ஜூலை இதழ் வாசிக்கச் சுவையாக இருந்தது. RID சங்வியுடைய இந்தியாவில் ரோட்டரியுடைய 100 ஆண்டு களைக் கொண்டாடுவோம் நெஞ்சைத் தொட்டது. இந்த மைல்கல், இந்தியாவிலுள்ள அனைத்து ரோட்டரியன்களுக்கும் உண்மையிலேயே பெருமையான ஒரு கணமாகும், இந்தப் பெரிய மைல்கல்லைக் கொண்டாடுவோம்.

100 ஆண்டுகளுக்கு முன்னால், மனிதகுலத்தை மேம்படுத்து வதற்காகத் தொடங்கப்பட்ட தனக்கு மேல் சேவை என்ற சிறந்த பயணத்தை நினைவு கூர்வது மதிப்புமிக்கதாகும். அந்தப் பயணத்தின்பெருமைக்குரிய மரபை நாம் அர்ப்பணிப்புணர்வுடன் செய்துவருகிறோம்.

அஷிம் பட்டாச்சார்ஜி
RC கிரீன் லான்ட்
சில்சர் — RID 3240

பல நாடுகளிலும் இயங்கிவருகிற, பன்முகத்தன்மை கொண்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற ரோட்டரி, உலகக் குடிமக்களை எட்டும்வகையில் யோகா மற்றும் ஆன்மிகச் செயல்பாடுகளை முன்னிறுத்தவேண்டும். இதைச் செய்வதன்மூலம், நாம் பலரை நோய்களிலிருந்து காப்போம், அவர்களுடைய நலனுக்குப் பங்களிப்போம்.

ஜகதீஷ் ஜே மாலு, RC குல்பர்கா
சன்சிட்டி — RID 3160

TRF அறங்காவலர் தலைவர் கேரி C K ஹுவாங்-குடைய செய்தி சிந்தனையைத் தூண்டுகிறது, அவருடைய ஃபேஸ்புக் பக்கத்தில் ரோட்டரியன்கள் தங்களுடைய கருத்துகளை, எண்ணங்களை, திட்ட யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம் என்றார்.

M V சுப்ரமணியம்
RC ப்ராடத்தூர் — RID 3160

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:*
*rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org*.



# ரோட்டரி பற்றி உங்கள் குடும்பத்தினருக்கு எடுத்துரையுங்கள்

*அன்பிற்குரிய ரொட்டேரியன்கள் மற்றும் ரோட்டரி குடும்பத்தினர்களே!*

அமெரிக்காவில் இன்னொரு கோடைக்காலம் நிறைவடைகிறது மலோனி குடும்பத்தைப் பொறுத்தவரை, ஒவ்வொரு கோடைக்காலமும் ஒரேவிதமாகதான் முடிவடையும்: ஆண்டுதோறும் நடைபெறும் சோளப்பொரி நாள் திருவிழாவுக்காக நான் என்னுடைய சொந்த ஊரான ரிட்ஜ்வே, இல்லினாய்ஸுக்குத் திரும்புவேன், சேவைசெய்யும் பெருமையைப் பெறுவேன்.

பருவம் எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனிப்பட்ட பண்பாடுகள் உண்டு. உங்களுக்கு ஒரு புதிய பண்பாட்டைப் பரிந்துரைக்க நான் விரும்புகிறேன்: உங்கள் குடும்பத்தை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்த ஒரு வாய்ப்பைக் கண்டறியுங்கள். எங்கள் குடும்பத்தின் பண்பாடுகளில் ஒன்று, எங்கள் மகள்கள், பேரன்களை ரோட்டரி பன்னாட்டு மாநாட்டுக்கு அழைத்துச்செல்வது. ஹோனலூலுவில் நடைபெறவுள்ள 2020 மாநாடு, உங்களுடைய குழந்தைகள், பேரப்பிள்ளைகளுக்கு ரோட்டரியின் பன்னாட்டுத்தன்மையை அறிமுகப்படுத்த ஒரு சிறந்த வழியாகும். எல்லாரும் மகிழ்ந்து அனுபவிப்பதற்காக நாங்கள் பல குடும்பம் சார்ந்த நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுவருகிறோம்.

குடும்ப உறுப்பினர்களை ஒரு ரோட்டரி சேவைத் திட்டத்துக்கு அல்லது நிதிதிரட்டல் நிகழ்வொன்றுக்கு அழைத்து வர எந்த நேரமும் நல்ல நேரம்தான். அதனால்தான், ரோட்டரி நிகழ்வுகளைக் குடும்ப உறுப்புனர்களை வரவேற்பவையாக மாற்றுவதை இந்த ஆண்டு என்னுடைய முதன்மை முக்கியத்துவங்களில் ஒன்றாக எடுத்துக்கொண்டுள்ளேன்.

பல நேரங்களில், ரோட்டரி ஒரு துடிப்பான 21ம் நூற்றாண்டுச் சேவை அமைப்பாகத் தொடர்வதற்கு நாம் ஈர்க்கவேண்டிய இளம் தொழில்முறை வல்லுனர்கள் மிகப்பெரிய குடும்பப் பொறுப்புடன் உள்ளார்கள். நம்முடைய நிகழ்வுகளை மாலைகளிலும் வார இறுதிகளிலும் வைத்து, அதற்கு அவர்களுடைய குழந்தைகளை வரவேற்காமல் இருந்தால், இந்தச் சாத்தியமுள்ள இளம் உறுப்பினர்களை அவர்களுடைய குடும்பங்களிலிருந்து பிரித்துவைப்பவர்கள் ஆவோம், அதை நாம் செய்யவேண்டாமே.

நெடுநாட்களாக, பல ரோட்டரி நிகழ்வுகளில் நாம் குழந்தைகளை அனுமதிக்கவில்லை, துணைவர்களைக் கூட அனுமதிக்கவில்லை. இவையெல்லாம் வீணடிக் கப்பட்ட வாய்ப்புகள் இல்லையா! நாம் ரோட்டரியை வளர்க்கப்போகிறோம். அடுத்த தலைமுறை நம்முடைய பணியில் முழுமையாக ஈடுபடுவதை உறுதி செய்யப்போகிறோம் என்றால், ரோட்டரியின் பரிசை இளம் தலைமுறையினருக்கு வழங்குகிற ஒவ்வொரு வாய்ப்பையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆகவே, நம் கதவுகளை ஒரு கலகலப்பான வழியில் திறப்போம். உங்களுடைய கூட்டங்களில் சிலவற்றைக் குடும்பத்தினருக்கு ஆதரவான நேரங்களில் நடத்தலாம்.

குழந்தைகளை ரோட்டரி நிகழ்ச்சிகளுக்கு அழைத்து வருவது வெறும் மகிழ்ச்சிக்காக இல்லை; அது அவர்களுக்கு உலகை வெளிக்காட்டுகிறது! இந்த ஆண்டை உங்கள் குடும்பத்தினருக்கு ஒரு மறக்க இயலாத ஆண்டாக்குங்கள். ரோட்டரி உலகுடன் இணைகிற இந்நேரத்தில் எப்போதும் விரிவடைந்துவரும் ரோட்டரி குடும்பத்துக்கும் இதை ஒரு மறக்க இயலாத ஆண்டாக்குங்கள்.

**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# 12 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெறுகிற ஒரு திட்டம்

நார்டிக் நாடுகளைப்போன்ற வளர்ந்த நாடுகள், தங்களுடைய முதியவர்களுடைய மருத்துவ, ஊட்டச்சத்து, வசிப்பிடத் தேவைகளை முழுமையாகக் கவனித்துக் கொள்கின்றன. அதேசமயம், இந்தியாவைப்போன்ற நாடுகளில், முதியவர்கள் கண்ணியமாக வாழ உதவுவது பெரிய சவாலாகும். இந்தியாவில் பல ரோட்டரி சங்கங்கள் முதியவர்களுக்குப் பலவிதங்களில் உதவிவருகின்றன, அதன்மூலம் தங்களால் இயன்ற பணியைச் செய்கின்றன. மேலும் மகிழ்ச்சியளிக்கிற ஒரு விஷயம், முதியோர் இல்லங்களுக்குச் செல்வது, அங்குள்ளவர்களுக்கு இசை, நடனம், விளையாட்டுகளின் மூலம் பொழுதுபோக்களிப்பது, அவர்களை வெளியில் மகிழ்ச்சியாக அழைத்துச் செல்வது போன்றவற்றில் பல ரோடராக்டர்கள் சிறந்துவிளங்குகிறார்கள். ஆனால், இவ்விதத்தில் முதலாவதாகத் திகழும் ஒரு திட்டம், 12 ஆண்டுகளுக்கு முன்னால் சோலாப்பூர் ரோட்டரி சங்கத்தால் தொடங்கப்பட்டது, பேரார்வம், அர்ப்பணிப்புணர்வு, கவனமான திட்டமிடல், செயல்படுதல், அனைத்துக்கும் மேலாக, நீடித்து நிற்றல் என அனைத்திலும் இது சிறந்துவிளங்குகிறது, ரோட்டரி அறக்கட்டளையின் அறங்காவலர்கள் இதைத் தொடர்ந்து சிறப்பாகச் செய்து வருகிறார்கள். அந்தத் திட்டம்: 100 முதியவர்களுக்கு நாள்தோறும் உணவு வழங்கும் சேவை. இந்த 12 ஆண்டு களில், மழையானாலும் சரி, வெயிலானாலும் சரி, ஊரடங்கு உத்தரவானாலும் சரி, மதக் கலவரமானாலும் சரி, பலன் பெறவேண்டிய ஒருவர் மருத்துவமனையில் இருந்தாலும் சரி, அன்னபூர்ணா என்ற இந்தத் திட்டத்தில் ஒரு நாள்கூட, ஒருவருக்குக்கூட உணவு வழங்குதல் நிறுத்தப்படவில்லை.

நீங்களே கணக்கிட்டுப்பார்த்து வியந்துகொள்ளுங்கள்: ஒரே ஒரு சங்கம், 4,380 நாட்கள் (அல்லது 12 ஆண்டுகள்) 4,38,000 உணவுப்பொட்டலங்களை ரூ 1.44 கோடி ரூபாய் செலவில் வழங்கியிருக்கிறது. இந்தத் திட்டத்தில் எந்தப் பன்னாட்டு நல்கையும் இல்லை. இந்தப் பணம் முழுவதையும் சோலாப்பூர், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள சமூகத்தினருடைய தாராளமான நன்கொடைகளின் மூலம் திரட்டியிருக்கிறது RC சோலாப்பூர். இந்தத் திட்டத்தின்மூலம் பலன்பெறும் முதியவர்கள் எல்லாரும் 65வயதுக்கு மேற்பட்டவர்கள், முன்பு சொந்தக்காலில் கண்ணியமாக வாழ்ந்தவர்கள், ஆனால் இப்போது, அவர்களுக்கு நாள்தோறும் ஆரோக்கியமான உணவு கிடைப்பதை உறுதிசெய்ய யாருமில்லை, அப்படிப்பட்டவர்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்துப் புதிதாகச் சமைக்கப்பட்ட, சூடான, சுவையான, ஊட்டச்ச த்துமிக்க உணவை வழங்குகிறது இத்திட்டம். ஒவ்வொரு நாளும், அவர்களுடைய வீட்டுக்கு அருகில் உள்ள ஓர் இடத்துக்கு இந்த டிஃபன் காரியர் அனுப்பப்படுகிறது. இவற்றைக் கொண்டுவரும் ஆட்டோ ரிக்ஷா நகரில் 14கிமீ பயணம் செய்து 9 இடங்களில் இவற்றை வழங்குகிறது.

இந்திய ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள் மிக நல்ல திட்டங்களைத் தொடங்குவதும், அடுத்த ஆண்டு வேறு தலைவர்கள் சங்கத்துக்குப் பொறுப்பேற்கும் போது இத்திட்டங்கள் தொடராமல் நின்றுபோவதும் வழக்கம்தான், இப்படிப் பல கதைகளை ரோட்டரி சங்கத்தினர் கேட்டுள்ளார்கள். புதிய தலைவர் தன்னுடைய சொந்த யோசனைகளைக் கொண்டுவருவது இயல்புதான், ஆனால், சமூகத்தின் தொடர்ச்சியான தேவைகளை நிறைவுசெய்யவேண்டுமானால், தொடர்ச்சியான திட்டங்கள் தேவை. இதைச் சாத்தியமாக்கவேண்டுமென்றால், அடுத்தடுத்த சங்கத் தலைவர்கள் அச்சங்கத்தின் அடையாளமான அல்லது பழைய திட்டமொன்றுக்கு உரிமையேற்கவேண்டும். சோலாப்பூரில் பழைய தலைவர்களோடு, பழைய மாவட்ட ஆளுநர்கள்கூட இந்தத் திட்டத்தை எண்ணிப் பெருமைப்படுவதை நான் கண்டேன். ஒவ்வொரு தலைவரும், அந்த ஆண்டுமுழுவதும் அன்னபூர்ணாவுக்காகப் பணம் திரட்டியதுடன், அடுத்து வரும் தலைவருக்காக மிகுதித்தொகையையும் சேர்த்து வைத்தார்கள் என்று அன்னபூர்ணா குழு உறுப்பினர்கள் என்னிடம் திரும்பத்திரும்பச் சொன்னார்கள்.

சோலாப்பூரைச் சேர்ந்த இந்த ரோட்டரியன்கள் தங்களுக்கு மிகவும் விருப்பமான ஒரு திட்டத்தைப் பற்றிச் சொல்லிப் பெருமைப்படுகிறார்கள், அந்த உணர்வை அனுபவிக்கவேண்டுமானால், இந்த இதழுடைய அட்டைப்படக்கட்டுரையை வாசியுங்கள். ஒவ்வோராண்டும், ஒவ்வொரு நாளும் 100 முதிய நண்பர்களுக்குப் புதிய, சுவையான, தரமான உணவு சென்றுசேர்வதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அவர்கள் அனுபவித்த வலிகளையும் தெரிந்து கொள்ளுங்கள்.

ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

# RI இயக்குனர்



## வெள்ள மீட்பு நிவாரணப் பணிகளுக்கு தோள் கொடுங்கள்!

இந்தியா நீர்வளம் மிகுந்த நாடு என்பதால் நாட்டின் பொருளாதாரம் பருவநிலையுடன் தொடர்புடைய தாகவே உள்ளது. சில சமயங்களில் பருவநிலையின் சீற்றத்தால் அதிக மழை, வெள்ளம் போன்றவற்றால் இயற்கைப் பேரழிவு ஏற்பட்டுவிடும். இந்த ஆண்டு பருவமழையால் கர்நாடகா, கேரளம், மகாராஷ்டிரம், பிகார் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் வெள்ளத்தின் சீற்றத்தால் வீடு, பள்ளிகளுக்குச் சேதம், பாலங்கள் இடிந்துள்ளன, சாலைகள் துண்டிக்கப் பட்டுள்ளன. மேலும் வெள்ள நீரில் பயிர்கள் மூழ்கி உள்ளன. இதனால் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இது போன்ற சமயங்களில் ரோட்டரி இயக்கத்தினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்குவதற்கு இடம், உணவு, துணிமணிகள், மருந்துப் பொருள்களை நிவாரணமாக வழங்குவது வழக்கம். இந்த ஆண்டும் ரோட்டரி சங்கங்களும், ரோட்டரி மாவட்ட நிர்வாகமும் இணைந்து துரித கதியில் நிவாரணங்களை வழங்கியதை பாராட்டுகிறேன்.

வெள்ளம் முழுவதுமாக வடியத் தொடங்கியதும் நாம் மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபடலாம். இயல்புநிலை திரும்பும் வரை நாம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பக்கபலமாக இருப்போம். மழை, வெள்ளத்தால் உங்கள் பகுதியில் பள்ளிகள் ஏதாவது பாதிக்கப்பட்டிருந்தால் அவற்றை தத்தெடுத்து அவற்றை புனரமைப்பு மீண்டும் மகிழ்ச்சிப் பள்ளிகளாக உருவாக்குவோம்.

உலகில் மாற்றத்தை ஏற்படுத்த கல்வி கற்பதுதான் சிறந்த கருவியாகும் என்று மறைந்த நெல்சன் மண்டேலா கூறியதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இளைஞர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் திறவு கோல் கல்வி. கல்விப்பணியில் குறிப்பாக எழுத்தறிவித்தல் பணியில் நமது ரோட்டரி இயக்கத்தினர் செய்துவரும் சேவை அளப்பறியது.

இன்றைய சூழ்நிலையில் பெண் கல்விக்கு நாம் முக்கியத்துவம் அளிப்பது அவசியமானது. ஒரு பெண்ணுக்கு நல்ல, தரமான கல்வியைத் தருவதுதான் அவருக்கு நாம் அணிவிக்கும் சிறந்த அணிகலனாகும். அவர்களுக்கு கல்விகற்றுக் கொடுத்தால் அதனால் அவர்கள் பலன் பெறுவது மட்டுமல்லாமல், அவர்கள் குடும்பமே சிறந்து விளங்க வழியேற்படும். எனவே அடுத்து வரும் ஆண்டுகளில் நமது நாடு 100 சதவீத எழுத்தறிவு பெறுவதை உறுதிசெய்ய நாம் அனைவரும் நமது முயற்சிகளை இரட்டிப்பாக்குவோம்.

புதிய இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற இன்றைய இளைஞர்களின் கனவை நனவாக்குவோம்.



Dr பரத் பாண்ட்யா
RI இயக்குனர், Zones 4 and 7

# களின் செய்திகள்



## எழுத்தறிவித்தல், தரமான கல்வி – இரண்டு தாரக மந்திரங்கள்

ரோட்டரி நண்பர்களே,

மனித இனம் வளர்ச்சியும் வெற்றியும் பெற வேண்டுமானால் எழுத்தறிவு முக்கியம்.

உலகம் முழுவதும் 6 கோடியே 70 லட்சம் குழந்தைகள் கல்வி கற்பதற்கான வாய்ப்பே இல்லாமல் இருக்கின்றனர். மேலும் 15 வயதுக்கு மேற்பட்ட 77.5 கோடி பேர் எழுத்தறிவு இல்லாதவர்களாக உள்ளனர். ரோட்டரி இயக்கத்தால் இதை புரிந்து கொள்ள முடிகிறது. வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள குழந்தைகளுக்குக் கல்வி, தொழில் பயிற்சி, ஆசிரியர்களுக்குப் பயிற்சி, மாணவர்களுக்கு உணவு வழங்குதல், குறைந்த விலையில் புத்தகங்கள் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த ரோட்டரி உறுப்பினர்கள் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. நமது குறிக்கோள் ஏழைகளுக்கு எழுத்தறிவு, கல்வி வசதி அளித்து, ஆண்-பெண் இடையே உள்ள வேறுபாடுகளைக் களைந்து எழுத்தறிவு இயக்கத்தை விரிவுபடுத்தி சமூகத்தை பலப்படுத்துவது தான்!

**பெண் கல்வி:** சமூகத்திற்கு அதிகாரம் அளிக்க; வறுமையை ஒழிக்க வேண்டுமானால், மக்களுக்கு அடிப்படை சுகாதாரத்தை அளிக்க வேண்டுமானால் மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்த, குழந்தைகள் இறப்பு விகிதத்தையும் தாய்மார்கள் இறப்பையும் தடுக்க பெண் கல்வி தான் ஒரே வழி.

RILM: TEACH

இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள் ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் அனைவருக்கும் எழுத்தறிவித்தல், திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ரோட்டரி இயக்கம் அனைவருக்கும் கல்வி அளிப்பதை டீச் என்னும் ஒருங்கிணைந்த திட்டம் மூலம் செயல்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**ஆஷா கிரன்:** வரும் செப்டம்பர் மாதத்தில் நாம், ஆஷா கிரன் திட்டத்தின் கீழ் பள்ளிக்குச்செல்லாத குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதை உறுதிமொழியாக ஏற்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் நலிவுற்ற சமூகத்தைச் சேர்ந்த இதுவரை பள்ளி செல்லாத குழந்தைகளையும், பள்ளிக்குச் சென்றுவிட்டு பாதியில் நின்றவர்களையும், பள்ளிக்கு சரிவர செல்லாத குழந்தைகளையும் கண்டுபிடித்து அவர்களுக்கு மறுபயிற்சி அளித்து கல்வி கற்க வைக்க வேண்டும். அதாவது இவர்கள் அனைவரும் அரசு உதவிபெறும் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வி கற்பதற்கான வசதிகளைச் செய்து தர வேண்டும். இதற்கு ஒரு குழந்தைக்கு ஆண்டுக்கு ரூ.2,500 வரை செலவாகலாம்.

ஒரு குழந்தை, ஒரு ஆசிரியர், ஒரு புத்தகம், ஒரு பேனா திட்டம் உலகில் மாற்றத்தை கொண்டுவரும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.



**கமல் சங்வி**

RI இயக்குனர், Zones 5 and 6


### Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website :www.rotarynewsonline.org

## District Wise TRF Contributions as on July 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 872 | 0 | 0 | 29 | 901 |
| 2982 | 1,428 | 1,179 | 0 | 0 | 2,608 |
| 3000 | 11,002 | 0 | 3,703 | 0 | 14,705 |
| 3011 | 754 | 0 | 2,065 | 0 | 2,819 |
| 3012 | 72,777 | 0 | 0 | 0 | 72,777 |
| 3020 | 2,416 | 3,080 | 0 | 2,029 | 7,525 |
| 3030 | 529 | 0 | 1,213 | 0 | 1,742 |
| 3040 | 475 | 0 | 5,471 | 0 | 5,946 |
| 3053 | 3,191 | 32 | 0 | 0 | 3,223 |
| 3054 | 1,319 | 0 | 25,681 | 0 | 27,000 |
| 3060 | 1,547 | 29 | 4,200 | 0 | 5,776 |
| 3070 | 9,350 | 25 | 4,200 | 0 | 13,575 |
| 3080 | 9,546 | 0 | 150 | 1,013 | 10,709 |
| 3090 | 29 | 0 | 0 | 0 | 29 |
| 3100 | 11,210 | 0 | 0 | 0 | 11,210 |
| 3110 | 2,029 | 401 | 0 | 0 | 2,430 |
| 3120 | 200 | 0 | 0 | 0 | 200 |
| 3131 | 4,845 | 0 | 11,277 | 0 | 16,122 |
| 3132 | 1,155 | 0 | 0 | 0 | 1,155 |
| 3141 | 87,505 | 1,850 | 2,380 | 15,942 | 107,676 |
| 3142 | 9,682 | 0 | 0 | 0 | 9,682 |
| 3150 | 8,302 | 0 | 11,667 | 1,014 | 20,984 |
| 3160 | 442 | 0 | 0 | 0 | 442 |
| 3170 | 9,561 | 286 | (1,300) | 0 | 8,547 |
| 3181 | 1,246 | 0 | 0 | 0 | 1,246 |
| 3182 | 2,039 | 0 | 0 | 0 | 2,039 |
| 3190 | 7,177 | 101 | 0 | 0 | 7,278 |
| 3201 | 24,778 | 0 | 5,088 | 0 | 29,866 |
| 3202 | 16,688 | 1,891 | 0 | 1,000 | 19,579 |
| 3211 | 466 | 0 | 5,138 | 290 | 5,894 |
| 3212 | 109 | 58 | 1,050 | 0 | 1,217 |
| 3231 | 29 | 1 | 606 | 0 | 636 |
| 3232 | 20,239 | 2,331 | 14,286 | 0 | 36,856 |
| 3240 | 3,288 | 0 | 32,010 | 0 | 35,297 |
| 3250 | 3,525 | 0 | 1,100 | 0 | 4,625 |
| 3261 | 505 | 0 | 304 | 0 | 809 |
| 3262 | 2,457 | 1,014 | 507 | 0 | 3,978 |
| 3291 | 18,136 | 0 | 0 | 0 | 18,136 |
| **India Total** | **350,848** | **12,279** | **130,796** | **21,318** | **515,240** |
| 3220 Sri Lanka | 5,210 | 0 | 1,150 | 0 | 6,360 |
| 3271 Pakistan | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3272 Pakistan | 1,392 | 0 | 0 | 0 | 1,392 |
| 3281 Bangladesh | 12,690 | 0 | 11,500 | 1,000 | 25,190 |
| 3282 Bangladesh | 8,312 | 0 | 0 | 0 | 8,312 |
| 3292 Nepal | 36,822 | 5,150 | 52,375 | 0 | 94,348 |
| **South Asia Total** | **415,273** | **17,429** | **195,821** | **22,318** | **650,840** |
| **World Total** | **9,229,337** | **2,326,124** | **1,424,280** | **2,114,338** | **15,094,079** |

Source: RI South Asia Office


WHERE WILL ROTARY GLOBAL REWARDS TAKE YOU?

THE MEMBER BENEFIT PROGRAMME THAT OPENS UP A WORLD OF OPPORTUNITIES.

Rotary

SEE MORE AT ROTARY.ORG/GLOBALREWARDS

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

# GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.

KshetraGuru® PROPERTY

SwarnaGuru® GOLD

FDGuru® FIXED DEPOSIT

VyaparGuru® STOCK BROKING

ShuruGuru™ IPO

YojanaGuru® GOVERNMENT BONDS

NidhiGuru™ MUTUAL FUND

AmulyaGuru™ PRECIOUS STONES



Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in

# 2021-2022ஆம் ஆண்டில் ரோட்டரி தலைவராகிறார்

# சேகர் மேத்தா



RC கொல்கத்தா மகாநகரைச் சேர்ந்த (RID 3291) சேகர் மேத்தா. 2021–2022 ஆம் ஆண்டுக்கான ரோட்டரி தலைவர் பதவிக்கான வேட்பாளராகத் தேர்வுக் குழுவினரால் தெரிவுசெய்யப் பட்டுள்ளார். வேறு எவரும் போட்டியிட முன்வராத நிலையில் அக்டோபர் 1-ம் தேதி சேகர் மேத்தா, தலைவர் பதவிக்கான அதிகாரப்பூர்வ வேட்பாளராக அறிவிக்கப்படுவார்.

தற்போது ரோட்டரி உறுப்பினர் களின் எண்ணிக்கை எதிர்பார்த்த அளவு இல்லை என்பதை ஒப்புக்கொள்ளும் சேகர் மேத்தா, இது ஒரு சவால் நிறைந்த பணியாகும் என்று குறிப்பிட் டுள்ளதுடன், உறுப்பினர் சேர்க்கைக்கு ரோட்டரி முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பிராந்திய திட்டங்களில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இளம் ரோட்ராக்டர்களை ரோட்டரி சங்கத்தில் சேர்க்க வேண்டும், ரோட்டரி அமைப்பில் பெண்களுக்கு அதிக முன்னுரிமை அளிப்பதன் மூலம் உறுப்பினர் எண்ணிக்கையை ஆண்டுக்கு 5 சதவீதம் அதிகரிக்க முடியும் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

பரந்துபட்ட உலகில் அந்தந்த பகுதிக்கு ஏற்றவாறு புதுப்புது திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த முன் வர வேண்டும். இதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்று சேகர் மேத்தா குறிப்பிட்டார். உள்ளூர் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் போது அங்குள்ள சமூகத்தினரின் கலாசார நடைமுறைகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எல்லா இடத்திலும் ஒரே மாதிரியான தீர்வு என்பது சரிபட்டு வராது. ரோட்டரி தனது செயல்பாடுகளை புதிய எல்லைகளுக்கும், நாடுகளுக்கும் கொண்டு செல்லவேண்டும் என்பது எனது கனவாகும் என்றார்.

ரோட்டரியின் புதிய உத்திகளையும் செயல் திட்டங்களையும் வலுவாக ஆதரித்து வருபவர் மேத்தா. ரோட்டரி சங்கங்களின் புதிய செயல்திட்டங்களை ஊக்குவிக்க தயாராக இருப்பதாகக் கூறும் அவர், ரோட்டரியை மேலும் பலப்படுத்தி, மக்களிடம் அதற்கு இருக்கும் மதிப்பை மீண்டும் உறுதிசெய்வதே தமது லட்சியம் என்றும் கூறுகிறார்.

ரோட்டரி இயக்கம் மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு அரசு, கார்ப்பெரேட் நிறுவனங்களுடன் கூட்டுறவுடன் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். மேலும் ரோட்டரி கவனம் செலுத்தும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான தொழில்நுட்ப வசதிகள் கொண்ட நிறுவனங்களுடன் நட்புறவு வைத்து செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ரியல் எஸ்டேட் துறையில் சிறந்து விளங்கும் ஸ்கைலைன் நிறுவனத்தைத் தொடங்கி அதன் தலைவராக இருந்து வருகிறார் சேகர் மேத்தா. இது தவிர Operation Eyesight Universal (India) என்ற கனடாவை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் நிறுவனத்தின் இயக்குநராகவும் செயலாற்றி வருகிறார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஷெல்டர்பாக்ஸ் என்ற பேரிடர் மீட்பு அமைப்பின் டிரஸ்டியாகவும் சேகர் மேத்தா இருந்து வருகிறார். 2004-ஆம் ஆண்டு இந்தியப் பெருங்கடலில் சுனாமித் தாக்குதல் ஏற்பட்டு வீடுகளை இழந்தவர்களுக்கு 500 வீடுகள் கட்டிக் கொடுத்து மறுவாழ்வு அளித்ததில் மேத்தாவின் பங்கு முக்கியமானது.

தெற்காசியாவில் பல்வேறு மருத்துவ நலத் திட்டங்களைச் செயல் படுத்தி ரோட்டரி மூலம் 1500 பேர் இதய மாற்று அறுவைச்சிகிச்சை மூலம் மறுவாழ்வு பெறச் செய்தவர் மேத்தா. TEACH திட்டத்தின் மூலம் இந்தியா முழுவதும் பள்ளிகள் மூலம் எழுத்தறிவித்தல் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியவர்.

1984-ஆம் ஆண்டு முதல் ரோட்டரி உறுப்பினராக இருந்து வருகிறார் சேகர் மேத்தா. ரோட்டரி இயக்குநர், பல்வேறு குழுக்களின் உறுப்பினர், தலைவர், மண்டல ஒருங்கிணைப்பாளர், பயிற்சிதலைவர், ரோட்டரி அறக்கட்டளை ஆலோசனைக் குழு உறுப்பினர், மாவட்ட ஆளுநர் என பல பதவிகளை இவர் வகித்து வந்துள்ளார். ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா) தலைவராகவும் அவர் இருந்து வருகிறார்.

ரோட்டரியில் சிறந்த சேவைக்கான விருது, பாராட்டுப் பத்திரம் உள்ளிட்ட பல விருதுகளை மேத்தா பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சேகர் மேத்தா, அவரது மனைவி ராஷி ஆகிய இருவரும் பெரும் கொடையாளர்களாகவும் விளங்கி வருகின்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது.

The members of the Nominating Committee for the 2021–22 President of Rotary International are: Mikael Ahlberg, Ölands Södra, Sweden; Bernhard Baumgartner, Kitzbühel, Austria; Gerson Gonçalves, Londrina-Norte, Pr., Brazil; Serge Gouteyron, Valenciennes-Denain aérodrome, Nord, France; Mary Beth Growney Selene, Madison West Towne-Middleton, Wisconsin, USA; Allan O Jagger, Halifax, W Yorks., England; Masahiro Kuroda, Hachinohe South, Aomori, Japan; Hsiu-Ming (Frederick) Lin, Taipei Tungteh, Taiwan; Larry A Lunsford (secretary), Kansas City-Plaza, Missouri, USA; Anne L Matthews (chair), Columbia East, South Carolina, USA; Ekkehart Pandel, Bückeburg, Germany; P T Prabhakar, Madras Central, Tamil Nadu, India; José Antonio Salazar Cruz, Bogotá Occidente, Cund., Colombia; M K Panduranga Setty, Bangaluru, Karnataka, India; Steven A Snyder, Auburn, California, USA; Yoshimasa Watanabe, Kojima, Okayama, Japan; and SangKoo Yun, Sae Hanyang, Seoul, Republic of Korea.

© *rotary.org*

Picture by Rasheeda Bhagat

# 12 வருடங்களைக் கடந்த RC சோலாப்பூர் டிபன் உணவுத் திட்டம்

ரஷீதா பகத்



சோலாப்பூர் சங்கத்தினருடன் டிபன் திட்டப் பயனாளிகள்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு 2007 ஆம் ஆண்டில் RI மாவட்டம் 3132 சோலாப்பூர் ரோட்டரி சங்கத்தின் தலைவராக திரு.ராஜ் மினியர் தேர்ந்தெடுக்கப்பட்டார், இந்தச் சங்கம் மகாராஷ்டிரா மாநிலத்தின் மிகப்பழைமையான மற்றும் மிகப்பெரிய சங்கங்களில் ஒன்று, மேலும் கைத்தறி தயாரிப்புகள் மற்றும் பீடித் தொழிலுக்குப் பெயர்பெற்ற நகரத்தில் அமைந்துள்ளது, இவர் ஒரு சிறிய ஆனால் புதுவித திட்டப்பணியை யோசித்தார். சமயக்கல்வி படிக்கும் தனது மாணவர்களுக்காக இதேத் திட்டப்பணியை நடத்திய தனது குருவால் உத்வேகம் பெற்று, இந்த புதிய தலைவர் தன் சங்கத்திற்குப் பரிந்துரை செய்தார், தினமும் 25 முதியோர்களுக்கு உணவினை இலவசமாக வழங்குவது என்பதுதான் அத்திட்டம்.

இதை ஒரு வருடத்திற்கு செய்ய விரும்பினேன், ஆனால் எனது சங்க மேற்குழு நன்றாக ஆதரவு தெரிவித்ததால், இதை 100 பேருக்கு செய்வோம் என்று சொல்லி, ஆனால் ஒரு வருடத்திற்கு அல்ல குறைந்த பட்சம் மூன்று வருடத்திற்கு என்றனர், என்று சொல்லி புன்னகைத்து, பிறகு அன்னப்பூர்ணா என்ற இந்த இலவச உணவுத் திட்டப்பணியின் வியக்கத்தக்க கதையினை விளக்குகிறார் மினியர். இந்த ஆகஸ்டு 4-ஆம் தேதியுடன் இது 12 வருடத்தைக் கடந்து பயணிக்கிறது. இந்த 12 வருடங்களில், ஒரு நாளில் கூட எங்கள் 100 பயனாளிகளில் ஒருவருக்கு கூட இந்த டிபன் பாக்ஸை (புதிதாக தயாரித்த, சூடான மற்றும் சத்தான உணவு) வழங்கத் தவறியது இல்லை என்று அவர் குறிப்பிடுகிறார்.

இதை நீங்கள் கணக்கிட்டு பார்த்தால், தலைசுற்றும், அதனால் சங்கத் தலைவர் B S முந்தாதா உங்களுக்காகக் கணக்கிட்டுச் சொல்கிறார் - சுமார் 4,380 நாள்களுக்கு (அதாவது 12 வருடங்கள்) 4,38,000 டிபன் பாக்ஸ்களை ஒருநாள் கூட தவறாமல் வழங்கியுள்ளது, மேலும் இதற்காக ரூ.1.44 கோடி செலவழித்திருக்கிறது. சோலாப்பூரிலும் அதைத் தாண்டியும் உள்ள அந்த சமூகத்தின் தாராளமான நன்கொடைகள் மூலமாக RC சோலாப்பூர் ரோட்டரி சங்கம் அனைத்து நிதியினையும் திரட்டியுள்ளது.



### மழை, வெயில், கர்ஃப்யூ அனைத்தையும் தாண்டி

மேகங்கள் சூழ்ந்த ஒரு அழகான காலை வேளையில் இந்தத் திட்டப்பணிகளை பார்வையிடச் சென்றேன், இது சங்கத்தின் குழுவால் உன்னிப்பாக திட்டமிடப்பட்டு, அதன் முக்கிய உறுப்பினர்களால் திறன்பட செயல்படுத்தப்பட்டுள்ளது, இதில் அவர்களின் தனிப்பட்ட ஈடுபாடு தான் உங்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தும்.

யாருமற்ற அல்லது தனது குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்ட 65 வயதிற்கு மேல் உள்ள சுமார் 100 பயனாளிகளுக்கு அர்ப்பணிப்புமிக்க ஒரு ஆட்டோ ஓட்டுனர் ஜகதீஷ் ஹீராமத் உணவினைக் கொண்டு செல்கிறார். மொத்தம் 14 கிமீ தூரத்தில் உள்ள ஒன்பது நிறுத்தங்களில், அவர் என்னை முதல் நிறுத்தத்தில் கொண்டு சென்றார், அங்கே புதிதாக பேக் செய்யப்பட்ட உணவு டப்பாக்களை பயனாளிகள் குழுவுக்கு வழங்கினார், ஷோபா தீக்ஷித், ஆனந்த் ரெடேகர், பாலு ஜக்தர், ரத்னாபாய் மேலும் சிலரை சந்தித்தேன். அவர்கள் சுத்தமான ஆடைகள் அணிந்து முகம் நிறைய மலர்ச்சியுடன் குதூகலமாகவும் ஆரோக்கியமாகவும் காட்சியளித்தார்கள். திட்டப்பணி தலைவர் ஜயேஷ் பட்டேல் சுவாரஸ்யமான தகவல்களை வழங்கினார். உதாரணமாக, 2009 ஆம் ஆண்டு ஒருசில நாள்கள் சோலாப்பூரில் கர்ஃப்யூ இருந்த

சமயம், டிபன்களை டெலிவரி செய்ய ரோட்டரி அன்னப்பூர்ணா ஆட்டோ ஓடுவதற்கான அனுமதிப் பெற மாநகர காவல்துறை ஆணையரிடம் ரொட்டேரியன்கள் சிறப்பு அனுமதியைப் பெற்றனர்.

மற்றொரு கமிட்டி உறுப்பினரான சந்தீப் ஜாவேரி, ஆட்டோவில் ரோட்டரி அன்னப்பூர்ணா யோஜனா என்று தலைப்பை ஒட்டுவதற்கான அனுமதிப் பெற RTO-விடம் அவர்கள் போனபோது எப்படி அனுமதிப் பெற்றனர் என்று விளக்குகிறார். இது உடனடியாகக் கொடுக்கப்பட்டது. RTO எங்களிடம் இரசீதை கொடுத்தார், நாங்கள் பணத்தைத் தந்த போது மறுத்துவிட்டு, இது எங்களின் அற்புதமான திட்டப் பணிக்கு அவருடைய தனிப்பட்ட நன்கொடை என்று கூறினார்!

அதுமட்டுமல்ல, கடந்த வருடங்களில் இந்தத் திட்டம் உள்ளூர் செய்தி ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டது, சோலாப்பூர் மேயர், தனது கவுன்சிலர்களுக்குத் தீபாவளி பரிசு வாங்குவதற்கான நிதியை இரண்டாகப் பிரித்து, அன்னப்பூர்ணா முதியோர்களுக்காக தனியாக எடுத்து வைத்தார். மேலும் இதை அவர் ஒவ்வொரு தீபாவளிக்கும் செய்து கொண்டிருக்கிறார். ஒரு பயனாளி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது கூட அவருக்கான உணவு நிறுத்தப்படவில்லை, மருத்துவ மனையில் அவர் இருக்கும் வரை அங்கேயே போய் கொடுத்தோம்.

**தொடர்ச்சியான தரம்**

கிட்டத்தட்ட தொடக்கத் திலிருந்தே இந்தத் திட்டப்பணி ரொட்டேரியன்களின் கற்பனையை ஈர்த்தது. பயனாளிகளுக்கு அனுப் பப்படும் உணவு உயர்தரத்துடன் இருக்கவேண்டும் என்பதை ஆர்வத்துடன் பார்த்துக்கொள்கிறார்கள், மேலும் இதை உறுதிசெய்ய நுண்ணிய விவரத்தினைக் கூட கவனித்துக் கொள்கிறார்கள். ஒவ்வொருநாளும் இந்த ஆட்டோ, டிபன் பாக்ஸ்களைச் சேகரித்து, மற்றொரு குழு உறுப்பினரான குஷால் தெதியா சொந்தமாக நடத்தி வரும் பல சரக்கு கடையில் நிற்கும்.

தெதியா குத்துமதிப்பாக ஒன்று அல்லது இரண்டு டிபன் பாக்ஸ்களை எடுத்து இவற்றில் குறை எதுவும் இருக்கிறதா என சோதிப்பதற்காக எடையினை சரிபார்த்து, உணவின் ருசியை சோதிக்கிறார். சுயஉதவி குழு (SHG) பெண் உறுப்பினர்கள் ஒவ்வொருநாளும் சப்பாத்திகள், காய்கறிகள், சாதம் மற்றும் பருப்பு போன்றவை உட்பட உணவினை சமைக்கிறார்கள். பண்டிகை காலங்களில், இந்த பயனாளிகளுக்கு இனிப்பு பதார்த்தங்கள் கிடைக்கிறது. நவராத்திரி அல்லது இதர பண்டிகைகளின் போது, விரதம் யாராவது இருந்தால் அவர்களுக்குப் பழங்கள் வழங்கப்படுகிறது.

கடந்த 12 வருட காலத்தின் உணவு பட்டியல், ஏதேனும் புகார்கள் இருந்தால் அவற்றுடன் இதர விவரங்கள் உட்பட உன்னிப்பான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இரண்டடுக்கு டிபன் பாக்ஸ்கள் வழங்கப்படுகிறது. சிலசமயங்களில் ஒரு குறிப்புடன் டிபன் பாக்ஸ்கள் திரும்பி வரும்.

சந்திரிகா சவுகான் அவர்களின் உத்யோக் வாஹினி என்ற NGO தான் இந்த SHG-ஐ ஏற்பாடு செய்கிறது, அவர் கூறுகையில்: சிலநேரங்களில் அந்த குறிப்பில், நீங்கள் ஏன் குறைந்தபட்சம் வாரத்திற்கு ஒருமுறை அசைவம் போடக்கூடாது; அல்லது சாப்பாட்டை இன்னும் கொஞ்சம் எண்ணெய் அல்லது காரம் போன்றவற்றுடன் செய்யுங்கள் என்று இருக்கும். அதற்கு நாங்கள், இது




2



3








1. *ஆட்டோ ஓட்டுநர் ஜகதீஷ் ஹிரேமத் முதியோர்களுக்கு சோலாப்பூர் ரோட்டரியினர்களுடன் உணவு அளிக்கிறார்.*
2. PRIP *கல்யாண் பேனர்ஜி அன்னப்பூர்ணா உணவை சுவைக்கிறார்.*
3. PRIP *ராஜேந்திர சாபூ சங்கத்தினர் மற்றும் பயனாளிகளுடன் அலவலாவுகிறார்.*



வெறும் சைவ உணவு மட்டுமே, மருத்துவரிடம் ஆலோசனை பெறு பவர்கள் காரம், எண்ணெய் அளவுகள் மற்றும் இதர ஊட்டச்சத்துகளை பராமரிக்க வேண்டும், உங்கள் வயது பிரிவினருக்கு காரம் மற்றும் எண்ணெய் உணவு சேர்க்க கூடாது என்று சொல்கிறோம்!

ஆனால் ஒரு குறிப்பில் இரண்டு முறை, பருப்பு மற்றும் காய்கறிகள் தண்ணீராக இருப்பதாக தெரிவித்திருந்தது, ரொட்டேரியன்கள் உளவு வேலை செய்து, ஒரு மாமியாருக்கும் மருமகளுக்கும் இருந்த பாரம்பரிய பகை கண்டுபிடிக்கப் பட்டது. பயனாளிகள் இருப்பிடத்திற்கு மிகஅருகில் உணவு டெலிவரி செய்யப்படுகிறது என்பதால், தனது மாமியாருக்கான உணவினை மருமகள் தினமும் வாங்கிக் கொண்டிருந்தாள். பருப்பு மற்றும் காய்கறிகள் போன்றவற்றை எடுத்துவிட்டு தண்ணீரை பாக்ஸில் ஊற்றுவதை வழக்கமாக வைத்திருந்தாள். வயதான பெண்மணியின் வீட்டுக்கே டப்பாவை கொடுக்க நாங்கள் ஏற்பாடு செய்தோம், மேலும் உங்கள் மாமியாரை நீங்கள் கவனிக்காததால் நாங்கள் சாப்பாடு கொடுக்கிறோம், இது போல செய்யக்கூடாது என்று அந்த இளம்பெண்ணுக்கு ஆலோசனையும் வழங்கினோம், என்கிறார் தெதியா.

மற்றொரு மனதை நெகிழவைக்கும் ஒரு நிகழ்வினை ஜாவேரி கூறினார், ஒருநாள் ஒரு டிபன் பாக்ஸ் காணாமல் போய், அடுத்தநாள் கிடைத்தது. டிபன் வண்டியை நேரடியாகப் பின் தொடர்ந்து இந்த நிகழ்ச்சியை ஆராய்ந்தனர், ஒரு டிபன் பாக்ஸை டெலிவரி செய்ய ஒரு குறிப்பிட்ட வீட்டிற்கு ஆட்டோ டிரைவர் சென்றார், ஒரு குட்டிப்பெண் வந்து கூடையிலிருந்து ஒன்றை எடுத்துச் சென்றது. முதிய நோய்வாய்ப்பட்ட ஒரு பாட்டியிற்கு உணவு கட்டாயம் தேவையாக இருந்தது என்பதை அவளைப் பின்தொடர்ந்து நாங்கள் கண்டறிந்தோம். அதனால் அவரையும் எங்கள் பட்டியலில் இணைத்தோம்.

### சமூகத்தின் ஈடுபாடு

ரொட்டேரியன்களின் அர்ப்பணிப்பு தவிர வியக்கத்தக்க தகவல் என்ன வென்றால், ஒரு சங்கத்தலைவர்

போன பிறகு மற்றொரு தலைவர் அன்னப்பூர்ணா திட்டத்திற்கான பொறுப்பை எடுத்துக்கொண்டு 12 வருடங்களாக மிகத்திறன் பட இதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், ரொட்டேரியன் அல்லாத மற்றும் தனி மனிதர்களிடமிருந்து கிடைக்கும் உதவி தான் மனதுக்கு இதமான ஒன்றாக இருக்கிறது. ரொட்டேரியன்கள் கேட்டுக்கொண்டதால், உள்ளூர் ஸ்டீல் வியாபார சங்கத்தினர் உடனடியாக டிபன் பாக்ஸ்களை வழங்கினர். குஷால் தெதியா தனது கிளைன்ட் ஒருவர் வந்த நாளினை நினைவு கூறுகிறார், அப்போது சாப்பாட்டின் தரத்தை சோதித்துக்கொண்டிருந்தனர், மேலும் ரொட்டேரியன்களும் இந்த திட்டத்தினைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர், இரசீதினை கொடுக்கும் சமயத்தில் அவர் கூடுதலாக 4,765 ரூபாயை தந்தார், அப்போது இது ஒரு வருடத்திற்கான சாப்பாட்டுக்கான தொகை. அவர் ரூ.110-க்கு தான் மொத்தமாகவே பொருள் வாங்கினார், ஆனால் தன்னார்வத்துடன் கூடுதலாக ரூ.4,765 செலுத்தினார், என்று சொல்லி சிரிக்கிறார்.

தொடக்கத்தில் ஒரு சாப்பாட்டின் விலை ரூ.13. இப்போது விலை கூடி ரூ.29 ஆக உள்ளது, ஒரு சாப்பாட்டுக்கான வருடாந்திர தொகை ரூ.8,100.

இன்னொரு சமயம், மும்பையைச் சேர்ந்த ஒருவர் தூர்தர்ஷனில் இந்தத் திட்டப்பணி குறித்த ஒரு செய்தியை பார்த்துவிட்டு தன்னிச்சையாக ரூ.5,000-க்கான காசோலையை எழுதி, “அன்னபூர்ணா திட்டப்பணி, தலைவர், சோலாப்பூர் ரோட்டரி சங்கம், சோலாப்பூர்” என்ற முகவரிக்கு அஞ்சல் அனுப்பினார். எங்களுக்கு அந்த காசோலை வந்து சேர்ந்தது, என்று கிஷோர் சந்தன் சிரித்துக் கொண்டார், இவர் தான் அப்போது தலைவராக இருந்தார், மேலும், தபால்காரர் என்னைத் தேடி வந்து, இது உங்களுக்கானதா என்று என்னிடம் கேட்டார், நான் ஆமாம் என்று சொன்னேன்!.



அன்னப்பூர்ணா திட்டத்தின் சமையலறையில் உணவு தயாரிக்கும் பெண்கள்.

அன்னப்பூர்ணா திட்டப்பணி நிறைய சுவாரஸ்யமான செய்திகளை தன்னுள்ளே வைத்திருக்கிறது. ஒரு முறை ஒரு தொழிலதிபர் ரூ.5,000 நன்கொடையாக இந்தத் திட்டத்திற்கு வழங்கினார், உடனடியாக அவருக்கு ஒரு மிகப்பெரிய ஒப்பந்தம் கிடைத்தது, அதன்பிறகு அவர் சோலாப்பூரை விட்டுச் சென்றாலும் கூட கடந்த 10 வருடங்களாக ஒவ்வொரு மாதமும் ரூ.5,000-கான காசோலையை வழங்கிக்கொண்டே இருக்கிறார்.

ரோட்டரியை விட்டு விலகிய ஒரு ரொட்டேரியன் இப்போது அமெரிக்காவில் வசிக்கிறார், வழக்கமாக அன்னப்பூர்ணா திட்டத்திற்கு நிதியை திரட்டி இந்த சங்கத்திற்கு அனுப்புகிறார். மேலும், ஃபேஸ்புக்கில் ரோட்டரி அன்னப்பூர்ணா யோஜனா திட்ட பக்கத்தில் புகைப்படங்களுடன் பார்த்த பிறகு, அறிமுகம் அற்றவர்கள் கூட இந்தத் திட்டத்தை நடத்தும் சங்கத்தின் ரோட்டரி சமூகநல அறக்கட்டளையினுடைய வங்கி விவரங்களை கேட்டு, இணையவழி பரிவர்த்தனையை செய்கிறார்கள். நன்கொடையாளர்களுக்கு 80G-இன் கீழ் வரிவிலக்கு கிடைக்கிறது.

இத்திட்டம் ரொட்டேரியன்களின் மனதுக்குகந்த திட்டம் என்பதால் தொடர்ந்து உதவி செய்கிறார்கள்.





முந்தைய நாள், PDG ஜுபின் அமாரியா ரூ.8,100 தொகைக்கான ஒரு காசோலையை ஒரு குழு உறுப்பினரிடம் வழங்கியதை நான் பார்த்தேன். இந்த மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து PDGகளும் இந்த திட்டத்திற்கு உதவி செய்திருக்கிறார்கள். 2007 ஆம் ஆண்டு இந்த யோசனையை முதன் முதலில் மினியர் தெரிவித்தபோது, நீண்ட காலத்திற்கு 100 டிபன்களை நம்மால் வழங்க முடியுமா என்பது குறித்து கொஞ்சம் சந்தேகம் இருந்தது, ஆனால் காலப்போக்கில் கூடுதலான வலிமையை மட்டுமே சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள மகிழ்ச்சியடைகிறேன். ராஜேந்திர சாபூ மற்றும் கல்யாண் பானர்ஜி போன்ற முன்னாள் RI தலைவர்கள் இந்தத் திட்டப்பணியையும், உணவு சமைக்கப்படும் சமையலறையையும் பார்வையிட்டு, உணவினை ருசி பார்த்திருக்கிறார்கள், மேலும் அதனால் மிகவும் ஈர்க்கப் பட்டனர், என்று PDG ராஜீவ் பிரதன் நினைவுகூறுகிறார்.

## பயனாளிகள்

பயனாளிகளை எப்படி தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பது பற்றி கேட்கையில், சமூக பணிக்கான கல்லூரி முதல்வரின் உதவியை ஆரம்பத்தில் பெற்றதாக மினியர் சொல்கிறார். குறைந்தபட்ச வயது 65, அவர்களைப் பார்த்துக்கொள்ள யாரும் இருக்ககூடாது, பயனாளிகள் பிச்சைக்காரர்களாக இருக்ககூடாது, ஆனால் தங்களின் வாழ் வாதாரத்திற்கு முன்னாடி பணிசெய்து ஆனால் வாழ்வை நடத்த தொடர்ந்து வேலை செய்யமுடியாதவராக இருக்கவேண்டும் போன்ற எங்கள் வரம்புகளின் அடிப்படையில் மாணவர்கள் ஒரு விரிவான சர்வேயை நடத்தினர்.

இந்தக் கல்லூரி 400 பெயர்களை தந்தது; நாங்கள் அந்த நபர்களை வகைபடுத்தினோம்; ரொட்டேரியன்கள் நேரடியாக சென்று அனைவரையும் நேர்காணல் செய்து, மிகவும் வறுமையில் இருக்கும் 100 பேர்களை தேர்ந்தெடுத்தோம், என்று கூறுகிறார்.

கடந்த வருடங்களில், சுமார் 27-28 பயனாளிகள் இறந்துவிட்டார்கள், சங்கத்தின் காத்திருப்பு பட்டியலில் இருந்து புதிய ஆட்கள் சேர்க்கப் பட்டுள்ளனர், இதனால் 100 என்ற எண்ணிக்கையை தொடர்ந்து தக்கவைக்க முடியும்.

நிறைய சங்கங்கள் ஒரு சங்கத்தின் தலைவர் மற்றும் இதர அதிகாரிகள் மாறிய பிறகு ஒரு திட்டப்பணியை தொடர்ந்து நடத்த முடியாமல் தவிக்கிறார்கள், ஆனால் இந்தத் திட்டம் மட்டும் எப்படி 12 ஆண்டு களாக நடக்கிறது, இதற்கு பின் உள்ள இரகசியத்தை குழு உறுப்பினர்களிடம் கேட்டேன். ரொட்டேரியன்கள் சிரிக்கிறார்கள் மற்றும் சந்தன், உண்மையைச் சொல்வதென்றால், புதிய மற்றும் இப்போதைய தலைவர் இந்த வருடத்திற்கு தேவையான பணத்தையும் மீறி அதிகமான நிதியை சேமிப்பார்கள், அதன்மூலம் அவர் பதவி விலகும்போது அடுத்தத் தலைவருக்கு கூடுதலான நிதி இருக்கும்படி ஒரு சூழலை அமைத்து விட்டுச் செல்கிறார், என்று கூறுகிறார்.

## சுய உதவிக்குழு

ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தம் ஒரு உள்ளூர் உணவு விடுதியை நடத்திக்கொண்டிருக்கும் ஒரு பெண்மணியிடம் வழங்கப்பட்டது, அவர் டெலிவரியையும் சேர்த்து ரூ.13-க்கு செய்ய ஒப்புக்கொண்டார்.



ஆனால் ஒரு வருடம் கழித்து தொடர்ந்து நடத்த முடியவில்லை என்று அவர் ரொட்டேரியன்களிடம் கூறினார், அதனால் அவர்கள் சந்திரிக்காவை அணுகினார்கள். அது 11 வருடங்களுக்கு முன்பு; ஆர்வக்கோளாறில் சரியென்று சொன்னேன், ஆனால் பிறகு பதற்றமடைந்தேன். ரொட்டேரியன் கேட்டுக் கொண்ட குறிப்பிட்ட தரக் கட்டுப்பாட்டுடன் 100 பேருக்கான உணவைச் சமைப்பது என்பது சாதாரணமான விஷயமில்லை, என்று அவர் சொல்கிறார். ஒரு சமையல் கலை நிபுணரை பணியில் அமர்த்தினார், இந்தப் பெண்மணி அவரைக் கழுகு போல கண்காணித்தார், எவ்வளவு தண்ணீர் மற்றும் அவர் போடும் காரம், பதார்த்தங்களின் எடை

# நாங்கள் கணவன்மார்களை இரண்டு நாள் அடித்து துவைத்திருக்கிறோம்!



உத்யோக் வர்தினி நிறுவனர் சந்திரிகா சவுகான் தன் குழுவுடன்.

நீங்கள் SHG உறுப்பினர்கள் உணவு சமைக்கும் நல்ல சுத்தமான சமையலறைக்கு செல்லும் போது பெண்கள் அதிகாரம் பெறுவதற்காக, அன்னபூர்ணா போன்ற திட்டத்தால் ஏற்படக்கூடிய நேர்மறைத் தாக்கம் தெளிவாகத் தெரியும். சந்திரிகா சவுகான் அவர்கள் உத்யோக் வர்தினி என்ற NGO-ஐ நடத்தி வருகிறார், இதில் சுமார் 8,000 பணியாளர்கள் இருக்கிறார்கள், அவர்களின் பெண் உறுப்பினர்கள் உணவு மற்றும் தையல் என்ற இரண்டு பிரிவுகளில் பணியாற்றுகிறார்கள். ஒரு பெண் பயங்கரமான மன உளைச்சலில் இருந்தால், அவளின் மனம் புதிய விஷயம் எதையும் கற்றுக்கொள்ள விடாது என்பதை நான் கண்டறிந்தேன். பெண்ணுக்கு ஏற்கனவே இரண்டு திறன்கள் தெரியும்-சமைப்பது மற்றும் தைப்பது... அவளுக்கு தையலில் ஏதோ கொஞ்சம் தெரியும். அதனால் நாங்கள் அவர்களுக்கு பல ரகங்களும் தரத்தையும் கற்றுக்கொடுக்கிறோம்.

ஒவ்வொரு பெண்ணும் ஒரு மாதத்திற்கு சுமார் 7,000 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள், மேலும் உடைகளும் குழந்தையின் படிப்பிற்கு 400 ரூபாயும் வழங்கப்படுகிறது. பெரும்பாலான கணவன்மார்கள் வேலையில்லாமலோ அல்லது குடிகாரர்களாகவோ இருப்பார்கள். அந்த குடும்பமே அவளோட சம்பாத்தியத்தில் தான் ஓடும். அதனால் பொதுவாக மனைவி துன்புறுத்தப்படுகிறார்களா என்று சந்திரிக்காவிடம் கேட்டேன். ஆமாம், ஆனால் இப்போது வெகுவாக குறைந்துள்ளது. ஒன்று, அந்தப் பெண் இப்போது பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்கிறாள்; இரண்டு அந்த மாதிரி ஆட்களில் சிலரை அடித்து துவைத்திருக்கிறோம், என்று நேரடியாகவே அவர் சொல்கிறார்.

என்னுடைய சந்தேகப் பார்வையை பார்த்து சிரித்துக் கொண்டே சொல்கிறார்: உண்மை தான் மேடம், சில சம்பவங்களில், தன் மனைவியை அடிக்கும் வீடுகளுக்கு நானே சென்றிருக்கிறேன். மேலும் ஆறு பெண்களுடன் சென்று, முதலில் நல்லவிதமாக பேசி எனது மருமகன் என்று அவனைக் கூப்பிடுவேன். பிறகு அவனை எச்சரிக்கை செய்வேன், இந்த பெண் என் மகள். நீ மட்டும் அவளை அடித்தால், உன்னைத் தொலைத்து கட்டிவிடுவேன். சில ஆண்களை அடித்து துவைத்திருக்கிறோம், இப்போது மனைவிமார்களை கணவன்கள் அடித்தால் நாங்கள் சும்மா இருக்கமாட்டோம் என்ற செய்தி பரவியுள்ளது என்று சொல்கிறார் இந்த துணிச்சல்மிக்க பெண்மணி.

அதன் பிறகு சமைக்கப்படுவது போன்றவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தேன், பிறகு நாங்கள் சாதித்தோம்!

மேலும் பெருமையுடன், இப்போது 11 வருடங்கள் கழித்து 15 உறுப்பினர்களுடன் இந்த SHG, தொழிற்சாலை, அலுவலக மற்றும் இதர பணியாளர்கள் போன்றோருக்கு தினமும் சுமார் 2,000 பேருக்கான உணவினை தயார் செய்கிறது. மேலும் அவர்கள் மசாலாக்கள், அப்பளம், ஊறுகாய் போன்றவற்றையும் தயாரித்து விற்பனையும் செய்கிறார்கள்.

இந்த பெண்மணிகளின் வாழ்வாதாரத்தை அதிகப்படுத்தியதற்காக ரோட்டரிக்கு சந்திரிக்கா நன்றி தெரிவித்துள்ளார்; இந்த சாதனையைக் கொண்டாட வெளியிடப்பட்ட தங்களின் கை இதழில், இந்த நிலைக்கு அவர்கள் முன்னேறியதற்கு ரோட்டரி தான் காரணம் என்று குறிப்பிட்டுள்ளனர், என்று மேலும் தெரிவிக்கிறார் படேல்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் முதியவர்கள் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகிறார்கள்; பேருந்துகளை வாடகைக்கு எடுத்து எங்கள் மனைவிமார்கள் மற்றும் குழந்தைகள் உடன் சேர்ந்து, முக்கியமாக புனித தலங்களுக்கு அழைத்துச் செல்கிறோம். இதை நீங்கள் நம்பவே மாட்டீர்கள்; ஆனால் பந்தர்பூர் போன்ற புனித தலங்களில் யாத்ரீகர்கள் நீண்ட வரிசையில் இரண்டு மணிநேரமாக காத்துக் கொண்டிருப்பார்கள், ஆனால் இவர்களுக்கு VIP அந்தஸ்து கிடைத்து இரண்டு நிமிடத்தில் அனுமதி கிடைத்துவிடும்! என்று சந்தன் கூறுகிறார்.

வருடாந்திர மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு பின்தொடர்வு நடவடிக் கைகளும் செய்யப்படுகிறது, இதற்கு மருந்துகள் மூலமாக ரொட்டேரியன்களும் உதவி புரிகிறார்கள் என்று மேலும் கூறுகிறார்.

ஆகஸ்டு 4ஆம் தேதி இந்தத் திட்டத்தின் ஒவ்வொரு ஆண்டுவிழாவின் போது சஹி போஜன் ஒட்டுமொத்த

குழுவினருக்கும் நடத்தப்படும். இது ஒரு விழாக்கால கொண்டாட்டம்; எங்கள் மனைவிமார்கள் அவர்களை வரவேற்று ஆரத்தி எடுப்பார்கள், அத்துடன் அவர்களுக்கு ஒரு பிரம்மாண்டமான விருந்தை நாங்கள் கொடுப்போம் என்று சொல்கிறார் சங்க செயலாளர் சுனில் மகேஸ்வரி.

உண்மையிலேயே தினமும் இந்த சாப்பாடு ரொம்ப சுவையாக இருக்கும், அடிக்கடி நான் நினைப்பேன், இது எங்கள் வீட்டு சாப்பாட்டை விட நன்றாக இருக்கிறது என்று, மேலும் காசு கொடுத்து ஒரு டப்பா சாப்பாட்டை என் வீட்டுக்கு அடிக்கடி கொண்டுபோவேன், என்று சொல்கிறார் மினியர்.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்தத் திட்டப் பணிக்கு பணப்பிரச் சினை ஏற்பட்டதே இல்லை, ஒரு நல்ல பணிக்கு பணத்தட்டுப்பாடு என்பது ரோட்டரியில் இல்லவே இல்லை என்பதை இது காட்டுகிறது என்று கூறுகிறார் சங்கத் தலைவர் முந்தாதா. ஒவ்வொரு வருடமும் முதியவர்களுக்கு இரண்டு செட் துணிகளும் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை புதிய சமையல் பாத்திரங்களும் வழங்கப்படுகிறது என்று மேலும் கூறுகிறார்.

### பிரதிபலிப்பு

மற்ற ரோட்டரி சங்கங்கள் ஏன் இந்த திட்டப்பணி போல் செயல்படுத்தவில்லை என்று கேட்டதற்கு, இது போல ஏற்கனவே நடந்துள்ளது என்று அந்த ரொட்டேரியன்கள் கூறினார்கள். இதே RI மாவட்டம் (3132)-ஐ சேர்ந்த RC வை (Wai), இதை ஆரம்பித்துள்ளது, ஆனால் ஒரு நாளைக்கு 25 உணவுகளை மட்டுமே வழங்குகிறது. RC லாத்தூர் சங்கம் இதையே பிரதி எடுத்துள்ளனர் ஆனால் ஒரு மாற்றத்துடன்; ஒரு மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு டிபன்களை அவர்கள் அனுப்புகிறார்கள். சோலாப்பூர் நகரத்திலேயே லோக்மங்கள் இன்ஸ்டிடியூட் என்ற ஒரு தன்னார்வலர் அமைப்பு இதே போன்ற திட்டப்பணியை செய்து கொண்டிருக்கிறார்கள். RC சோலாப்பூர் சங்கம் எங்களுக்கு உத்வேகம் கொடுத்துள்ளது என்று அவர்கள் கூறியுள்ளார்கள், மேலும் அவர்கள் 200 நபர்களுக்கு டிபன்களை வழங்குகிறார்கள். மற்றொரு ரோட்டரி சங்கம் எங்களைத் தொடர்பு கொண்டு சில விவரங்களைக் கேட்டது, என்று சொல்கிறார் ஜாவேரி.

(இந்தத் திட்டப்பணி குறித்த மேலும் விவரங்களுக்கு கமிட்டி உறுப்பினர்களான சந்தீப் ஜாவேரி அவர்களை sandson1972@gmail.com என்ற மின்னஞ்சலிலோ அல்லது ஜயேஷ் பட்டேல் அவர்களை 9823562303 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்).■

*பயனாளிகளுடன் சங்க உறுப்பினர்கள் - குஷால் தேதியா, ஜயேஷ் பட்டேல் மற்றும் ராஜ் மின்னியர்.*



# KGF சயனைடு மலையை பசுஞ்சோலையாக உருமாற்றிய ரோட்டரி

V முத்துக்குமரன்



*சயனைடு மலையில் புதிதாக நடப்பட்டுள்ள செடிகள்.*

பெங்களூருக்கு கிழக்கே 100 கிமீ தொலைவில் உள்ள கோலார் தங்கச் சுரங்கத்திற்கு (KGF) நீங்கள் முதல்முறையாகச் சென்றால், அங்கே மண், பாறை, சேறு மற்றும் இரசாயனங்கள் முக்கியமாக சயனைடு போன்றவை இயற்கையாகவே உருவான ஒரு மலைத்தொடர் போல உங்களுக்கு காட்சியளிக்கும். கோலார் மாவட்டம் பங்காரப்பேட்டை தாலுகாவில் உள்ள KGF-ன் மைய பகுதியில் இந்த 15 சயனைடு குப்பை மேடுகள் சுமார் 200–250 அடி உயரம் வரை உயர்ந்திருக்கிறது, பல ஆண்டுகளாக உள்ளூர் வாசிகளின் வாழ்வில் இது பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தங்கப் பட்டைகள் உள்ள பாறை அடுக்குகளை வெட்டியெடுத்த பிறகு, பொடிசெய்யும் அறையில் பொடியாக்கி, அதை சயனைடு கலந்த இரசாயனக் கலவையுடன் சேர்த்து, இதர தனிமங்களில் இருந்து தங்கம் தனியாகப் பிரித்தெடுக்கப் படுகிறது. இதன் விளைவாக உருவாகும் பொடியாக்கப்பட்ட பாறையுடன் தண்ணீர் கலந்த கசடுகள், 1880 ஆண்டிலிருந்தே சுரங்கங்கள் முழுவதும் பெரும் குப்பைகளாக சேமித்து வைக்கப்படுகிறது. இப்போது இவை நச்சுக் குன்று களாக வடிவெடுத்துள்ளது. இரு வருடத்திற்குள், சயனைடு தூசி காற்றில் பரவுவதால் எங்கள் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தி, சுவாச பிரச்சனைகள், கண் எரிச்சல் மற்றும் சரும நோய்கள் போன்ற குணப்படுத்த முடியாத சேதாரத்தை ஏற்படுத்திய இந்த மிகப்பெரிய குப்பைக் கிடங்கை 2017 ஆகஸ்டு மாதத்தில் RID 3190, RC பெங்களூர் ஆர்சர்ட்ஸ் சங்கம் களத்தில் இறங்கி, பசுமை முயற்சி ஆரம்பித்தது. சயனைடு தூசியின் வெளியீடு இப்போது வேகமாக குறைந்து வருகிறது, என்று சொல்கிறார் RC கோலார் கோல்டு ஃபீல்ட்ஸ் சங்க உறுப்பினர் N ராமகிருஷ்ணன்.

இந்த நச்சுக்கலந்த இடத்தில் மரங்கள் (அல்லது எவ்வித செடி கொடிகள்) வளருவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று கோலார் நகர ஆய்வக அதிகாரி முழுவதுமாக தள்ளுபடி செய்தார், இருந்தாலும் கூட, இந்த சயனைடு குப்பைகளை பசுஞ்சோலையாக மாற்றும் இந்தத் திட்டத்திற்கு தூணாக இருக்கும் RC பெங்களூர் ஆர்சர்ட்ஸ் சங்கத்தின் ஹசிரு (கன்னடத்தில் பசுமை) குழுவின் தலைவரான கட்டிடக்கலை நிபுணர் நீல் மைக்கேல் ஜோசஃப் துவண்டுவிடவில்லை.

கர்நாடகா வனப்பாதுகாப்பு துணைஅதிகாரி ஸ்ரீனிவாச ராவ் ஒரு புதுவிதமான யோசனையைத் தெரிவித்தார், அதுதான் மண்ணில் "ஒன்றுடன் ஒன்று இணைந்த அகழிகளை" உருவாக்குவது, இது மழைநீரை நிலத்துக்கடியில் கொண்டு சென்று நிலப்பரப்பில் ஈரப்பதத்தைத் தக்கவைக்கும், அதனால் காற்றினை குளிர்ச்சியாகவே வைத்திருக்கும். அவருடைய அற்புதமான யோசனை குப்பை மேட்டில் மரம் வளர்ப்பதற்காக எங்களை வழிநடத்தியது, KGF வாசிகளுக்கு உடல்நலப் பிரச்சனைகளை ஏற்படுத்தி வந்த இந்த சயனைடு குப்பைகளை வெளியேற்றுவதற்கு பதிலாக அவற்றை உட்கொண்டு பசுமை படர்ந்திருக்கிறது, என்று கூறினார் RC பெங்களூர் ஆர்சர்ட்ஸ் சங்க முன்னாள் தலைவர் D ரவிசங்கர்.

இப்போது ரோட்டரி சுமார் 40 ஹெக்டேர் வரை பரவியிருந்த சயனைடு குப்பைகளை அகற்றியுள்ளதால், குடியிருப்புவாசிகள் நிம்மதியடைந்துள்ளனர், காற்றடிக்கும் காலத்தில் (ஜூலை-ஆகஸ்டு), குப்பையிலிருந்து சயனைடு காற்று வேகமாகமாக பறந்து வருவதால் சுவாசிப்பது கூட சிரமமாக இருந்தது, என்று வெளிப்படுத்துகிறார் ராமகிருஷ்ணன். நிறைய குடும்பங்கள் ஆஸ்துமா, நுரையீரல் தொற்று மற்றும் சிலிகா நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டது, மேலும், எங்களது மருத்துவத்திற்காக நிறைய பணம் செலவழிக்க வேண்டியிருந்தது.

குடியிருப்புவாசிகள் மூன்று வருடங்களுக்கு முன்பு முகமூடி அணிந்தனர், சயனைடு கலந்த நச்சுக் காற்றின் பாதிப்பிலிருந்து எங்களைப் பாதுகாக்கத்தான். குப்பைகளில் ரொட்டேரியன்கள் வளர்த்த மரங்கள் மூலம் இப்போது காற்றில் சுமார் 90 சதவிதம் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த பசுமைத் திட்டப்பணிக்கு முன்பு, சிகிச்சைக்குப் பணமில்லாத காரணத்தினால் சயனைடு காற்று ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த நிறைய உயிர்களை பலி வாங்கியுள்ளது, என்றார் உள்ளூர் கார்பரேட் நிறுவனத்தின் பணியாளரான P மகேந்திரன்.

### விஞ்ஞான முறையில் மரம் வளர்த்தல்

சுமார் 14,000 அகழிகள், 55,000 மரக்கன்றுகள், மூன்று இலட்சம் விதைப்பந்துகள் மற்றும் பெங்களூரில் இருந்து சுமார் 700 டன் செயற்கை உரம் கொண்டுவரப்பட்டது, இவையனைத்தும் கடந்த இரு வருடங்களாக சயனைடு குப்பையில் காடுவளர்ப்பு திட்டத்திற்கு செய்யப்பட்டது. புங்கை மரம், மலைவேம்பு, மூங்கில், சிவப்புசந்தன மரம், அரச மரம், வேப்ப மரம், சிங்கப்பூர் செர்ரி, மழை மரம் மற்றும் குல்மோகர் மரம் போன்றவை அகழிகளில் வரிசையாகவும், மீதமுள்ள பகுதிகளில் வன புல்வெளியும் பரவியிருக்கிறது. சப்பாத்திக்கள்ளி மற்றும் புதர் செடிகள் போன்றவற்றிக்கு ஈரப்பதம் தேவைப்படுவதால், அகழி மேட்டில் சயனைடு குப்பை உயருவதற்கு தடையாக மூன்றடுக்கு தடுப்பு அரணாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சங்கம் ரூ.30 இலட்சம் நன்கொடையளித்து, போக்குவரத்து செலவுகளை ஏற்றுக்கொண்டது, ஆட்கள், நாற்றுக்கள் மற்றும் குப்பைப் பகுதி மீது மரக்கன்றுகள் நடுவதற்கான இயந்திரம் போன்றவற்றை வனத்துறை வழங்கியது, என்று கூறினார் ஜோசஃப். சுமார் 1.65 இலட்சம் KGF வாசிகளுக்கு பயனளித்த இந்த காடுவளர்ப்பு முயற்சியில் அவருடைய பாகிரதி டிராவல்ஸ் நிறுவனம் தான் முக்கிய கூட்டாளியாக இருக்கிறது.

### ஆங்கிலேய-காலப் பள்ளி புனரமைக்கப்பட்டது

கோலார் நகரத்தில் உள்ள BGML இங்லீஷ் ஹையர் பிரைமரி ஸ்கூல் (பார்கின்சன் நினைவுப் பள்ளி) உள்ளே நாங்கள் நுழைந்தவுடன், ஒரு அர்ப்பணிப்புமிக்க ரொட்டேரியனும் ஒரு கிரிக்கெட் பிரியருமான ஜோசஃப் தன் நினைவோடைகளில் பயணிக்க ஆரம்பித்தார். இந்த கண்கவர் பள்ளியில் ஒரு உயர்நிலைப் பள்ளியும் இருக்கிறது (லின்ட்சே மெமோரியல்).

இந்த பள்ளியின் முன்னாள் மாணவன் நான், 2007 ஆம் ஆண்டு எங்கள் சங்கம் இந்தப்பள்ளியை தத்து எடுத்தது, அன்றிலிருந்து உலகளாவிய நிதியின் மூலம் கழிவறை வளாகம், மரங்கள் நட்டு, விளையாட்டு உபகரணங்கள் வழங்கி, இரட்டை பெஞ்சுகள் அமைத்து, வகுப்பறை தரையினை டைல்ஸ் கொண்டு மாற்றியமைத்திருக்கிறோம். ரமேஷ் சாரி என்ற உறுப்பினர் இந்த டைல்ஸ்களுக்கு நிதியளித்தார்.

முழுவதுமாக சிதைந்து போயிருந்த சென்டரல் ஹாலை சீரமைத்தது மற்றொரு பெரிய திட்டப்பணி. 2008–09 காலத்தில் KGF ஸ்கூல்ஸ் பவுண்டேஷன், ஒரு முன்னாள் மாணவர் குழு போன்றவற்றுடன் இணைந்து ரூ.45 இலட்சம் செலவில் மறுசீரமைத்தோம், என்று கூறினார் ஜோசஃப். இது தவிர, இந்த பள்ளியில் இதர புனரமைப்புகளுக்கு இந்த சங்கம் ரூ.15 இலட்சம் செலவழித்துள்ளது.



**இடதிலிருந்து:** RC *பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸைச் சார்ந்த* K S *கோவிந்தராஜ்,* D *ரவிசங்கர், பிரகாஷ் ஹெக்டே, நீல் மைக்கெல் ஜோசஃப் மற்றும் ரமேஷ் சாரி.*

புகைப்படங்கள்: V முத்துகுமரன்






Rotary PEOPLE OF ACTION

# குழந்தைகளின் வாழ்வில் மறுமலர்ச்சி!

ரஷீதா பகத்

நாக்பூர் ரோட்டரி மாவட்டம் 3030 யில் கடந்த 11 வருடங்களாக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 14-ம் தேதியை அதாவது, காதலர் தினத்தை ஒரு புதுமையான விதத்தில் கொண்டாடி வருகிறது. அன்றைய தினம் சுமார் 800 மாற்றுத் திறனாளி குழந்தைகளை ஒரே இடத்தில் சங்கமிக்க வைத்து சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி அவர்கள் மனதில் மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் ஏற்படுத்தி வருகிறது என்கிறார் அதன் முன்னாள் தலைவர் கபில்பாஹ்ரி.

தங்களது அன்றாட வாழ்க்கையில் பல்வேறு சவால்களைச் சந்தித்து வரும் இந்த குழந்தைகளுக்கு உதான் என்ற பெயரில் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி அவர்களை மகிழ்ச்சியின் உச்சத்துக்கே அழைத்துச் செல்கிறோம்.

நாக்பூர் மாவட்ட ரோட்டரி சங்க உறுப்பினர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சிக்காக தங்களது அலுவல்களை ஒதுக்கிவைத்துவிட்டு, இந்நிகழ்ச்சியில் தவறாமல் பங்கேற்று குழந்தைகளுடன் விளையாடியும், அவர்களுக்கு உதவியும், அவர்களின் கேளிக்கை நடவடிக்கைகளை ஊக்குவித்து குழந்தைகள் மனதில் குதூகலத்தை ஏற்படுத்தி தாங்களும் மகிழ்ச்சியடைவது இதன் சிறப்பு அம்சமாகும் என்று கபில்பாஹ்ரி பெருமையுடன் விவரித்தார்.

இதர ரோட்டரி சங்க உறுப்பினர்கள் போலவே நாக்பூர் மாவட்ட ரோட்டரி சங்கம் 3030-ன் மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஷபீர் ஷகீர், இந்த சிறப்புத் திட்டம் குறித்து மேலும் விவரிக்கிறார்.




*கௌரவ் தாக்கூர் (இடது) மற்றொரு பங்கேற்பாளரிடம் உரையாடுகிறார்.*

மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு நிகழ்ச்சி குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய திட்டம் என்றாலும் இதற்காக குழந்தைகளை ஒன்று திரட்டுவது, அவர்களை நிகழ்ச்சிக்கு அழைத்து வருவது என்பது எளிதான காரியமல்ல. இந்தப் பணியில் சிறப்புப் பள்ளிகளின் ஆசிரியர்கள் பங்கு முக்கியமானது. இந்த நிகழ்ச்சிக்காக சுமார் இரண்டு மாதங்கள் முன்பாகவே திட்டமிடத் தொடங்கினோம். மகாராஷ்டிர மாநிலம், நாக்பூர் மாவட்டத்திலுள்ள சிறப்பு பள்ளிகளிலிருந்தும் உடல் ஊனமுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள் என 800 சிறப்புக் குழந்தைகளை அழைத்து வந்து விளையாட்டுப் போட்டிகள், இசைப் போட்டி, கலைநிகழ்ச்சிகள் நடத்தினோம். இதில் சம்பந்தப்பட்ட பள்ளிகளைச் சேர்ந்த 150-க்கும் மேலான ஆசிரியர்கள், ஆசிரியைகள் கலந்துகொண்டு குழந்தைகள் நிகழ்ச்சிகளில் பங்கேற்க உதவினர். குழந்தைகள் மீது ஆசிரியர்கள் காட்டிய அன்பு, அரவணைப்பு, நிகழ்ச்சிகளில் அவர்கள் பங்கேற்க எடுத்துக்கொண்ட சிரத்தையை நேரில் பார்த்தபோது சிறப்புக் குழந்தைகளுக்கான அவர்களின் சேவை மனப்பான்மையைப் புரிந்துகொள்ள முடிந்தது என்றார் ஷகீர்.

சிறப்பு குழந்தைகளுக்கான நிகழ்ச்சியை நடத்த நாங்கள் முடிவு செய்தாலும் அதைச் செயல்படுத்த பல்வேறு கட்டங்களை நாங்கள் கடந்துவர வேண்டியிருந்தது. இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்த முதலில் சமூக நலத்துறையின் அனுமதி பெற வேண்டும். அதுமட்டுமல்ல, அவர்கள் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் செயல்பட வேண்டும். அடுத்த கட்டமாக நாக்பூர் மாவட்டத்தில் உள்ள சிறப்புப் பள்ளிகளுக்குச் சென்று பள்ளி நிர்வாகத்தினரிடமும், குழந்தைகளின் பெற்றோர்களிடமும் அனுமதி பெற்றுத்தான் அவர்களை நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்லவேண்டியிருந்தது. நாங்கள் என்ன நிகழ்ச்சிகளை நடத்த உத்தேசித்துள்ளோம் என்பதை கேட்டுத் தெரிந்துகொண்ட பின்னர், யார் யாரை உதான் நிகழ்ச்சிக்கு அனுப்புவது என்பதை பள்ளி நிர்வாகத்தினர் முடிவு செய்தனர். பல பள்ளிகளிலிருந்து குழந்தைகள் கலந்துகொண்டால்தானே மகிழ்ச்சியான அனுபவத்தை அவர்கள் பெறமுடியும் என்கிறார் கபில்பாஹ்ரி.

இந்த நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திச் செல்வதில் ரோட்டரி இளைஞர்களின் பங்கு முக்கியமானது. மாவட்டத்தில் உள்ள 6 அல்லது 7 ரோட்டரி சங்கங்கத்தைச் சேர்ந்த இந்த இளைஞர்கள், அரசு மற்றும் பள்ளி நிர்வாகத்தினரிடம் அனுமதி பெறுவது, 38-க்கும் மேலான பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டி நிகழ்ச்சிக்கு அழைத்து வருவது என பலவிதங்களில் உதவிகரமாக இருந்தனர் என்று குறிப்பிட்டார் ஷகீர்.

ரோட்டரி இளைஞர்களின் ஆதரவால்தான் நிகழ்ச்சியை திட்டமிட்டபடி வெற்றிகரமாகச் செயல்படுத்த முடிந்தது என்ற ஷகீரின் கருத்தை ஆமோதித்தார் கபில்பாஹ்ரி. பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும் சேவையாற்றியதை எங்களால் மறக்க முடியாது என்கிறார் பாஹ்ரி.



ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு வகையில் நிகழ்ச்சியை நடத்திச் செல்வது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு ஜும்பா நடனம் என்ற தலைப்பில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகி இருந்தது. இதற்காக குழந்தைகளுக்கு இரண்டு வாரம் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்ச்சி நாளன்று 845 குழந்தைகளும் 45 நிமிடங்கள் ஜும்பா நடனம் ஆடியது பார்வையாளர்களைக் கவர்ந்ததுடன் லிம்கா சாதனையாளர் புத்தகத்திலும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது என்றார் ஷபீர் ஷகீர்.

நிகழ்ச்சியில் பங்கேற்போர் விவரங்கள் பதிவு செய்யப்பட்டதும் சிறப்புக் குழந்தைகளுடன் வந்த ஆசிரியர்கள், அவர்களுக்கு துணையாக இருந்தவர்கள் அனை வருக்கும் காலை உணவு வழங்கப் பட்டது. பின்னர் குழந்தைகள் சிறு சிறு குழுவாகப் பிரிக்கப்பட்டு போட்டி பற்றி விளக்கப்பட்டது. உதான் நிகழ்ச்சிகள் அனைத்தும் மன்காபூர் உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இது முழுவதும் குளிரூட்டப்பட்ட அரங்கமாகும். அரங்கின் வெளியில் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் குழந்தைகள் விழாத் தலைவர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களை வரவேற்றது குறிப்பிடத்தக்கது.

## பார்வையற்ற குழந்தைகளுக்கு கிரிக்கெட் போட்டி

விளையாட்டுப் போட்டி எனில் கேரம், செஸ், வாலிபால், ஹாண்ட்பால், சக்கர நாற்காலி பந்தயம் போன்றவைதான் நடத்தப்படும். ஆனால், இந்த ஆண்டு பார்வையற்ற குழந்தைகளுக்காக பிரத்யேகமாக கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. பந்து வீசுபவர்கள், அதை மட்டையால் அடிப்பவர்கள், ஆடுகளத்தில் பீல்டிங் செய்பவர்கள் அனைவரும் பந்து வருவதை எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

இசை நாற்காலி போட்டியில் சிறப்புக் குழந்தைகள் ஆர்வமாக கலந்து கொண்டனர். உடல் ஊனமுற்றவர்களுக்கும் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கும் இப்போட்டி



சவாலாக இருந்தது. சிலருக்கு வெற்றி, பலருக்கு தோல்வி என்றாலும் அவர்களுக்கு இது மறக்கமுடியாத விளையாட்டாக இருந்தது.

காலையில் சில போட்டிகள் நடந்து முடிந்தவுடன் அவர்கள் அனைவருக்கும் மதியம் விருந்து அளிக்கப்பட்டது. நகரில் உள்ள முன்னணி உணவகமான ஹோட்டர் சென்டர் பாயின்ட் இதற்கான செலவை ஏற்றுக்கொண்டனர். சிறிது ஓய்வுக்குப் பிறகு வேறு சில போட்டிகள் நடத்தப்பட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சி களை நடத்துவதிலும், அவற்றை கண்காணிப்பதிலும் நூற்றுக்கும் மேலான ரோட்டரி உறுப்பினர்கள், அவர்களின் மனைவிமார்கள், ரோட்டரி இளைஞர்கள் ஈடுபட்டு உதவியதையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

நிகழ்ச்சியின் இறுதிக்கட்டமாக இசை நிகழ்ச்சி நடைபெற்றது. சிறப்புக் குழங்தைகள் இசை நிகழ்ச்சி களை மகிழ்ச்சி பொங்க ரசித்தனர். விழா முடிந்ததுடன் எங்களைப் பிரிய மனமில்லாமல் திரும்பிச் சென்றனர்.

விளையாட்டு, இசை, கேளிக்கை என பல்வேறு போட்டி களில் ஆர்வமுடன் பங்கேற்ற குழந்தைகளுடன் ஒருநாள் முழுவதையும் கழித்த நாங்களும் அவர்களைப் பிரிய மனம் இல்லாமல் அடுத்த ஆண்டும் இதேபோன்ற நிகழ்ச்சியில் அவர்களைச் சந்திப்போம் என்ற நினைவிலேயே பிரிந்து சென்றோம்.

சிறப்புக் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிக்கு மொத்தம் ரூ.7 லட்சம் செலவிடப்பட்டது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் இப்போது நாக்பூரியில் பிரபலமாகிவிட்டது. உள்ளூர் சமூகத்தினரும் இதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தனியார் நன்கொடையாளர், கார்ப்பொரேட் நிறுவனங்களும் இவற்றுக்கு நிதியுதவி அளித்து வருகின்றன என்று பெருமையுடன் குறிப்பிட்டார் கபில்பாஹ்ரி.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி







ஜூம்பா நடன பயிற்ச்சி.

# தொற்று அல்லாத நோய்களை கட்டுப்படுத்துவோம்

ரோட்டரி செய்திக்குழு

RI இயக்குநர்கள் கமல் சங்வி, Dr பரத் பான்ட்யா ஒரு புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளார்கள்-நேர்வித நலன் திட்டம்-NCDயை நிறுத்துவோம்-என்பது,

இந்தியாவில் ஒரு NCD தொற்று பரவிவருகிறது, இது 60% மரணங்களுக்குக் காரணமாக இருக்கிறது. NCD எனப்படும் தொற்று அல்லாத நோய்கள் உண்டாவதற்கான மரபு, பண்பாட்டு ஆபத்துகள் இந்தியர்களுக்கு உள்ளன. ஒழுங்கற்ற வாழ்க்கைமுறை, உணவுப் பழக்கங்களால் இந்தியர்கள் மத்தியில் NCDக்கள் அதிகரிக்கின்றன. அதிகக் கலோரி உணவு, அதிக உப்பு, எண்ணெய் மற்றும் சர்க்கரை ஆகியவை, தீவிரவாதத்தைவிடப் பல மடங்கு அதிக மக்களைக் கொல்கின்றன. நான்கு பொதுவான NCDக்கள்: நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம் மற்றும் இதய நோய், CVA (பக்கவாதம்) மற்றும் தீவிரச் சிறுநீரக நோய் (CKD).

“NCDயை நிறுத்துவோம்” திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல, ஒரு தேசியக் குழு அமைக்கப் பட்டுள்ளது. இதற்கு ஒரு மூன்று-நிலை அணுகுமுறை தேவைப்படுகிறது:

### உங்கள் எண்களை அறிந்து கொள்ளுங்கள் பரப்புரை

- வயதுவந்த ஒவ்வொருவரும் தங்களுடைய எடை, BP மற்றும் ரத்தத்தில் சர்க்கரை அளவு ஆகிய மூன்று முக்கிய நல எண்களைத் தெரிந்துவைத்திருக்கவேண்டும் என்று அறிவுறுத்துகிற முகாம்களைச் சங்கங்கள் நடத்தவேண்டும்.
- இந்த முகாம்களின்போது, சரியான எண்களைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தைப்பற்றிய நலப் பிரசுரங்களை வலியுறுத்தவேண்டும். அதாவது,



BP 120/80ஆக இருத்தல், BMI 25ஐ விடக் குறைவாக இருத்தல், உணவுண்ணாதநிலையில் ரத்தத்தில் சர்க்கரை அளவு 100ஐவிடக் குறைவாக மதிய உணவுண்டபின் ரத்தத்தில் சர்க்கரை அளவு 140ஐவிடக் குறைவாக இருத்தல்.

- நீரிழிவு, BP, இதய நோய், பக்கவாதம் மற்றும் சிறுநீரகச் செயலிழப்பைக் கட்டுப்படுத்துவதற்கான எளிய உதவிக் குறிப்புகள். உடல் நலத்தை உறுதிப்படுத்தும் உணவுப்பழக்கம் மற்றும் வாழ்க்கைமுறை நடவடிக்கைகளைப்பற்றிய சிற்றேடுகளை விநியோகிக்கலாம்.
- வழக்கமான முகாம்கள், விழிப்புணர்வுத் திட்டங்களுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு நாட்களில் இந்தியா முழுவதும் அனைத்துச் சங்கங்களும் பொதுவான நல முகாம்களை நடத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தியாமுழுவதும் நடைபெறவுள்ள முகாம்கள், விழிப்புணர்வுத் திட்டங்களுக்கான நாள்கள்:
- செப் 29, 2019 - உலக இதய நாள்
  நவ 14, 2019 - உலக நீரிழிவு நாள்
  ஃபிப் 23, 2020 - ரோட்டரி ஆண்டுவிழா
  ஏப் 7, 2020 - உலக நல நாள்

## National Committee Members

| Name of NCM | RI District Number | Contact Numbers |
|---|---|---|
| Dr EK Sagadhevan | 3202, 3000, 3232 | 9994477725 |
| Dr Sushil Khurana | 3011, 3012, 3100 | 9810056308 |
| Dr Indumati Gopinathan | 3141 & 3142 | 9820031371 |
| Dr K Ravi Appaji | 3181, 3182, 3190 | 98805 61430 |
| Dr K Vijayakumar | 3212 | 9443161102, 9025162113 |
| Dr Sayantan Gupta | 3240 & 3291 | 9734184165 |
| Dr R Bharat | 3250 | 9934320311 |
| Ashok Singh | 3030, 3261, 3262 | 9861010130 |
| Dr Zamin Hussain | 3040 & 3053 | 9827316646 |
| Dr Mohan Prasad GV | 3020, 3150, 3160 | 9849082522 |
| Jayprakash Vyas | 3054 | 9824012876 |

### விழிப்புணர்வைப் பரப்புதல்

- இரண்டு அம்ச அணுகு முறை: ரோட்டரியன்கள், சமூகத்தில் விழிப்புணர்வு; பள்ளிகள், கல்லூரிகளில் விழிப்புணர்வு.
- உரையாடல்கள், வீடியோக் கள், கையேடுகள், சிற்றேடுகளைக் கொண்ட விழிப் புணர்வுப் பரப்புரைகள்.
- இளைஞர்கள் மத்தியில் உடல்பருமனைப்பற்றி உரையாடுவதற்காகப் பள்ளிகள், கல்லூரிகளிலும், சமூக ஊடகங்களின்வழியாகவும் ஒரு விழிப்புணர்வுப் பரப்புரையை நிகழ்த்துவது இந்தத் திட்டத்தின் ஒரு முக்கியமான உந்துதலாகும்.
- ரோட்ராக்டின் பங்களிப்பு முக்கியமானது. ரோட்ராக்ட் சங்கங்கள் சமூக ஊடகப் பரப்புரையில் உதவலாம்.
- இந்தப் பரப்புரைக்கான சொற்றொடர், "ஒரு ஸ்பூன் குறைப்போம், நான்கு படி முன்னேறுவோம்."

### ஆலோசகர் பொறுப்பு

பிற NGOக்களுடன் இணைந்து ரோட்டரி ஓர் ஆலோசகர் குழுவை உருவாக்கலாம், NCD கட்டுப்பாடு மற்றும் நல வாழ்க்கை விவரிப்புக்கு முக்கியத்துவம் தருமாறு அரசாங்கத் திடம் வலியுறுத்தலாம். உணவுப் பொருட்கள் லேபில்களில் சரியான குறிப்புகளைப் பிரசுரிக்கச் செய்வது, உப்பு, ஆற்றல் அளவுகளைக் குறிப்பிடச்செய்வது, நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் உணவுகளில் சிகரெட்களைப்போன்ற சட்டப்பூர்வ எச்சரிக்கைகள், குப்பை உணவுகளுக்கான விளம்பரங்களில் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை உறுதிசெய்வதன்மூலம் ஆலோசகர் பொறுப்பை ஆற்றலாம்.

நேர்வித நலன் - NCDயை நிறுத்து



வோம் என்ற திட்டத்தை ரோட்டரி தொடங்கியுள்ளது, மக்கள் மத்தியில் நேர்வித நலனை முன்னிறுத்துவதற்காக இந்தியாமுழுவதும் நிகழ்த்தப்படும் ஒரு முயற்சியாக அதை ஆக்கியுள்ளது. இது மிகவும் சாத்திய மான ஒரு திட்டம். இதற்குச் செலவு குறைவு, நீண்டகாலத்துக்கு இதைத் தொடரலாம்.■

---

TRF உதவியுடன் நன்மைகள்

# நலப்பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துதல்

ரோட்டரி செய்திக்குழு




PRIP *கல்யாண் பானர்ஜீ மருத்துவ உபகரணங்களை ரோட்டரி மருத்துவமனைக்கு* DRFC *ஆஷிஷ் அஜ்மேரா,* IPDG *பிங்கி பட்டேல் மற்றும்* RC *வாப்பி முன்னாள் தலைவர் கேத்தன் பட்டேல் முன்னிலையில் வழங்குகிறார்.*

RC வாபி, RID 3060, இந்நகரில் உள்ள ஹரியா ரோட்டரி மருத்துவ மனையின் அறுவைச்சிகிச்சை அரங்க வசதிகளைச் சமீபத்தில் மேம்படுத்தியது. நரம்பு அறுவைச் சிகிச்சைக்கான செயல்பாடு களைக் கொண்ட நுண்ணோக்கி, துளையிடும் இயந்திரம், உதறல் நீக்கிகள், ECG இயந்திரங்கள், ஒரு CR அமைப்பு, டோனோமீட்டர், சிரிஞ்ச் மற்றும் உட்செலுத்தல் பம்ப்கள் உள்ளிட்ட 85,123 மதிப்புள்ள மருத்துவக் கருவிகள் ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக வழங்கப்பட்டன.

இதற்கு உதவிய பங்களிப்புகளில் சில: RC மும்பை டௌன்டவுன் சீலான்ட், RID 3142, உறுப்பினர் கிரிதாரிலால் மோடி வழங்கிய $30,000 உதவி தொகை, $16,000 DDF, RC வாபியின் பங்களிப்பு $16,186, மீதத்தொகை TRF இடமிருந்து.

இந்த மருத்துவமனையை ரோட்டரி தொண்டு அறக்கட்டளையின் கீழ் இச்சங்கம் இயக்கிவருகிறது. ஜூன் மாத நிறைவில், அப்போதைய DG பிங்க்கி படேல், DRFC ஆஷிஷ் அஜ்மேரா மற்றும் PDG ஆஷிஷ் ராய், சங்கத் தலைவர் கேதன் படேல், செயலாளர் ராகேஷ் பட்வாரி முன்னிலையில் கருவிகளை மருத்துவ மனை நிர்வாகத்திடம் வழங்கினார் PRIP கல்யாண் பேனர்ஜி.■

# கிராமங்கள் நோக்கி பயணிப்போம்!

ரஷீதா பகத்

ரோட்டரி 3011 மாவட்ட ஆளுநர் தீபக் குப்தா, என்னென்ன திட்டங்களை எப்படிச் செயல்படுத்த இருக்கிறார் என்பது அவரின் பதவியேற்பு நிகழ்ச்சியிலேயே தெளிவாகத் தெரிந்தது. தனது பதவியேற்பு விழாவை குர்கானில் ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம் என வெகு விமரிசையாகக் கொண்டாடினார் தீபக். நிகழ்ச்சிக்கு வந்திருந்த பலரும் அவர் செய்திருந்த ஏற்பாட்டைக் கண்டு வியந்துபோனார்கள்.

ஆனால், தனது மாவட்டத்தில் செயல்படுத்தப்போகும் திட்டங்களை முன்கூட்டியே அவர் காணொளி காட்சியாக (வீடியோவாக) தயாரித்து வெளியிட்டது அனைவரையும் கவர்ந்தது. இதற்காக அவர், கடந்த சில மாதங்களாகவே உழைத்திருக்கிறார் என்பது அவரது பேச்சிலிருந்து தெரியவந்தது.

நான் கடந்த ஓராண்டாகவே நாட்டின் தலைநகரையொட்டிய பகுதிகளுக்குச் சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் என்ன என்பதை ஆய்வு செய்து வைத்திருந்தேன்.

குர்கானைச் சுற்றியுள்ள ரோட்டரி சங்கங்கள் பலவும் திட்டங்களை தங்கள் பகுதியிலேயே நிறைவேற்றினால் போதும் என்று கருதுகின்றன. ஆனால் நான், தேசிய தலைநகர் பிராந்தியத்துக்கு வெளியே உள்ள கிராமங்களுக்குச் சென்று மக்களின் பிரச்னைகளை ஆய்வு செய்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து அவர்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

எனவே நாம், இந்த ஆண்டு நாம் இருக்கும் இடத்திலேயே சௌகரிய மாக செயல்படுவதை விடுத்து 20 அல்லது 30 கி.மீ. தொலைவில் உள்ள கிராமங்களுக்குச் சென்று சேவை செய்வதை இலக்காகக் கொள்வோம்.

### கூட்டுமுயற்சி தேவை

எந்த ஒரு பெரிய திட்டமானாலும் அதை தனி ஒருவரோ அல்லது அமைப்போ செயல்படுத்துவதைவிட கூட்டு முற்சியுடனும் அதிக ஈடுபாட்டுடனும் செயல்படுத்தினால் அதன் மூலம் கிடைக்கும் பயன் அதிகம். அதனால்தான் எழுத்தறிவு திட்டத்தை செயல்படுத்துவதில் நான் அப்பகுதியில் உள்ள இகாட் லேர்னிங் என்ற அமைப்புடன் கூட்டுவைத்துள்ளேன்.

நாம் எந்தப்பணியில் கவனம் செலுத்தப்போகிறோம் என்பதை நன்கு அறிந்து கொண்டபின் உள்ளூர் மக்களிடம் அதுபற்றி விவாதிக்க வேண்டும். அவர்களின் தேவை என்ன என்பதை அறிந்து அதைச் செயல்படுத்த வேண்டும். அப்போது நாமும் களத்தில் இருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் உள்ளூர் மக்கள் நம்மீது நம்பிக்கை வைப்பார்கள். நம்மால் அதைத் தனியே செய்ய முடியாதா என்று சிலர் கேட்கலாம். அது முடியும் என்றாலும் உள்ளூர் சமூகத்தினரின் ஒத்துழைப்பு இருந்தால் சிறப்பாகச் செய்ய முடியும்.

வியாபாரம் செய்வது எப்படியோ அப்படித்தான் சமூகச் சேவையும். வியாபாரம் செய்யும்போது நாம் உடன் இருக்க வேண்டும். வெறும் பேச்சின் மூலமோ அல்லது இருக்கும் இடத்திலிருந்தோ அதைச் செய்தால் சரியாக வராது. அதுபோலத்தான் சமூகச்சேவையும்.

ரோட்டரி சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் எந்த ஒரு திட்டமானாலும் அதுபற்றி இதர ரோட்டரி சங்க உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்து செயல்படுத்துவது தான் நன்மை தரும். எத்தனை குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உதவி கேட்டு நிற்கிறார்கள் என்பதை நம்மால் தீர்மானிக்க முடியாது. ஏழைகளுக்கும் முடியாதவர்களுக்கும் சேவை செய்ய நமக்கு அருமையான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. எனவே கிராமப்புற மருத்துவமனைகள், பள்ளிகள், ஏழை விவசாயிகள் ஆகியோரைத் தேடிச் சென்று நம்மால் முடிந்த உதவிகளை அவர்களுக்குச் செய்ய வேண்டும். இதை வீட்டிலிருந்து செய்ய முடியாது. இதற்கான இலக்கை நோக்கி நாம்தான் பயணிக்க வேண்டும். எந்த ஒரு திட்டமும் மிகச் சிறியது அல்ல: ரோட்டரி மூலம் செயல்படுத்தப்படும் எந்த ஒரு திட்டத்துக்கும் நிதி ஒரு தடையாக இருக்க முடியாது.

### கனவுத் திட்டம்

ரோட்டரி முன்னாள் இயக்குநர் சுதர்ஷன் அகர்வால், ஏழை மாணவிகள் கல்வி கற்பதற்காக டேராடூனில் உறைவிடப்பள்ளியை கட்டியுள்ளார். ஹிம்ஜோதி என்ற அந்தப் பள்ளியில் 300 மாணவிகள்



பயின்று வருகின்றனர். ரூ.40 கோடியில் இத்திட்டத்தை அவர் செயல்படுத்தியுள்ளார். அந்த பள்ளிக்கு நிலம் வாங்குவது, அரசு அனுமதி பெறுவது உள்ளிட்ட பணிகளுக்கு ரோட்டரி 3012 மாவட்டத்தைச் சேர்ந்த சஞ்சய் அரோரா, சச்சின் குப்தா இருவரும் உறுதுணையாக இருந்துள்ளனர்.

சுதர்ஷன் அகர்வால் நிறைவேற்றிய திட்டம் என்னை மிகவும் ஈர்த்துள்ளது. அதுபோன்ற ஒரு திட்டத்தை தயாரித்து செயல்படுத்தவேண்டும் என்பது தான் எனது கனவாகும். சுதர்ஷன் இதற்காக பலரிடம் நிதிகேட்டு கையேந்தியுள்ளார். நானும் அதுபோல் ஒரு பள்ளியை நமது மாவட்டத்தில் நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளேன். எனது இந்த கனவுத் திட்டத்துக்காக உங்கள் ஒவ்வொருவரின் வீட்டுக் கதவையும் தட்டி நிதி கேட்க நானும் தயங்கமாட்டேன்.

நடமாடும் கண் மருத்துவமனை திட்டத்தையும் இந்த ஆண்டு செயல்படுத்த திட்டமிட்டுள்ளேன். நான் அருகிலுள்ள பல கிராமங்களுக்குச் சென்று பார்த்தபோது சிலவற்றில் பெயருக்குக்கூட ஒரு மருத்துவர் இல்லை. தேசிய தலைநகர் பிராந்தியத்திலிருந்து 50 கி.மீ. தொலைவுக்குள்ளேயே இந்த கிராமங்கள் இருக்கின்றன. நாம் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தியபோது முதியவர்கள் பலரும் கண்புரை அறுவைசிக்சை செய்து எங்கள் வாழ்வில் ஒளியேற்றுங்கள் என்று கேட்டுக்கொண்டனர். இனி நாம் நடமாடும் மருத்துவமனை மூலம் அவர்களைத் தேடிச்சென்று அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவோம். மகளிர் டாக்ஸி ஓட்டிச்செல்லும் பிங்க் டாக்ஸி திட்டம் உள்ளிட்ட சிலவற்றையும் செயல்படுத்த வேண்டும் என்பதில் நான் ஆர்வமாக இருக்கிறேன்.

### பெரும் நன்கொடையாளர்

ஒரு காலத்தில் அதாவது 2007-08-இல் PHF உறுப்பினர்களை நாம் தேடிக் கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. ஆனால், இன்று நமது மாவட்டத்தைச் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர்கள் பலரும் இந்த ஆண்டு முதல் நாளில் ரோட்டரி அறக்கட்டளைக்கு தாங்களாகவே முன்வந்து 10,000 டாலர் நன்கொடை அளித்துள்ளனர் என்று ரோட்டரி முன்னாள் ஆளுநரும் பயிற்சியாளருமான முகேஷ் அர்னேஜாவை நோக்கியவாறே குப்தா கூறினார். அவரைப்போல பலரும் பெருந்தொகைகளை ரோட்டரி அறக்கட்டளைக்கு நன்கொடையாக அறங்காவலர் குலாம் வாஹன்வதியிடம் கொடுத்துள்ளனர் என்றும் குப்தா குறிப்பிட்டார்.

ரோட்டரி அறக்கட்டளைக்கு 30 ஆயிரம் டாலர் நன்கொடையை காசோலையாக வழங்கிய மாவட்ட ஆளுநர் குப்தா, தாம் மொத்தம் 1,07,000 டாலர் தொகையை நன்கொடையாக வழங்க திட்டமிட்டி ருப்பதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் தாம் AKS உறுப்பினராக முடிவு செய்துள்ளதாகவும் உறுதிபடத் தெரிவித்தார்.

ரோட்டரி மாவட்ட ஆளுநர் பதவியேற்பு நிகழ்ச்சியிலேயே பலரும் அறக்கட்டளைக்கு தாராளமாக நன்கொடை அளிக்க முன் வந்தது குறித்து அறங் காவலர் வாகன்வதி மகிழ்ச்சி தெரிவித்தார். ரோட்டரி மாவட்டம் 3012-ன் உறுப்பினரான



*DG தீபக் குப்தா, RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் D ரவி சங்கர், பவோலா, TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி மற்றும் பிற மாவட்ட தலைவர்களுடன்.*



*முன்னாள் தலைவர் சுபாஷ் ஜெயின் மற்றும் அவர் மனைவி பபிதா,*
DG *தீபக் குப்தா மற்றும் அவர் மனைவி ரீனா கௌரவிக்கப்படுகின்றர்.*

அமிதா மொஹிந்துருவும், அவரது கணவரும், டில்லியில் முன்னர் நடந்த நிகழ்ச்சியில் பெங்களூரு ரோட்டரி சங்கத் தலைவர் D ரவிசங்கர் பேச்சால் ஈர்க்கப்பட்டு தாங்கள் AKS உறுப்பினர் களாக விரும்புவதாக கூறியதை வாஹன்வதி சுட்டிக் காட்டினார்.

பதவியேற்பு விழாவுக்கு முன்பாகவே பல நல்ல திட்டங்களை வகுத்து வைத்திருக்கும் குப்தாவை வாஹன்வதி பாராட்டினார். தேர்வு செய்யப்பட்ட மாவட்ட ஆளுநர்களின் கூட்டத்திலேயே குப்தா சுறுசுறுப்புடனும் சேவை மனப்பான்மையுடனும் இருந்ததை நான் அறிவேன். மேலும் குப்தா, அறிவார்ந்தவர், எதையும் வெளிப் படையாகப் பேசுபவர். தனது கருத்துகளை பொது அரங்கில் முன்வைக்க அவர் தயங்கியதே இல்லை. அனைத்து மாவட்ட ஆளுநர்களும் அவரைப் போலவே மனதில் தோன்றும் கருத்துகளை வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

கல்வி, சுகாதாரம் போன்ற பெரிய திட்டங்களை குப்தா என்ற தனி நபரால் மட்டும் செயல்படுத்த முடியாது. அதற்கு நாம் அனைவரும் அவருக்கு துணைநிற்க வேண்டும். கூட்டுமுயற்சியுடன் செயல்பட்டால் நமது கனவுகள் நிஜமாகும்.

பெரிய அளவு திட்டங்களானால் அதற்கு அதிக அளவில் நிதி தேவைப்படும். பெரிய திட்டங்களை எவை, அவற்றை எப்படிச் செயல்படுத்துவது என்பது குறித்த ஆய்வு இறுதிக்கட்டத்தில் உள்ளது. இதற்கு 5 லட்சம் டாலர்கள் வரை தேவைப்படலாம். இவை 2020-ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதி முதல் செயல் படுத்தப்படும். அது பற்றிய அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றார் ரோட்டரி அறங்காவலர் வாஹன்வதி.

பின்னர் நடைபெற்ற கேள்வி-பதில் நிகழ்ச்சியில் குப்தா ஒரு கேள்வியை எழுப்பினார். அதாவது, ஷாஜஹான் மனைவிக்காக தாஜ்மகால் கட்டியதுபோல் தன் மனைவிக்காக ஒரு கட்டடத்தை எழுப்பாமல், ரோட்டரி அறக்கட்டளைக்கு ரூ.100 கோடி தர ரவிசங்கர் முன்வந்தது ஏன் என்றார்.

அதற்கு ரவிசங்கர் தனக்கே உரித்தான பாணியில் பதிலளித்தார். டில்லியைச் சேர்ந்த நீங்கள் எல்லோரும் தாஜ்மஹாலை பார்த்து ரசிப்பவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஷாஜஹானை விட ஒரு படி மேலாக நான் செய்ய விரும்பினேன்.

சலவைக்கற்களால் கட்டப்பட்ட தாஜ்மஹாலின் அழகை வேண்டு மானால் பார்த்து ரசிக்கலாம். ஆனால், அதனால் என்ன பயன். ரோட்டரி அறக்கட்டளைக்கு நானும் மனைவி பவுலாவும் சேர்ந்து ரூ.100 கோடி அளிப்பதன் மூலம் பல நாடுகளில் தாஜ்மஹால் போன்ற கட்டடங்களை எழுப்ப முடிவு செய்துள்ளோம். இதன் மூலம் நாங்கள் நற்பணிகளுக்கு கட்டடங்கள் எழுப்பியது போலவும், சேவை செய்தது போலவும் ஆகும் என்றார்.

அடுத்து குப்தா, AKS உறுப்பினராவது குறித்து எப்படி விரைந்து முடிவு எடுத்தீர்கள் என்று அமிதாவிடம் கேட்டார்.


அதற்கு, பவுலா, ரவிசங்கர் இருவரின் பேச்சால் ஈர்க்கப்பட்ட நான் சிறிதும் தாமதிக்காமல் இந்த முடிவை எடுத்தேன். நம் நாட்டில் மிகப்பெரிய பணக்காரர்களும் உள்ளனர். மிகவும் ஏழ்மையானவர்களும் உள்ளனர். இந்த இருவருக்கும் உள்ள இடைவெளியை குறைத்து சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் எனது மற்றும் என் கணவரின் லட்சியம் என்று அமிதா தெரிவித்தார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்













The Rotary Foundation | END POLIO NOW

# நன்கொடையாக ரூ. 1 லட்சம் அல்லது 1500 டாலர்

## போலியோ திட்டத்திற்கு** வழங்குங்கள்

1. நீங்கள் கொடுக்கும் ₹ **1 லட்சத்திற்கு** ஈடாக பில் & மெலிண்டா கேட்ஸ் பவுண்டேஷன் ₹ **2 லட்சம்** நன்கொடையாக கொடுப்பார்கள். எனவே போலியோ ஒழிப்பு திட்டத்திற்கு மொத்தம் ₹ **3 லட்சம்** சென்றடையும். You will get the credit for Rs. 1 lakh only.
2. தாங்கள் இதுவரை கொடுத்துள்ள நன்கொடையுடன் (cumulative giving) இந்த ₹1 லட்சமும் சேர்ந்து தங்களுக்கானதொரு **PHF / MPHF / Major Donor** போன்ற அங்கீகாரம் மற்றும் 80G சான்றிதழை ரோட்டரி பவுண்டேஷன் உங்களுக்கு வழங்கும். Donor will get Foundation Recognition points against his contribution towards polio.
3. போலியோவுக்கென நன்கொடை கொடுத்தால் கீழ்காணும் **மாவட்ட சிறப்பு அங்கீகாரங்கள்*** உங்களுக்கு கிடைக்கும்.
   a. "End Polio Fellow Pin" ( பின் )
   b. உங்களை கௌவுரவிக்க போலியோ அங்கவஸ்திரம்
   c. RID, Trustee, EPNC மற்றும் உங்கள் DG கையெழுத்திட்ட சான்றிதழ்

Rotary | EPF
END POLIO FELLOW

** Cheque or DD favouring
**ROTARY FOUNDATION (INDIA)**
payable at New Delhi Or online
www.endpolio.org/donate

* For special kit send Rs. 1000 as Cheque or DD favouring " ROTARY EPF ACCOUNT" Payble at Erode
AC No -919020065960568. Axis Bank, Gandhiji Road Erode .
IFSC Code - UTIB0002146

scan & view the videos

**For Details Contact : Your EPNC, DG, DRFC & Dist. Polio Chairman**



**Dr. Saga**
**Rtn. PDG Dr E.K. Sagadhevan,**
EPNC Zone 5 & 7
+91 99944 77725 pdgdrsaga@gmail.com

# வெற்றியும், தோல்வியும் சகஜமப்பா!

ரோட்டரி செய்திக்குழு

எந்த ஒரு காரியத்தை செய்தாலும் அதில் வெற்றியும் இருக்கும், தோல்வியும் இருக்கும். வெற்றி, தோல்வி இரண்டையும் ஒன்றாகப் பார்க்கும் மனப்பக்குவம் நமக்கு வேண்டும் என்றார் ரோட்டராக்ட்டர்களிடையே பேசிய ரோட்டரி இயக்குநர் பரத் பாண்ட்யா.

ரோட்டராக்ட் உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கூட்டம் அது. தோழர்களை சந்திக்கவும், பல புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும், தங்கள் செயலுக்கான அங்கீகாரம் தரும் பெரும் கூட்டம் அல்லவா அது.




*ரோட்டராக்ட் மாநில மாநாட்டில் RID பரத் பாண்டியா மற்றும் DRR குஷால் புவா.*

**இக்கூட்டத்தில் பரத் பாண்ட்யா ஆற்றிய உரையின் சாரம்சம் வருமாறு:**

ரோட்டரி வரலாற்றிலும், ரோட்டரி-ரோட்டராக்ட் உறவு முறையிலும் இன்று முக்கியமான நாள். COL 2019-ன் நோக்கமே ரோட்டரி இயக்கத்தில் இளைஞர்கள் பங்கு அதிகம் இருக்க வேண்டும் என்பது தான். ரோட்டராக்ட் இயக்கத்துக்கு ஊக்க சக்தி அளிக்க வேண்டும்.

ரோட்டராக்ட்டர்கள் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். ரோட்டரி இயக்கத்தில் சேர்வதன் மூலம் சமூகத்துக்கு ஏற்படும் நன்மைகளையும் அவர்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

இன்றைய உலகம், கடந்த காலங்களைவிட சிறப்பாகத்தான் இருக்கிறது. ஆனால், நாம்தான் எதையும் நேர்மறையாகச் சிந்திக்காமல் எதிர்மறையாக சிந்தித்து செயல்படுகிறோம். அதன்பின் நடைமுறை சரியல்ல என்று குற்றஞ் சாட்டுகிறோம். இந்த நடைமுறைகளை உருவாக்குவது யார்? யார் இதை மாற்றுகிறார்கள்? நானும் நீங்களும் தான் அதைச் செய்கிறோம். நாம் தான் நடைமுறையை உருவாக்குகிறோம். நாம் தான் அதை மாற்றுக்கிறோம். நாம் சரியாகச் செயல்பட வேண்டுமானால் தலைமை ஏற்பதற்கானத் தகுதியை நாம் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

திறன் பெற்றவர்களாக நம்மை உருவாக்கிக் கொள்ளவேண்டும். எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதில் நமது திறமையைக் காட்டிச் செய்வது தனி சிறப்பு. அதுவாக நடந்துவிடும் என்ற மனப்பாங்கு நம்மிடையே

இருக்கக்கூடாது. படிப்பு, தொழில், ரோட்டரி சமூக சேவை எதுவாக இருந்தாலும் நமது தனித்திறமையை வெளிப்படுத்த வேண்டும். நாம் செய்தது சூப்பர் என்று சொல்ல முடியாவிட்டாலும் சிறப்பானதாக இருக்க வேண்டும்.

**மூன்று மந்திரங்கள்:**
ரோட்ராக்டர்களான நீங்கள் அர்ப் பணிப்பு, செயல்திறன், தன்னம்பிக்கை ஆகிய மூன்றையும் வேதமந்திரங்களாக் கொள்ள வேண்டும்.

**அர்ப்பணிப்பு:** ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டால் அது சரியானது தானா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும். அடுத்து எத்தனை தடைகள் அல்லது இடையூறுகள் வந்தாலும் சவாலுடன் அதை நிறைவேற்ற வேண்டும். அதாவது எதையும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்தால் தான் உண்மைநிலை எட்டமுடியும்.

**செயல்திறன்:** எந்த ஒரு காரியத்தையும் வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமானால் அதற்கேற்ற செயல்திறனை நாம் வளர்த்துக்கொள்வது அவசியம். இதற்கு ரோட்டரி அளிக்கும் பயிற்சி உங்களுக்கு உதவும்.

**தன்னம்பிக்கை:** எல்லாவற்றையும்விட முக்கியமானது தன்னம்பிக்கை. ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கும் போதே இதில் நாம் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட வேண்டும். தன்னம்பிக்கை இருந்தாலே நாம் சரியான பாதையில் சென்று வெற்றி இலக்கை எட்டிவிட முடியும்.

ஒரு காரியத்தைச் செய்யும்போது அதில் வெற்றியும் ஏற்படலாம், தோல்வியும் ஏற்படலாம். வெற்றி, தோல்வி எதுவாத இருந்தாலும் அதை ஒன்றாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை இளைஞர்களுக்கு வேண்டும். நாம் செய்யும் எல்லா காரியத்திலும் நமக்கு வெற்றி கிடைத்துவிடாது. வெற்றியும், தோல்வியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். வெற்றி கிடைக்கும் போது அதை கொண்டாடலாம். ஆனால், தலைக்கனம் கூடாது. அது இருந்தால் தோல்வியை நோக்கிச் சென்று விடுவோம். தோல்வி என்பது இயற்கையானது. தோல்வி அடைந்து விட்டோமே என்பதால் மனம் தளர்ந்து விடக்கூடாது. தோல்விதான் வெற்றிக்கு முதற்படி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இதேபோல எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதில் நேர்மை முக்கியம். குறிப்பாக ரோட்டரி மற்றும் ரோட்ராக்டர்களுக்கு நேர்மை முக்கியமானது. நாம் செய்யும் வேலை, அதற்கான உதவிகள் கிடைப்பது, அதைச்செய்வதில் நமக்கு ஏற்படும் நற்பெயர் எல்லாமே உண்மை, நேர்மை இவற்றில்தான் அடங்கியிருக்கிறது.

நம்மிடம் இருக்கும் செல்வங்கள், வளங்களுக்கு எல்லாம் நாம் தாற்காலிக காப்பாளர்கள் தான். எனவே நம்மிடம் உள்ள செல்வங்களை நாம் அது இல்லாதவர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும். எதையும் பகிர்ந்துகொண்டால் அது பெருகக்கூடும். நாம் எல்லோருமே சில சமயங்களில் யாரோ நட்ட மரத்தின் காய்களையும், பழங்களையும், ச ாப்பிட்டு வருகிறோம். இப்போது நாம் மரங்களை, செடிகளை நட்டு வைத்தால் அவற்றை நாம் சாப்பிடா விட்டாலும் நமக்கு பின் வரும் இளைய தலைமுறையினர் அதன் மூலம் பலன்பெற முடியும்.

என்ன இளைஞர்களே! நான் இதுவரை சொன்னது உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். பொறுப்பு என்னும் சுமையை ஏற்று ரோட்டரி உலகத்தில் பயணிக்கத் தயாராகுங்கள்! என்றார்.

முன்னதாக 2018-2019-ஆம் ஆண்டில் சிறப்பாக செயலாற்றிய தற்காக DRR ஹன்ஸிகா சஹானிக்கு பாண்ட்யா விருது வழங்கி கௌரவித்தார். மேலும் புதிதாக DRR பதவியேற்கும் குஷால் புவாவையும் அவர் வரவேற்றார்.■




RID *பாண்டியா* IPDRR *ஹன்சிகா ஸஹானி,* DRR *குஷால் புவா,*
PDRR *ஓம் சாவ்லா மற்றும்* PDG *பிரஃபுல் சர்மாவுடன்.*

# தொழுநோயாளிகளுடைய வாழ்க்கையை மேம்படுத்துதல்

கிரண் ஜெஹரா

பீகாரின் குக்கிராமமொன்றைச் சேர்ந்த ராம் கலியுடைய கைகள், கால்களில் மரத்துப்போன உணர்வு வந்தபோது, அவருக்கு வயது 20தான். அவருடைய கணவர் அவரை உள்ளூர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அவருக்குத் தொழுநோய் வந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்ட போது, அவருடைய கணவர் அவரை மருத்துவமனையிலேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார், திரும்பிவரவே இல்லை. அடுத்த மூன்று நாள் செல்லுமிடமறியாமல் திகைத்தார் அவர். அவருடைய கால்கள் துவண்டன, விரல்கள் வளைந்தன. யாரோ ஒருவர், பிரயாக்ராஜில் (முன்பு அலகாபாத் என அழைக்கப்பட்ட நகரம்) நைனியிலிருக்கும் தொழுநோய் அமைப்பு மருத்துவமனைக்கு (TLM) அவரை அழைத்துவந்தார். அங்கு அவருடைய கை, கால்கள் திருத்த அறுவைச்சிகிச்சைகள் செய்யப்பட்டன. அவர்களால் என்னுடைய கையிலிருந்த சிதைவுகளைத் திருத்த இயலவில்லை, ஏனெனில், நோய் மிகவும் முற்றியிருந்தது. ஆனால், அவர்கள் என்னை அக்கறையாகக் கவனித்துக் கொண்டார்கள், ஊட்டச் சத்துமிக்க உணவு வழங்கி நல்ல இடத்தில் தங்கவைத்தார்கள், அதுவும் இலவசமாக.

இந்த மருத்துவமனையை அலகாபாத் ரோட்டரி சங்கம், RI மாவட்டம் 3120 ஆதரிக்கிறது. நாள்தோறும் சுமார் 450பேருக்கு இம்மருத்துவமனை சேவை வழங்குகிறது, பொது மருத்துவம், அறுவைச்சிகிச்சைச் சேவைகள், கண் மருத்துவம், தோல் மருத்துவம், ஃபிசியோதெரபி, வேலைசார்ந்த சிகிச்சை மற்றும் காலணி, உதவிக் கருவிகள் வழங்குதல் ஆகியவற்றில் பணியாற்றுகிறது. இம்மருத்துவ மனையில் 150 படுக்கைகளைக் கொண்ட சினேகாலயா என்ற தங்கும் வசதியும் உள்ளது, இதில் தங்குமிடமற்ற தொழுநோயாளிகளுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது.

இந்த நோயால் அவதிப்படுகிற வர்கள் சமூகத்திடம் தீவிரமான களங்கவுணர்வை அனுபவிக்கிறார்கள். தொழுநோய்க்குச் சிகிச்சை உண்டு, ஆனால், மக்களுடைய மனநிலையை மாற்றுவது சிரமம் என்கிறார் சங்கத்தின் முன்னாள் தலைவர் ரிதேஷ் சிங். TLM மருத்துவமனை, உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார் நோயாளிகளுக்குச் சேவை புரிகிறது. சமீபத்தில் இச்சங்கம் PRID C பாஸ்கர் முன்னிலையில் ரூ 2.36 லட்சம் மதிப்புள்ள தானியங்கிச் சப்பாத்தி செய்யும் இயந்திரத்தை நன்கொடையாக அளித்தது. இதில் ஒருமணி நேரத்தில் 800 ரொட்டிகள் செய்யலாம். இதன் மூலம் வளாகத்தில் உள்ள 400 பேருக்கு உணவளிக்கலாம் என்றார் சிங்.

ராம் கலி 40 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வளாகத்தில் வாழ்ந்து




*RC அலகாபாத் எலைட் சங்கத்தின் முன்னாள் தலைவர் ரித்தேஷ் சிங் (வலது பக்கம்) மற்றும் தலைவர் பூனம் ராய் ஆகியோர் தொழுநோய் மருத்துவமணியின் ரொட்டி தாயரிக்கும் இயந்திரத்தை தொடங்கி வைத்தனர்.*



*IPDG ஸ்துதி அகர்வால், சங்கத் தலைவர் பூனம் ராய், RC கரூர் மற்றும் RC அலகாபாத் எலைட் சங்க உறுப்பினர்கள் சேர்ந்து சலவை இயந்திரத்தை தொடங்கி வைத்தனர்.*

வருகிறார். இந்த மருத்துவமனை இல்லாவிட்டால், யாரும் என்னைக் கவனித்துக்கொண்டிருக்கமாட்டார்கள், அநேகமாக நான் தெருக்களில் பிச்சை எடுத்திருக்க நேர்ந்திருக்கும். ஆனால் இங்கு, எனக்கு எல்லாம் கிடைக்கிறது. எனக்கு வேறேதும் வேண்டாம். TLM வளாகத்துக்குள் தொழுநோயாளிகள் நம்பிக்கையை உணர்கிறார்கள் என்கிறார் சிங். வளைந்த விரல்கள், தோலில் திட்டு களைக் கொண்ட குழந்தைகள், கை, காலிழந்த இளைஞர்கள், மிக வயது முதிர்ந்த நோயாளிகள், அவர்கள்மீது உண்மையான பச்சாத்தாபம் கொண்ட மருத்துவர்கள், செவிலியர்கள் கொண்ட குழுவொன்று கவனித்துக் கொள்கிறது. அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதில், வாழ்க்கைகளை மேம்படுத்த அவர்களுக்கு உதவுவதில் எங்கள் சங்கம் பெருமைப்படுகிறது.''

நோயாளிகளுடைய துணிகளைச் சுகாதாரமானமுறையில் துவைக்கவும் காயவைக்கவும் வணிகரீதியிலான துவைக்கும் இயந்திரத்தை மருத்துவ மனை கோரியது. PRID C பாஸ்கர் உடனடியாக உதவ முன்வந்தார். இந்த ஆண்டு ஏப்ரலில், அவருடைய சங்கமாகிய RC கரூர், RID 3000, RC அலகாபாத் எலைட் இணைந்து, இந்த வளாகத்துக்குள் ரூ 6,66,700 விலையுள்ள துவைக்கும் அமைப்பை நிறுவின. இந்த இயந்திரம், RC கரூரின் 21 உறுப்பினர்கள் முன்னிலையில் IPDG ஸ்துதி அகர்வாலால் தொடங்கி வைக்கப்பட்டது. சமூகத்தின் விளிம்புகளில் வாழ்பவர்களுக்கு TLM மருத்துவமனையை இன்னும் மேம்பட்ட இடமாக ஆக்கியதற்காக PRID C பாஸ்கருக்கு நன்றி தெரிவித்தார் RC அலகாபாத் எலைட் தலைவர் பூனம் ராய்.■

# ரோட்டரி மாத இதழ் இப்போது நேபாளத்திலும்




ரோட்டரி செய்திகளைத் தாங்கி வரும் ரோட்டரி மாத இதழ் இப்போது நேபாளத்திலும் அச்சடிக்கப்பட்டு வெளியாகிறது. நேபாளத்தில் ரோட்டரி மாவட்டம் 3292-ஐ உள்ளடக்கிய 119 ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 5,000 ரோட்டரி உறுப்பினர்கள் இதன் மூலம் பயன்பெற முடியும். ரோட்டரி மாவட்ட ஆளுநர் கிரண்லால் சிரேஷ்ட மற்றும் பல்வேறு ரோட்டரி பிரமுகர்களின் இடைவிடாத முயற்சிதான் இதற்கு முக்கிய காரணமாகும்.

ஆகஸ்டு மாதம் காத்மாண்டுவில் நடைபெற்ற மாவட்ட உறுப்பினர்கள் பங்கேற்ற கருத்தரங்க கூட்டத்தில் நேபாளத்தின் ரோட்டரி மாத இதழ் வெளியிடப்பட்டது. ஏறக்குறைய 90 ரோட்டரி சங்கங்கள் மற்றும் 400-க்கும் மேலான பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.■

# குழந்தைகள் உயிரைக்காக்கும் அறக்கட்டளையின் அறப்பணி

ரோட்டரி செய்திக்குழு



RID *பரத் பாண்டியா மற்றும்* PDG Dr *பாலகிருஷ்ண இனாம்தார் குழந்தை ருத்ரா கலான்டேயுடன்.*

2012–13-ஆம் ஆண்டில் RID 3140 மூலம் குழந்தைகள் இதய அறுவைச் சிகிச்சை என்னும் திட்டத்தை PDG Dr பால் கிருஷ்ண இனாம்தார் தொடங்கிவைத்தார். அத்திட்டத்தின் மூலம் இதுவரை 2000-த்துக்கும் மேலான குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதிலான ரோட்டரி சங்கங்கள் மூலம் முதலாண்டில் கோகிலாபென் திருபாய் அம்பானி மருத்துவமனை (KDAH) மூலம் 1000-த்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ரோட்டரி நிதியுதவியுடன் இலவசமாக இதய அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மும்பையில் உள்ள மேலும் ஐந்து மருத்துவ மனைகள் இத்திட்டத்தில் சேர்ந்து கொண்டு குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்துள்ளன. இதே போல மாவட்டத்தில் உள்ள 3141, 3142 உள்ளிட்ட அனைத்து ரோட்டரி சங்கங்களும் இதில் பங்கேற்றுள்ளன.

அண்மைக்காலத்தில் இத்திட்டத்துக்கு சர்வதேச அளவில் நிதியுதவி கிடைத்துள்ளது. RC மும்பை வெஸ்ட்கோஸ்ட், RC டினார் & பாந்த்ரா RID 3141, சர்வதேச ஸ்பான்சர்களான RC வல்சால், RID 1210, இங்கிலாந்து மற்றும் ரோட்டரி அறக்கட்டளைகள் இதற்கு நிதியுதவி அளித்துள்ளன. நிதியுதவியாக கிடைத்துள்ள 69,500 டாலர்கள் 50 குழந்தைகளுக்கான இதய நோய் அறுவை சிகிச்சைக்கு பயன் படுத்தப்படும். ஊரகப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தி குழந்தைகளின் இதயத்தில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அவர்களுக்கு கோகிலாபென் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க பயன்படும் என்றார். சர்வதேச அளவில் நிதி கிடைக்க காரணமாக இருந்தவரும் திட்ட அமைப்பாளருமான PDG இனாம்தார்.

இதயத்தில் ஓட்டை இருந்ததால் மூச்சு விடுவதில் சிரமப்பட்ட 8 மாத குழந்தை ருத்ரா கலாந்தேயின் அவசர அறுவைச்சிகிச்சைக்கான செலவு தொகையை காசோலையாக கோகிலாபென் மருத்துவமனை அதிகாரியிடம் RC வெஸ்ட் கோஸ்ட் சார்பில் இயக்குநர் பரத் பாண்ட்யா வழங்கினார்.

கோகிலாபென் மருத்துவமனையில் நடந்த நிகழ்ச்சியில் ரோட்டரி 3141 மற்றும் ரோட்டரி 3142 சங்கங்களின் உறுப்பினர்களின் பணி களையும் அவர்களின் நன்கொடை உள்ளத்தையும் வெகுவாக பாராட்டினார் பரத் பாண்ட்யா. ஏழை மக்களின் நலன் காக்க உலகம் முழுவதும் உள்ள ரோட்டரியினர் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். டாக்டர் சுரேஷ்ராவ், டாக்டர் சந்தோஷ் ஷெட்டி, நாராயணன் ஆகியோர் ரோட்டரி அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.■

*கோகிலாபென் மருத்துவமனையில்* Dr *சுரேஷ் ராவ் ரோட்டரியின் குழந்தைகள் இதய அறுவை சிகிச்சைக்கான முதல் காசோலையை பெறுகிறார்.*



# மொரீஷியஸில் மாறுகண் சிகிச்சை

ரோட்டரி செய்திக்குழு



**இடதிலிருந்து:** Dr *அத்துல் சேத்,* Dr *சித்தார்த் கேசர்வானி மற்றும் மொரீஷியஸின்* RC *ஃபீனிக்ஸ் உறுப்பினர்கள்.*

RC தானே, RID 3142வை சேர்ந்த ரோட்டரி கண் மருத்துவர்களின் உதவியுடன், மொரீஷியஸில் இருபத்தெட்டு நோயாளிகள் மாறுகண்ணுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் தீர்வு பெற்றார்கள். கண் மருத்துவர், மொரீஷியஸ் RC ஃபீனிக்ஸ் உறுப்பினனரான Dr ஹர்ஷா பதக் எங்கள் சங்கத்துக்கு வந்திருந்தார். மொரீஷியஸில் பல குழந்தைகள் மாறுகண்ணால் அவதிப்படுவதாகச் சொன்னார். அவர்களுக்குத் திருத்த அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது, ஆனால், அவர்களுக்குச் சிகிச்சை யளிக்கக்கூடிய தகுதி பெற்ற அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் அந்நாட்டில் இல்லை என்றார் Dr ஹர்ஷா பதக். அது தான் இப்பணியின் தொடக்கம் என்றார் சங்கத்தின் முன்னாள் தலைவர் அஜய் கேல்கர்.

கண் அச்சின் விலகலைத் தான் மாறுகண் அல்லது ஸ்ட்ராபிஸ்மஸ் என்கிறோம். இப்பார்வைக் குறை பாட்டைச் சரி செய்ய, இதற்கென்று வடிவமைக்கப்பட்ட கண்ணாடிகளை அணியலாம், அல்லது அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம். Dr சித்தார்த் கேசர்வானி, Dr அதுல் சேத் ஆகிய இரு கண் மருத்து வர்கள், ஆனந்த் காலெ, அவருடைய மனைவி கல்யாணி காலெ, ஸ்மிதா மஹாஜன் மற்றும் கேல்கர் ஆகிய நான்கு தன்னார்வலர்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவினர், RC ஃபீனிக்ஸ் உறுப்பினர்களுடன் ஒருங்கிணைந்து செயல் பட்டார்கள், மொரீஷியஸ் மோகாவிலுள்ள சுப்ரமணிய பாரதி அரசு மருத்துவ மனையில் 28 அறுவைச்சிகிச்சைகளை நடத்தினர்.■

---

## கோரக்பூரில் பள்ளிகளை உருவாக்கும் ரோட்டரியின்-CSR திட்டம்

உத்திரப்பிரதேசத்தின் கோரக்பூரிலுள்ள 10 அரசுப்பள்ளிகளின் வகுப் பறைகளுக்குக் கற்றலைச் சுவையாக்கும் புதிய வசதிகளைப் பரிசளித்தது ரோட்டரி-CSR, இதன் மூலம் 2,400க்கும் மேற்பட்ட மாணவர்கள் (இதில் 60% ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகள்) பலன்பெற்றார்கள்.

ஜப்பானின் டோயோ பொறியியல் நிறுவனம் கோரக்பூரில் ஓர் உரத் தொழிற்சாலையை அமைக் கிறது, இந்நிறுவனத்தின் CSR நிதியான $30,000, TRF மற்றும் RC ரேபிட் நகரம், தெற்கு டகோடாக்கு, RID 5610 வழங்கிய இதே அளவு நல்கை ஆகியவற்றால் இந்தப் பெரிய திட்டம் சாத்தியமானது. $60,128 நிதித் தொகுப்புடன் தொடங்கிய இத்திட்டத்தை RC கோரக்பூர், RID 3120, 'மகிழ்ச்சி பள்ளித் திட்டத்தின் கீழ் அமல்படுத்துகிறது.



RC *கோரக்பூர் உறுப்பினர்கள் அரசுப் பள்ளிக் குழந்தைகளுடன்.*

இதன்படி வகுப் பறைகளுக்கு மின் விசிறிகள், மேசைகள், இருக்கைகள், கழிப்பறைக் கட்டடங்கள், கைகழுவும் நிலையங்கள், குடிநீருக்கான RO அமைப்புகள் வழங்கப் பட்டன.

ஸ்மார்ட் வகுப்பு அறைகளும் வடிவமைக்கப் பட்டன. இப்பள்ளிகளில் புதிய சேர்க்கைகள் 10%க்கு மேல் அதிகரித்துள்ளதாகத் திட்ட ஒருங்கிணைப்பாளர் எம் பி கண்டோய் தெரிவித்தார்.■



# பிரிட்டிஷ் இந்தியாவின் "லிட்டில் இங்கிலாந்து"

V முத்துக்குமரன்

KGF *கிளப் ஹவுஸ்*

சிறப்பு ஏற்பாடு

உங்களுக்குத் தெரியுமா? ஆசியாவிலேயே டோக்கியோவுக்கு அடுத்தபடியாக மின்சாரம் பெற்ற நகரம், பெங்களூருக்குக் கிழக்கே சுமார் 100கிமீ தொலைவிலுள்ள கோலார் தங்க வயல்தான். அதுமட்டுமா? உலகின் மிக நீண்ட பயணிகள் ரயிலான "ஸ்வர்ணா எக்ஸ்பிரஸ்" (20 பெட்டிகளுக்குமேல்) இந்நகரத்தின் வழியாகதான் ஓடுகிறது. இந்தியாவில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பணியாளர்களை வேலைக்குச் சேர்த்த முதல் தனியார் நிறுவனமும் இதுவாக தான் இருக்கும்.

19ம் நூற்றாண்டு தொடங்கும்வரை, பரந்த மைசூர் பகுதியைத் திப்பு சுல்தானும் உடையார் அரச ர்களும் பகிர்ந்துகொண்டார்கள். பிரிட்டிஷாருடைய பெரிய எதிரியான திப்பு சுல்தான் 1799ல் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் இறந்தார். அதன்பிறகு, பிரிட்டிஷார் இந்தப் பகுதியை ஒன்றாக்கி உடையார்களுக்கு வழங்கினார்கள். அப்போதிலிருந்து, கிழக்கிந்திய நிறுவனத்துடைய விசுவாசமான குத்தகைதாரர்களாக அவர்கள் இந்தப் பகுதியை ஆண்டார்கள் என்கிறார் கோலார் தங்க வயல்பற்றி ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்ற பத்திரிகையாளர் S ஸ்ரீகுமார்.

கோலாரில் பலரும் தங்கத்தைக் கண்டறிந்திருப்பதாகச் செய்திகள் வெளியானபோது, ஜான் வாரென் அப்பகுதியை ஒரு விரிவான ஆய்வுக்குட்படுத்தினார். 1804ல், இங்கு கிடைக்கும் தங்கத்தைப்பற்றிப் புகழ்பெற்ற Asiatic Journalல் ஆய்வுக்கட்டுரையொன்றை வெளியிட்டார்.

### தங்க வேட்டை

இந்தத் தங்கச் சுரங்கத்தைப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்த ஆங்கிலேயர்கள், 1860கள்



வரை அறிவியல் பூர்வமற்ற பல வழிமுறைகளைப் பின்பற்றினார்கள். 1865ல், மைக்கேல் ஃபிட்ஜெரால்ட் லாவெல்லெ என்ற இளம் போர் வீரர் ஓர் அறிவியல்பூர்வமான வழிமுறையைப் பின்பற்றிக் கோலாரில் ஏராளமான தங்கம் இருப்பதைக் கண்டறிந்தார். மைசூர் அரசர் உடையாரிடம் தங்கச் சுரங்கம் அமைக்க அனுமதி கோரினார்.

ஆனால், அவருக்குப் போதுமான வளங்கள், தொழில்நுட்பத் தகவல்கள் கிடைக்கவில்லை. ஆகவே, சுரங்க உரிமையை ஜார்ஜ் டி லா போயர் பெரெஸ்ஃபோர்ட் என்ற ராணுவ மேஜருக்கு விற்றுவிட்டார். இவர் பெரிய பணக்காரர், 1870களின் மத்தியில் அரசு ஒப்பந்ததாரராகவும் பணியாற்றியவர் என்கிறார் ஸ்ரீகுமார்.

1876ல், தங்கத்தைத் தோண்டி யெடுப்பதற்காகப் பல பணக்கார ஆங்கிலேயர்களுடன் கூட்டமைப்பை உருவாக்கினார் பெரெஸ்ஃபோர்ட், சென்னையைச் சேர்ந்த வணிக வங்கியான அர்பத்னாட்டையும் அதில் இணைத்தார். அதன்பிறகு, அவர் ஜான் டெய்லர் சன்ஸ் நிறுவனத்தின் முக்கியப் பங்குதாரரானார். இந்நிறுவனம் பல உழைப்பாளர்கள், பொருட்கள், வளங்களின்மூலம்



உபயோகப்படுத்தப்படாத சுரங்கத்தண்டு.

1880ல் தங்க வேட்டையைத் தொடங்கிவைத்தது. இந்தியா விடுதலை பெற்றபிறகும் (1956வரை) இந்த ஆங்கிலேய நிறுவனம் இங்கு இயங்கிவந்தது வியப்புதான். காரணம், இந்நிறுவனத்தின் அனுபவம் காரணமாக, இவர்களையே தொடர்ந்து சுரங்கங்களை இயக்குமாறு கேட்டுக்கொண்டார் பிரதமர் நேரு என்கிறார் அவர்.



பிரிட்டிஷர்கள் கட்டிய நீர் தொட்டி.

### தொழிலாளர் நெருக்கடி

1900களிலிருந்து 1940கள்வரை இந்தச் சுரங்கம் சிறந்து விளங்கியது. உலகின் இரண்டாவது மிக ஆழமான தங்கச் சுரங்கமான இதில் 40க்கும் மேற்பட்ட குழாய்கள் தரைக்கடியில் 3-4 கி.மீ., வரை சென்றன. சுரங்கங்களின் மொத்த நீளம் 1,400கிமீ. தொழிலாளர் சம்பளம், சாத்தியமற்ற தொழில்நுட்பம், குறைந்த வருவாய் ஆகியவற்றால், இந்தச் சுரங்கம் நஷ்டம் தரத்தொடங்கியது. ஆகவே, சுரங்கப்பணி 2001ல் நிறுத்தப்பட்டது என்கிறார் D ரவிசங்கர் (past president RC Bangalore Orchards, RID 3190).

KGF மூடப்பட்டபோது, அதில் 10 குழாய்கள் இயங்கிக்கொண்டிருந்தன. பாரத் கோல்ட் மைன்ஸ் (BGML) மூடப்பட்டபோது, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்தார்கள். அவர்களுக்கு வேலை வழங்குவதற்காக பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட் (BEML) என்ற புதிய நிறுவனமொன்றைத் தொடங்கியது அரசாங்கம்.

Rtn நீல் மைக்கேல் ஜோசஃப் (RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ்) கோலாரைச் சேர்ந்தவர், ஒரு காலத்தில் அங்கு ஆயிரக்கணக்கான பிரிட்டிஷார் வாழ்ந்ததை மகிழ்ச்சியுடன் எண்ணிப்பார்க்கிறார். அப்போதெல்லாம் கோடையின் உச்சத்தில்கூட, சராசரி வெப்பநிலை 32 டிகிரி செல்சியஸைத் தாண்டாது. நிறைய மரங்கள், ஆண்டுமுழுவதும் குளிர்ந்த வானிலை, சுரங்கத்தில் பாதுகாப்பான வேலை போதாதா? ஆங்கிலேயர்கள் குடும்பத்துடன் இங்கு வந்து தங்கிவிட்டார்கள் என்று நினைவுகூர்கிறார் அவர்.

தங்கச் சுரங்கத்தில் மேலாளர், கண்காணிப்பாளர் வேலைகளை பிரிட்டிஷார் ஏற்றுக்கொண்டார்கள், தொழிலாளர்கள் முதன்மையாகச் சென்னை மாகாணத்திலிருந்து வந்த தமிழர்கள். கோலாரில் முன்பிருந்த பெரிய பிரிட்டிஷ் குடியிருப்புகளைச் சுட்டிக்காட்டும் காலனிய வீடுகள் பார்வையாளர்களை விசித்திரமான முறையில் கவர்கின்றன. அப்போது கோலார், இந்தியாவின் லிட்டில் இங்கிலாந்து என்று அழைக்கப்பட்டது. பல ஆங்கிலேயர்கள் இங்கு தங்கி விடத் தயாராக இருந்தார்கள் என்கிறார் ஜோசஃப்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# New Directors and Trustees take office

The **RI Board of Directors** has 19 members — RI president, president-elect and 17 directors, who were nominated by their zones and elected at the RI Convention. The Board manages Rotary International affairs and funds in accordance with the RI Constitution and Bylaws. Nine new directors and the president-elect took office on July 1.

### Tony (James Anthony) Black, RC Dunoon, Scotland



James Anthony Black is a veterinary surgeon who ran his own practice covering western Scotland's Cowal peninsula before retiring in 2008. He has served on the boards of numerous sporting organisations.

Since joining Rotary in 1982, Black has served as RIBI's youth activities chair and RI Youth Exchange Committee Chair. Black volunteered during an NID in India in 2012. He has served Rotary as Public Image Resource Group coordinator, vice-chair of the CoL Review Committee, and training leader, which he says was one of his most memorable experiences in the organisation. "You've got people from all over the world," he says. "It was phenomenal having them all talking to each other — it gave me such a buzz."

Black and his wife, Elspeth, who is also a Rotarian, are Bequest Society members.

### Mário César Martins de Camargo RC Santo André, Brazil



Mário César Martins de Camargo was president of Gráfica Bandeirantes and is now a consultant to the print industry in Brazil. He serves on the board of Casa da Esperança (House of Hope), a hospital sponsored by his club since 1953.

A Rotarian since 1980, de Camargo was TRF Trustee in 2015–19. He and his wife, Denise, are Major Donors and Benefactors of TRF.

### Jan Lucas Ket, RC Purmerend The Netherlands



Jan Lucas Ket retired in 2011 from Waterland Hospital in Purmerend, where he had been a paediatrician for 30 years — treating 20,000 children and one baby gorilla — and served as chair of the hospital's medical staff. He is now vice-president of the Waterland School for Music.

Ket coordinated logistics for a package grant scholarship awarded to an Indian sanitation official to study at the IHE Delft Institute for Water Education in the Netherlands. A Rotarian since 1988, Ket has been a member of TRF's Cadre of Technical Advisers and a lecturer on Rotary's role in preventive healthcare for mothers and children at various international conferences. During his year as club president, he co-founded RC Jihlava, Czech Republic.

Ket and his wife, Milou, have hosted RYE students and GSE members. They are Major Donors, Benefactors and Bequest Society members.

### Kyun Kim, RC Busan-Dongrae, Korea



Kyun Kim is owner and executive chairman of a chemical products enterprise. He joined Rotary in 1993. "When I first became club president, I thought that was the most I could give to Rotary, so that year I gave Rotary all I had. But that experience opened my eyes to the bigger service of Rotary, and I saw that I could do much more," says Kim.

As district governor, Kim inducted 1,439 new Rotarians, the most of any Korean district for 2011–12. He has served as ARPIC and member of the board for *The Rotary Korea*, the regional Rotary magazine. Kim received the Service Above Self Award in 2014. He and his wife, Hye-Suk, are AKS Chair's Circle members .

### Floyd A Lancia, RC Anthony Wayne (Fort Wayne), Indiana



Floyd Lancia began his professional life in education, first as a secondary school teacher and band director, and later as a school superintendent. He spent the second part of his career on his real estate development and construction business, which he has since sold. He has served on the boards of several organisations, including the

Community Foundation of Greater Fort Wayne and the Allen County-Fort Wayne Historical Society.

Lancia joined Rotary in 1970 and spearheaded TRF grant projects that have provided free eye surgeries in Nicaragua and clean water for communities in Mexico. He is a recipient of TRF's Citation for Meritorious Service and Distinguished Service Award, and the RI's Service Above Self Award. He and his wife, Betty Lou, are members of the AKS and Bequest Society and sponsors of Rotary Peace Fellows.

### Bharat S Pandya, RC Borivli, India



Bharat Pandya is a practising general and laparoscopic surgeon. He and his wife, Madhavi, a gynaecologist, own a private hospital in Mumbai. He is a fellow of the International College of Surgeons and has served on the board of the Jan Shikshan Sansthan vocational training institute, sponsored by the Indian government.

Pandya joined Rotary in 1989. During his year as governor of RID 3140, his district contributed over $2 million to TRF, making it the top contributor worldwide for 2006–07. He has led numerous projects, including water and sanitation projects funded by TRF grants that installed check dams so that villagers need not walk long distances to collect water.

Pandya has served as regional RI membership coordinator, training leader and member of Rotary's Membership and Convention Promotion Committees and India PolioPlus Committee. He has received RI's Service Above Self Award and TRF's Citation for Meritorious Service and Distinguished Service Award. He and Madhavi are Level-2 Major Donors to the Foundation.

### Kamal Sanghvi, RC Dhanbad, India



A graduate of Kasturba Medical College in Manipal, with a degree in pharmaceutical sciences, Kamal Sanghvi is managing director of a family-owned banking, financing and construction conglomerate.

Sanghvi joined Rotary in 1991 and has served RI as training leader, committee member and RIPR. He helped establish 28 vocational training centres for women and coordinated 11 polio corrective surgery camps that treated thousands of patients. Sanghvi says one of his proudest achievements was leading a Rotary initiative that helped 200 Pakistani children get heart surgeries in India.

He has received the Service Above Self Award and TRF's Citation for Meritorious Service and Distinguished Service Award. He and his wife, Sonal, who is also a Rotarian, are Major Donors and Bequest Society members.

### Johrita Solari, RC Anaheim, California



Johrita Solari is board chair and chief visionary officer of Solari Enterprises Inc, a property management company specialising in affordable rental housing. The company, which she co-founded with her husband, Bruce, was inspired by Rotary's guiding ethical principles. "The Four-Way-Test hangs in our lobby, and every team member sees it as they come into work," Johrita says.

She joined Rotary in 1993. As governor of District 5320, she organised that district's first million-dollar dinner fundraiser for TRF and helped it become the second known district consisting of 100 per cent Paul Harris Fellow clubs. She has served on the committee for the Foundation's Peace Major Gifts Initiative.

The Solaris are members of the same Rotary club and are Paul Harris Fellows, Major Donors and AKS members. During Solari's second year as director, her daughter Gianna will serve as a district governor, making it the first time in Rotary history that a mother and daughter have served in these two leadership roles simultaneously.

### Stephanie A Urchick, RC McMurray Pennsylvania



Stephanie Urchick is partner and COO of Doctors at Work LLC, a consulting and training company. A Rotarian since 1991, Urchick first joined the home club of PRIP Chuck Keller, who served as her mentor. A student of several Slavic languages, she has mentored new Rotarians in Ukraine and coordinated a grant project in Poland.

Urchick has served TRF trustee and chair of the RI Strategic Planning Committee and the Foundation's Centennial Celebration Committee. She is a Major Donor and Bequest Society member.

The **Trustees of The Rotary Foundation** manage the business of the Foundation. The RIPE nominates the trustees, who are elected by the RI Board to four-year terms. The trustee chair-elect and four new trustees took office on July 1.

### KR Ravindran, Chair-elect 2019–20 RC Colombo, Sri Lanka



KR Ravindran is a third-generation Rotarian, joining Rotary at age 21. As RI President in 2015–16, he introduced the

Rotary Global Rewards programme and led a delegation of about 9,000 Rotarians to the Vatican for an audience with Pope Francis at St Peter's Square.

Ravindran was the first president of the Sri Lanka Anti-Narcotics Association, which today is the leading agency fighting drug addiction in Sri Lanka. He headed a national committee consisting of Rotary, his country's health ministry and UNICEF for eradication of polio, and worked closely with UNICEF to negotiate a ceasefire in the civil war with the northern militants to facilitate NIDs. Sri Lanka became the first country in South Asia to become polio-free. He also headed a Rotary project to build 25 modern schools across the country to replace those destroyed by the 2004 tsunami at a cost of over $12 million.

He is recipient of TRF's Citation for Meritorious Service, Distinguished Service Award and Service Award for a Polio-free World. His country conferred on him the title of "Jewel of Sri Lanka" and released a postage stamp in his honour.

### Jorge Aufranc, RC Guatemala Sur, Guatemala



Jorge Aufranc is a chemical engineer and director of Corporación Instatec which designs and builds networking telecom systems. He first saw the power of TRF in 1995, when he led a project to bring clean drinking water to an orphanage using matching grants. Today, he is the primary contact for the $600,000 WinS competitive grant programme in Guatemala, to bring water, sanitation and hygiene to 48 schools in the country.

Aufranc has served Rotary as RI director; founder and president of *Rotary en el Corazón de las Americas*, the Rotary regional magazine for Central America; and director of the Water and Sanitation Rotarian Action Group. He and his wife, Débora, participated in an NID in Moradabad in 2009. He is a Rotary Foundation Benefactor, Major Donor and Bequest Society member, and recipient of the Citation for Meritorious Service.

### Hipólito S Ferreira, RC Contagem-Cidade Industrial, Brazil



Hipólito Ferreira is an engineer and president of a group of engineering and mining companies led by Paineira Engenharia. He is the director of SICEPOT, the State of Minas Gerais Heavy Construction Industry Association.

A Rotarian since 1970, Ferreira has served as RI director, training leader, RRFC, member of the Operations Review Committee, and chair of the Literacy Task Force for Latin America.

Ferreira is recipient of TRF's Citation for Meritorious Service and Distinguished Service Award. His three sons participated in Interact, Rotaract, and Rotary Youth Exchange, and two of them are Rotarians. Ferreira and his wife, Marilene, are Benefactors and Major Donors.

### Jennifer E Jones, RC Windsor-Roseland, Ontario




Jennifer Jones is president and CEO of Media Street Productions Inc, a television production company in Windsor. She was RI vice-president in 2016–17. She is co-chair of the End Polio Now: Make History Today campaign to raise $150 million. She has been a leader in cultivating experiential fundraising opportunities such as Rotary's Polio Golf Day with Jack Nicklaus in Jupiter, Florida, which raised over $5.25 million for polio eradication.

Jennifer has received the Service Above Self Award, Citation for Meritorious Service, YMCA Peace Medallion and the Queen's Diamond Jubilee Medal. She was the first Canadian to receive Wayne State University's Peacemaker of the Year Award.

Jennifer and her husband, Nick Krayacich, are members of AKS, Paul Harris Society and Bequest Society.

### Ian HS Riseley, RC Sandringham Australia



While RI President in 2017–18, Ian Riseley challenged every Rotary club to plant one tree per member to increase Rotarian involvement in environmental issues. He estimates at least three times that many were planted, likely upwards of three million trees. "I was really thrilled at the way at which the Rotary world embraced my request," he says. "Everywhere we went, they were planting trees."

Riseley is a chartered accountant and principal of Ian Riseley and Co, a firm he established in 1976. His honours include the AusAID Peacebuilder Award from the Australian government in recognition of his work in East Timor, the Medal of the Order of Australia for services to the Australian community, the Distinguished Service Award and the Regional Service Award for a Polio-Free World from TRF.

Riseley and his wife, Juliet, a past district governor, are Rotary Foundation Major Donors and Bequest Society members. They live on seven hectares at Moorooduc, where they practice their personal philosophy of sustainable and organic living.

© The Rotarian.

# பஞ்சாபில் மாதச்சுழற்சிச் சவால்களைச் சமாளிக்கும் ரோட்டராக்டர்கள்

V முத்துகுமரன்



*ரோட்ராக்ட் சங்கம் ஆஸ்டின் இன்ஸ்டியூட்டின் பயிற்சியாளர் அஜித்பால் சிங் நஃப்ரே, Rtr தீபிகா சர்மா மற்றும் அரசு மேல்நிலை பள்ளி மாணவிகள்.*

பேசப்படாதவற்றைப் பேசும் விதமாக, அம்ரித்ஸர் பால் சராய் கிராமத்தின் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாதச்சுழற்சிச் சுகாதாரம் பற்றிய கருத்தரங்கமொன்றுக்கு ஏற்பாடு செய்தது ஆஸ்டின் அமைப்பு களின் ரோட்ராக்ட் சங்கம், RID 3070. இந்நிகழ்வின் நோக்கம், மாதச்சுழற்சி பற்றிய சமூகச் சங்கடவுணர்வை நீக்குவது.

பெண்கள் பொதுவாக வலி, தசைப்பிடிப்பு, நோய்த்தொற்று பற்றித் தங்கள் பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்களிடம் இயல்பாகப் பேசத் தயங்குவார்கள். அவர்களில் பலருக்கு மாதச்சுழற்சியின் போது என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்று தெரிவதில்லை. நாங்கள் அவர்களுடன் உரையாடினோம், கேள்விகளுக்குப் பதிலளித்தோம், நிகழ்வின் நிறைவில் எங்களிடம் இயல்பாகப் பேசினார்கள்'' என்றார் இச்சங்கத்துடைய IPP, மாவட்ட மஹாதன் ஒருங்கிணைப்பாளர் Rtr தீபிகா ஷர்மா.

இந்நிகழ்வின் போது, பெண்களுக்கு 1,000 சானிட்டரி பேட்களை ரோட்ராக்டர்கள் வழங்கினார்கள். பள்ளி முதல்வர் நரீந்தர் கௌர், ஊழியர்களுடன் இணைந்து இந்தக் கருத்தரங்கை வெற்றிகரமாக ஒருங்கிணைத்தார் திட்டத் தலைவர் குர்லீன் கௌர்.

சங்கத்தின் பயிற்சியாளர், ஜலந்தரிலுள்ள ஆஸ்டின் விமானப் பணிப்பெண்கள் பயிற்சி நிறுவன இயக்குநர் அஜித்பால் சிங் நஃப்ரே, பெண்களுக்குத் தற்காப்புக்கலைகள், எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதுபற்றிப் பல மதிப்புமிக்க குறிப்புகள், ஆலோசனைகளை வழங்கினார். இந்த MH கருத்தரங்கின் மூலம் 70 மாணவிகள், 30 ஊழியர்கள் பலன்பெற்றார்கள்.

இதே சங்கத்தினர், IPDG பர்ஜேஷ் சிகல் ஆதரவுடன், ஜலந்தரிலுள்ள காந்தி நகரைச் சேர்ந்த தேவையுள்ள பெண்களுக்கு 500 சானிட்டரி பேட்களையும் விநியோகித்தார்கள். மாதச்சுழற்சிச் சுகாதாரத் திட்டத்தில் 35 ரோட்ராக்டர்கள் பங்கேற்றார்கள்.

RC ஜலந்தர் சிவில் லைன்ஸைச் சேர்ந்த Rtn நஃப்ரே, அக்டோபர் 2018ல் இச்சங்கம் தொடங்கியதிலிருந்து ரோட்ராக்டர்களுக்கு வழிகாட்டி வருகிறார். அவர்களுடைய முதன்மை யான திட்டம், 'மேரி பெஹ்சான்' (என் அடையாளம்), ஜலந்தர் அருகிலுள்ள கிராமப் பெண்களுக்கு எழுத்தறிவு தந்து அவர்களை சொந்தக் காலில் நிற்கவைக்கிறது, நல்ல வாழ்வாதாரம் வழங்குகிறது. பெண்கள் முன்னேற்றத்தை நாங்கள் மிகவும் விரும்புகிறோம், அதில் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்'' என்றார் சங்கத் தலைவர் ரஞ்சித் சிங் நஃப்ரே.

இந்த ஆண்டிலிருந்து இச்சங்கம் அபீஜே கல்லூரி அருகிலுள்ள ஒரு பூங்காவையும் பராமரிக்கத்தொடங்கியுள்ளது. இங்கு வசிப்போருடைய நலவாழ்க்கைக்காக யோகா வகுப்புகள் நடத்தப்படும்,'' என்றார் அவர். ஜலந்தரில் இன்னும் பல பூங்காக்களில் இதுபோன்ற அழகியல் பணிகளை வழங்குமாறு நகராட்சியிடம் விண்ணப்பித்துள்ளது ரோட்ராக்ட் சங்கம்.■

# இளம் சாதனையாளருக்கு 'சிட்டலே' விருது

கிரன் ஜஹ்ரா

மறைந்த முன்னாள் ரோட்டரி உறுப்பினர் S L சிட்டலே நினைவாக, ரோட்டரி கிரிஷ் சிட்டலே இளம் சாதனையாளர் விருதை வில்வித்தையில் சிறந்த வீரரான P V சாய்சீனிவாச னுக்கு வழங்கி கௌரவித்துள்ளது மெட்ராஸ் ரோட்டரி சங்கம், RID 3232. கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற சங்கத்தின் 91-ஆம் ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் இவ்விருது வழங்கப்பட்டது.

சென்னையைச் சேர்ந்தவரும் பல ஆண்டுகளாக சமூக சேவையில் ஈடுபட்டு வந்தவரும், பெரும் நன்கொடையாளருமான S L சிட்டலே நினைவாக அவரது பெயரிலேயே இந்த விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விருது பெறுபவர் 14 வயதுக்கு குறைவானவர்களாக இருக்க வேண்டும். சமூகத்திற்கு சிறந்த சேவையாற்றிவர்களாக இருக்க வேண்டும். அவரின் குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ. 2 லட்சத்துக்கு மேல் இருக்கக் கூடாது. பெற்றோர்கள் ரோட்டரி சங்க உறுப்பினர்களாக இருக் கக்கூடாது என்று நிபந்தனை விதித்து ள்ளார் சிட்டலே, என்றார் முன்னாள் ஆளுனர் J B காம்தார்

இந்த விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட வேண்டும். நாம் அளிக்கும் விருது, நிதியுதவி அவரின் குறிக்கோளை எட்ட உதவுவதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம் என்றார் காம்தார்.

முதன்முறையாக சிட்டலே இளம் சாதனையாளர் விருது, ஆந்திர மாநிலம், கடப்பாவைச் சேர்ந்த 5-ஆம் வகுப்பு மாணவர் சீனிவாசனுக்கு வழங்கப்பட்டது. படிப்பில் சிறந்து விளங்கும் இந்த மாணவர், மாநில மற்றும் தேசிய அளவிலான வில்வித்தைப் போட்டியில் பங்கேற்று 33 பதக்கங்களை வென்றுள்ளார்.2019-ஜூலையில், நியூஸிலாந்து நாட்டில், வெலிங்டன்

*RC மெட்ராஸ் செயலாளர் சேஷசாய், தலைவர் Dr விஜயபாரதி RID கமல் சங்வி மற்றும் PDG J B காம்தார் ரோட்டரி கிரிஸ் சிட்டலே இளம் சாதனையாளர் விருது பெற்ற P V சாய்சீனிவாசனை கௌரவிக்கின்றனர்.*



நகரில் நடைபெற்ற உலக உள்அரங்க வில்வித்தை போட்டியிலும் இவர் பங்கேற்றுள்ளார். 15 நிமிடங்களில் அதிக அம்புகளை எய்து ஆசிய சாதனைப் புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளார் இந்த 12 வயது மாணவர்.

இதுவரை தாம் பெற்ற பதக்கங்களை தனது கோட்டில் அணிந்தபடி கம்பீரமாக மேடைக்கு வந்த அந்த மாணவருக்கு ரோட்டரி இயக்குநர் கமல் சங்வி விருது வழங்கினார். அப்போது மாணவரின் பெற்றோரும் உடன் இருந்தனர்.

சாய் சீனிவாசன் சாதனை கண்டு நான் பெருமைப்படுகிறேன். பணம் மட்டுமே வாழ்க்கையல்ல: மற்றவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை உருவாக்கும் போதுதான் நமக்கு மனநிறைவு ஏற்படுகிறது என்றார் கமல் சங்வி.

கடப்பாவில் இணையதள மையம் நடத்திவரும் மாணவரின் தந்தை கோபிநாத் நன்றி தெரிவித்துப் பேசுகையில், எனது சொற்ப வருமானத்தில் அவனது படிப்புக் கட்டணம், வீட்டு வாடகையை கொடுத்து குடும்பம் நடத்த வேண்டியிருந்தது. அவனால் நியூஸிலாந்தில் நடைபெறும் போட்டிக்குச் செல்லமுடியுமா என்ற கவலையும் எனக்கு இருந்தது. இந்த விருது அவனுக்கு பெரிய உந்துதலா இருக்கும். ஒலிம்பிக் போட்டியில் அவன் நிச்சயம் தங்கம் வெல்வான் என்ற நம்பிக்கையுள்ளது. ஒரு ரூபாய்கூட கட்டணம் வாங்காமல் அவனுக்கு சிறப்பாக பயிற்சி அளித்த பயிற்சியாளருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

ரோட்டரி சங்கத் தலைவர் விஜயபாரதி பேசுகையில், போலியோ ஒழிப்பு, நீர்நிலைகளை புனரமைப்பது, என பல்வேறு திட்டங்களை நாங்கள் செயல் படுத்தி வருகிறோம். இதில் ரோட்டரி உறுப்பினர்கள் அனைவருக்கும் முக்கிய பங்கு உள்ளது. திட்டங்களைச் செயல்படுத்தி இலக்கை எட்டுவதுதான் எங்களின் முக்கிய குறிக்கோளாகும் என்றார்.■

# உல்ஹாஸ்நகரில் ரோட்டரித் தோட்டம்

ரோட்டரி செய்திக்குழு

உல்ஹாஸ்நகர் ரோட்டரி சங்கம், RID 3142, திட்டப்பணித் தலைவர் மகேந்திர காத்ரி அவர்களின் தலைமையில் நகரில் அமைந்துள்ள சென்டரல் மருத்துவமணையில் உள்ள ரோட்டரித் தோட்டத்தை சமீபத்தில் புனரமைத்துள்ளது. இந்தப் பசுஞ்சோலையின் நடுவிலே நோயாளிகளின் பராமரிப்பாளர்கள் ஓய்வெடுப்பதற்காக இந்த பூங்காவில் இரண்டு பெஞ்சுகளை அமைத்துள்ளது. தோட்டத்தில் பூசப்பட்ட புதிய வர்ணமும், கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் பளீரென ஜொலிக்கும் தாவரங்களும் பதற்றத்துடன் இருக்கும் நோயாளியின் பராமரிப்பாளர்களுக்கு அமைதியான மனநிலையை வழங்கும்.

இந்த புதிய தோட்டத்தை சங்கத்தலைவர் தினேஷ் தண்டலியா மற்றும் சங்க உறுப்பினர்களின் முன்னிலையில் PDG Dr சந்திரசேகர் கோல்வேகர் முறைப்படித் திறந்து வைத்தார்.■




PDG *சந்திரசேகர் கோல்வேக்கர் சங்கத்தினருடன் ரோட்டரி தோட்டத்தில் மரம் நடுகிறார்.*

# இரத்த புற்றுநோயிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுவோம்!

ரோட்டரி செய்திக்குழு

RC ஹைதராபாத் டெக்கான், (3150), பசவதாரகம் இந்தோ-அமெரிக்க புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சிகழகத்துக்கு ரூ.66 லட்சம் செலவில் இரத்தத்தில் உள்ள அணுக்களை அளவிடும் சைடோமீட்டர் (Cytometer) கருவியை நன்கொடையாக வழங்கியுள்ளனர். இதற்கான நிகழ்ச்சியில் மாவட்ட ஆளுநர் (2018–19) ரமேஷ் வாங்கலா கலந்துகொண்டு இந்த கருவியின் செயல்பாட்டை தொடங்கிவைத்தார். இந்த மருத்துவமனையில் ஆண்டுக்கு சராசரியாக 12,000 புற்றுநோயாளிகள் சிகிச்சை பெறுவதாகக் கூறப்படுகிறது.

சைடோ மீட்டர் கருவி மூலம் ஒருவரின் உடலில் உள்ள இரத்தத்தில் கலந்திருக்கும் வெள்ளை அணுக்களை கணக்கிட்டு அவருக்கு சிவப்பு அணுக்களை விட வெள்ளை அணுக்கள் அதிகம் இருந்தால் அவர் இரத்த புற்றுநோயால் பாதிக்கப் பட்டுள்ளார் என்பதை கண்டறிய முடியும். குறிப்பாக குழந்தைகளுக்கு இரத்தப் புற்றுநோய் வரலாம் என்பதால் அதை முன்கூட்டியே கண்டுபிடித்து அவர்களுக்குத் தேவையான சிசிக்சை அளிக்க இது உதவும்.




**இடதிலிருந்து:** *மருத்துவமனை அதிகாரி* Dr. *சுப்ரமணியேஷ்வர் ராவ்,* IPDG *ரமேஷ் வங்காலா, மருத்துவமனை அறங்கவலர் ஸ்ரீ பரத், சங்கத்திலன் முன்னாள் தலைவர் உதய் பிளானி மற்றும் சங்கத்தின் சேவை செயல் திட்டங்களை இயக்குனர் அனு கேந்த்ரி.*

அமெரிக்காவில் உள்ள நாபர்வில்லி ரோட்டரி சங்கம், RID 6450, மற்றும் ரோட்டரி அறக்கட்டளை ஆகியவற்றின் உதவி யுடன் இந்தத் திட்டம் வெற்றி கரமாகச் செயல் படுத்தப்பட்டதாக ஹைதராபாத் ரோட்டரி சங்கத்தின் IPP உதய் பிலானி தெரிவித்தார்.

ஒரு முறை இந்த சிகிச்சையைப் பெற கிட்டதட்ட ரூ.25,000 செலவாகும். ரோட்டரி இந்த கருவியை நன்கொடையாக அளித்திருப்பதன் மூலம் ஏழை, எளிய மக்கள் இலவமாக இந்த சிகிச்சை பெற முடியும்.



*இரத்தப் புற்று நோய் கண்டறியும் சைட்டோ மீட்டர் கருவி.*

தெலங்கானா, ஆந்திரம் மற்றும கர்நாடகத்தின் வடக்குப்பகுதியைச் சேர்ந்த, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்து வரும் MNJ புற்றுநோயியல் மற்றும் பிராந்திய புற்றுநோய் சிகிச்சை மையமும் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

நாங்கள் ஹாட்ரிக் அடித்துள்ளோம் என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார் உதய் பிலானி. கடந்த மூன்று ஆண்டு களில் சர்வதேச உதவியுடன் நாங்கள் செயல்படுத்தியுள்ள மூன்றாவது திட்டமாகும் இது. முதல்கட்டமாக செகந்திராபாத்தில் உள்ள மஹாவீர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குருநானக் மருத்துவமையத்தில் ரூ.1.18 கோடியில், 12 படுக்கை வசதிகள் கொண்ட இரத்த சுத்தி கரிப்பு நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்தோம். இரண்டாவது கட்டமாக ஹைதராபாதில், சல்லா மருத்துவமனையில் உள்ள ரோட்டரி இரத்த வங்கியை தரம் உயர்த்திக்கொடுத்ததுடன், நவீன வசதிகளுடன் ரூ.68 லட்சத்தில் நடமாடும் இரத்த சேமிப்பு வங்கி வாகனத்தையும் நன்கொடையாக அளித்துள்ளோம் என்றார் அவர்.■



# அறகட்டளைக்கு அள்ளிக் கொடுங்கள்!

ரோட்டரி நண்பர்களே!

அடுத்த ஆண்டு ஹவாய் தீவில் நடைபெற உள்ள ரோட்டரி சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்கு நீங்கள் எல்லாம் தயாராகி வருவீர்கள் என நம்புகிறேன்.

ஹோனலூலூ மாநாட்டிற்கு வரும்முன் 2019-2020ல் ரோட்டரி அறக்கட்டளை புதிய உச்சத்தை எட்டுவதற்கு நாம் எப்படி உதவப்போகிறோம் என்ற திட்டத்தையும் வகுத்துக் கொள்ளுங்கள். உலகம் முழுவதும் நாம் ஏழை, நலிவுற்ற மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வருகிறோம், முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறோம் எனில் அது உங்களால்தான் என்பதை மறந்துவிட வேண்டாம்.

ரோட்டரி அறக்கட்டளைக்கான ஆண்டு நிதியை அளிப்பதற்கான அவசியத்தை நாங்கள் அவ்வப்போது நினைவுபடுத்தி வருகிறோம். நீங்கள் அளிக்கும் நன்கொடைகள் போலியோ ஒழிப்பு திட்டத்துக்காக மட்டுமல்ல, பல்வேறு சமூக சேவை பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. உலகம் முழுவதும் ரோட்டரி தனது பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

2025-ஆம் ஆண்டுக்குள் 2.025 பில்லியன் டாலர் அறக்கட்டளைக்கு நிதித் திரட்ட வேண்டும் என்பது நமது இலக்கு. அதை எட்டிவிட்டால் அற்புதமான, ஆச்சரியமளிக்கும் பல திட்டங்களை நம்மால் நிறைவேற்ற முடியும். வருடாந்திர முதலீட்டு வருமானங்கள் மூலம் நமது அறக்கட்டளைக்கு ஆண்டுக்கு 100 மில்லியன் டாலர் கிடைக்கும். இதன் மூலம் பல்வேறு நலத்திட்டங்களுக்கும், உயிர்காக்கும் திட்டங்களுக்கும் செலவழிக்க முடியும்.

இந்த மாதம், நான் இரண்டு சிறப்புச் செய்திகளை அறிவிக்கிறேன். முதல் திட்டம் தைபே ரோட்டரி சங்கத்தின் வட்டமேஜை மாநாட்டுக்கானது. சங்கத்தின் தலைவர் ஜெஃப் லின் பதவியேற்பு நிகழ்ச்சியின்போது போலியோ ஒழிப்புத் திட்டத்துக்காக 10,000 டாலர் தொகையை உறுப்பினர்கள் நன்கொடையாக வசூலித்துக் கொடுத்துள்ளனர். இதைத் தொடர்ந்து நடைபெற்ற பதவிமாற்ற நிகழ்ச்சி களின்போது தென்கொரியா 3750 மாவட்ட ரோட்டரி சங்கம் Arch Klumph Societyயில் 6 பேரை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்தது. இதன் மூலம் மொத்த எண்ணிக்கை 8 ஆனது. ரோட்டரி மாவட்ட புதிய ஆளுநர் யுன் யங்-ஜுங்கின் சிறப்பான செயலுக்கு எனது பாராட்டுகள்.

**கேரி C K ஹுவாங்**
TRF அறங்காவலர் தலைவர்

# டெஹ்ராடூனில் மெகா மரம் நடும் நிகழ்வு

ரோட்டரி செய்திக்குழு

குஷ்ட் ஆசிரமம் மற்றும் அரசு நடுநிலைக் கல்லூரி, நாலாபானியில் ஒரு மெகா மரம்நடும் நிகழ்வை நடத்தியது RC மத்திய டெஹ்ராடூன், RID 3080. இவ்விழாவில் தன்னார்வலர்கள், மாணவர்கள் 300க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டார்கள்.

மரக்கன்றுகளுக்குத் தொடர்ந்து நீருற்றிக் காப்பதாக ரோட்டரியன்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். இரு இடங்களில் நடைபெற்ற இந்தப் பசுமை நிகழ்வில், சங்கத் தலைவர் Lt Col மனோஜ் குப்தா, செயலாளர் ராமன் வோஹ்ரா, உதவி மாவட்டச் சங்கப் பயிற்சியாளர் சுதீர் ஜோல்லி, இன்னும் பலர் ஆர்வத்துடன் பங்கேற்றார்கள்.■



Rotary PEOPLE OF ACTION

# இமய மலையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

ரோட்டரிச் செய்திக்குழு

RC கொச்சின் டெக்னோபோலிஸ் ரோட்டரியன்களான விவேக் பிரசன்னன், வினு ஜோசஃப் என்ற இருவரும் ட்ரான்ஸ்-இமயமலைப் பகுதியில் காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களை ஆராய்வதற்காகச் சமீபத்தில் மணாலியிலிருந்து லே-வரை இருசக்கர வாகனத்தில் பயணம்செய்தார்கள்.

தீவிரமாகும் கோடைக்காலங்கள், மழைக்காலத்தில் வெள்ளப்பெருக் கெடுத்தோடும் ஆறுகள் எனப் பல விதங்களில் ஒட்டுமொத்த இந்தியத் துணைக்கண்டத்தையும் பாதிக்கும் காலநிலை மாற்றம்பற்றிய சோக மான உண்மை நிலையை அவர்கள் அனுபவித்தார்கள் என்றார் சங்கத் தலைவர் ஜெயராஜ் குலங்கரா.

மணாலியிலிருந்து லே-வரை சென்ற தங்களுடைய இருசக்கர வாகனப் பயணத்தின் போது, இந்த ரோட்டரியன்கள் லடாக்கில் ஜிஸ்பா, சர்சுவில் தங்கினார்கள். தாங்லாங் லா, கார்தோங் லா, சங் லா (அனைத்தும் கடல்மட்டத் திலிருந்து சுமார் 17,000-18,000 அடி உயரத்திலுள்ளவை) போன்ற உலகின் மிக ஏற்றமான மலைப்பாதைகளில் சிலவற்றைக் கடக்கும் விறுவிறுப்பாகவும், அச்சமூட்டும் அனுபவமும் இந்தப் பயணத்தின்மூலம் அவர்களுக்குக் கிடைத்தது.

அழகிய மலைப்பிரதேசங்கள், மலைப்பாதைகள் பலவும் கோடைக் காலத்தில் அதிகரித்துவரும் சுற்றுலாப் பயணிகளுடைய வருகையால் சேத மாக்கப்பட்டிருப்பதைக் கண்டு மனம் உடைந்தார்கள்.


இந்தப் பயணம் துணிகரமாகவும் பெரிய சவாலாகவும் இருந்தது, அதேசமயம், மயங்கவைக்கும் உயரத்திலுள்ள அப்பகுதியில் உள்ளூர் மக்களுடன் கலந்து பேசி ரோட்டரி பற்றிய விழிப்புணர்வைப் பரப்பியதில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி, என்றார் பிரசன்னன். உள்ளூர் மக்க ளுடன் நாங்கள் உரையாடியபோது, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது, காப்பாற்றுவது, உலகுக்கு மிகப்பெரிய சவாலாக அமையப்போகும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பது ஆகியவற்றில் பொதுமக்கள் தங்களுடைய பங்களிப்பை எப்படி வழங்குவது என்பது பற்றிய விழிப்புணர்வைப் பரப்ப முயன்றோம் என்று தொடர்கிறார் ஜோசஃப். ■




*RC கொச்சின் டெக்னோபோலிஸைச் சேர்ந்த விவேக் பிரசன்னன் மற்றும் வினு ஜோசஃப் லே-யில்.*



# Subscribe NOW!




## for Rotary News Print Version & e- Version

## For the Rotary year 2019 – 2020

**As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-Version.**

**Annual Subscription (India)**

| Print version | e-Version |
|---|---|
| ₹420/- | ₹360/- |

(with effect from July 2019)

**Print version** ☐ **e- Version** ☐

| | English | Hindi | Tamil |
|---|---|---|---|
| No. of Copies | | | |

For every new member the pro-rata is ₹35 a month.

Please attach the TYPED list of individual members with their complete address, PIN code, Mobile number and e-mail ID. Intimate language preference (English/Hindi/ Tamil) against each member's name. Please do not send the Semi-annual Report for address list.

Rotary Club of .................................................... RI District ..............................

Name of the President/Secretary ....................................................................

Address ....................................................................................................

....................................................................................................

....................................................................................................

City ........................................ State .......................................................... PIN ☐☐☐☐☐☐

STD Code ............................. Phone: Off. .................................... Res. ..............................................

Mobile ...........................................................E-mail ....................................................................

Cheque/DD No. .......................................... Dated .......................................... for Rs. ..........................................

Drawn on ....................................................................................................

in favour of "ROTARY NEWS TRUST" is enclosed.

Date: President/Secretary

**Payments can be made online at HDFC Bank, Egmore, Chennai – Rotary News Trust, SB A/c No 50100213133460; IFSC HDFC0003820. Email us the UTR Number, Club Name, President/Secretary's name, Amount and Date of Transfer.**

Mail this form to:
Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

# மாதவரத்தில் ரொட்டரி மருத்துவ முகாம்!

V முத்துக்குமரன்

சென்னை, மாதவரம் ரோட்டரி சங்கம் தொடங்கப்பட்ட ஓராண்டிலேயே நாடி மருத்துவ மையத்துடன் இணைந்து மெகா சர்க்கரை நோய் மற்றும் இலவச கண்சிகிச்சை முகாம் ஒன்றை அண்மையில் நடத்தியது. இந்த முகாமில் நூற்றுக்கணக்கான முதியவர்கள் கலந்துகொண்டனர். சிறப்பு மருத்துவர்கள் மூலம் முகாமில் பங்கேற்றவர்களுக்கு ஆலோசனைகளும் தேவைப்பட்டவர்களுக்கு சிகிச்சைகளும் அளிக்கப்பட்டன.

R M டயாபடிஸ் கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் சங்கரநேத்ராலயாவைச் சேர்ந்த சிறப்பு மருத்துவர்கள் நோயாளிகளை பரிசோதித்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை வழங்கினர். நாடி மருத்துவ மையத்தைச் சேர்ந்த நர்சுகள், லேப்-டெக்னீஷியன்கள், பிஸியோதெரபிஸ்டுகள் மற்றும் மருந்தாளுநர்கள் 14 பேர் சிறப்பு மருத்துவர்களுக்கு உறுதுணையாக இருந்தனர்.

முகாமில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் பற்றி சென்னை, அண்ணாநகர் ரோட்டரி சங்கத்தின் IPPயும், R M டயாபடிஸ் கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிறுவனருமான விருந்தா தீபக் கூறியதாவது:

சிகிச்சையில் பல நோயாளிகளுக்கு இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகம் இருப்பது தெரியவந்தாலும், சிலர் அது பற்றிய அறிகுறியே இல்லாமல் இருப்பது தெரியவந்தது. 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இரத்தத்தில் சர்க்கரை அளவு தொடர்பான பரிசோதனையை செய்துகொள்வது நல்லது. சர்க்கரை நோய் உள்ளவர்கள் தங்கள் கால்கள் மீது அதிகம் கவனம் செலுத்துவதும் முக்கியம். கால்களில் அடிபட்டாலோ அல்லது புண்கள் ஏற்பட்டாலோ அதை உரியமுறையில் கவனிக்காவிட்டால் கால்களையே இழக்க நேரிடும் அபாயம் உள்ளது.

சர்க்கரை நோயாளிகள் நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த மருந்து, மாத்திரைகளையே பெரிதும் நம்பியுள்ளனர். அவர்கள் உணவுக் கட்டுப்பாடு உள்ளிட்ட தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள வேண்டும். மாதம் ஒருமுறை சாப்பிடுவதற்கு முன்பும், சாப்பிட்ட பின்பும் இரத்தத்தில் சர்க்கரை அளவை கணக்கிட்டு மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் மாத்திரைகளை சாப்பிட வேண்டும். மூன்று



**வலதிலிருந்து:** RC *சென்னை மாதவரம் முன்னாள் தலைவர்* N *ஜெய்தீப்,* RID *கமல் சங்வி,* PDG J B *காம்தார், மார்லீன் காம்தார் மற்றும்* RC *மெட்ராஸ் தலைவர்* Dr *விஜயபாரதி, நாடி மருத்துவமனையில்.*

மாதத்துக்கு ஒரு முறை HBA1C எனப்படும் சர்க்கரை அளவின் மூன்று மாத சராசரியைத் தெரிந்துகொண்டு அது அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த முகாமில் சிலருக்கு டோப்லர், பயோதெஸிமெட்ரி ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. மருத்துவர்களின் ஆலோசனைக்குப் பின் சிலருக்கு சர்க்கரை நோயாளிகள் அணிய வேண்டிய காலணிகளும் குறைந்த விலையில் வழங்கப்பட்டன என்றார் விருந்தா. இவருக்கு உதவி யாக மாதவ் டயாபடெஸ் மருத்துவ மையத்தின் டாக்டர் அனிரூத் தீபக் செயல்பட்டார். முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு பின்னர் மூத்த மருத்துவர்களை சந்தித்து ஆலோசனை பெற இலவச கூப்பன்களும் வழங்கப்பட்டன.

பார்வைக் குறைபாடு உள்ளவர் களுக்கும் முகாமில் சிகிச்சை அளிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்படும் மாறுகண், இரட்டை பார்வை, அலர்ஜி போன்றவற்றையும் சோதித்து அதற்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

சர்க்கரை நோயாளியான ஜோசப் பத்ராசலம், மருத்துவர்கள் என்னை பரிசோதித்து என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பது பற்றி நீண்ட பட்டியலே கொடுத்துவிட்டனர். நடைபயிற்சி, உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். உணவுப் பழக்க வழக்கங்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் கூறினர். அதாவது சர்க்கரை நோய் அதிகரிப்புக் காரணமான அசைவ உணவுகளை நான் தொடவே கூடாது என்றும் குறிப்பிட்டனர். நான் இனி எச்சரிக்கையாக இருப்பேன் என்றார்.

இந்த முகாமில் 200-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அவர்களில் 185 பேருக்கு சர்க்கரை நோய் இருப்பது கண்டறியப்பட்டது. எஞ்சியவர்கள் மேல் சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர். இதேபோல கண் மருத்துவ சிகிச்சைக்காக வந்திருந்தவர்களில் 22 பேருக்கு கண்புரை நோய் இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களில் 10 பேருக்கு சங்கரநேத்ராலயாவில் இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டது.




*மருத்துவ முகாமில் RID சங்வி மற்றும் PDG காம்தார், RC மெட்ராஸ் தலைவர் விஜயபாரதி, கபில் சித்தாலே, RC சென்னை மாதவரம் தலைவர் S சங்கர், விருந்தா தீபக் மற்றும் மார்லீன் காம்தார்.*

### வருமுன் காப்போம்!

2010-ஆம் ஆண்டு புஷ்பவதி பாபுலால் காம்தார் அறக்கட்டளை சார்பில் அமைக்கப்பட்ட நாடியா மருத்துவ மையம், ரோட்டரி முன்னாள் மாவட்ட ஆளுநர் J B காம்தாருக்குச் சொந்தமான நாடி ஏர்டெக்னிக்ஸ் அமைந்துள்ள வளாகத்திலேயே செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவ மையத்தில் சிறப்பு வசதிகளை ரோட்டரி இயக்குநர் கமல் சங்வி உள்ளிட்ட முக்கிய ரோட்டரி பிரமுகர்களுக்குச் சுற்றிக்காண்பித்து விளக்கினார் காம்தார். சென்னையின் புறநகர் பகுதியான மாதவரத்தில் 1980-களில் தொடங்கப்பட்ட காம்தார் நிறுவனம், சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. தாம் பலனடைந்த பகுதி மக்கள் நல்வாழ்வுக்கு நாம் ஏதாவது செய்தாகவேண்டும் என்ற நோக்கிலேயே காம்தார் இந்த மருத்துவ மையத்தை உருவாக்கினார். இங்கு மருத்துவ ஆலோசனை, நவீன மருத்துவ பரிசோதனைகள், மற்றும் அவசர சிகிச்சை அளிக்கும் வசதி என பல வசதிகள் உள்ளன என்கிறார் காம்தார்.

மருத்துவத்தில் வருமுன் காப்பது முக்கியமானது. அந்த விதத்தில் நாடி மருத்துவ மையம் நோயாளிகளுக்கு ஏற்பட்டுள்ள நோய் என்ன என்று சரியாக கணித்து அதற்கு ஏற்ப சிறப்பான சிகிச்சை அளித்துவருவது பாராட்டத்தக்கது என்று கூறிய கமல் சிங்வி, இலவச மருத்துவ முகாம் மூலம் நூற்றுக்கும் மேலானவர்கள் பயன்பெற்றது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். இந்த ஆண்டு இது போல் இன்னும் 6 இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்றும் நாடியா மருத்துவ மையம் மேலும் வெற்றிகரமாகச் செயல்பட்டு சமூகத்துக்கு பெரிய அளவில் உதவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தப் பகுதியில் சுமார் 6 கி.மீ. சுற்றளவுக்கு ரோட்டரி சங்கம் எதுவும் இல்லாததால், காம்தார், தமது ஊழியர்களை ஊக்கப்படுத்தி 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னை, மாதவரம் ரோட்டரி சங்கத்தை ஏற்படுத்தினார். சென்னை இண்டஸ்டிரியல் சிட்டி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த R ரவிசங்கர், DGN J ஷ்ரீதர் ஆகியோர் காம்தார் முயற்சி க்கு உறுதுணையாக இருந்தனர். மாதவரம் ரோட்டரி சங்கத்தில் 26 உறுப்பினர்கள் உள்ளனர். சங்கத்தின் தலைவர் பொறுப்பை N ஜெய்தீபிடமிருந்து அண்மையில் S சங்கர் பெற்றுள்ளார். நடப்பு ஆண்டுக் குள் சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரிக்கக் கூடும் என்று சங்க அதிகாரிகள் உறுதியுடன் தெரிவித்தனர்.

புகைப்படங்கள்: V முத்துக்குமரன்

# "THE FUTURE BELONGS TO THOSE WHO BELIEVE IN THE BEAUTY OF THEIR DREAMS"




Our distinguished guests:

Rtn. Mark Daniel Maloney
Rotary International President
and Rtn. Gay Maloney.

DARE TO DREAM
Rotary

## Rotary Institute
**Indore**
Zone 4,5,6&7 • 6-8 Dec 2019

## Convener's Message



Dear Rotary Leader,

As we reach out and ensure that 'Rotary Connects the World', we are looking forward to welcoming you to the 2019 Zone Institute-**'DARE TO DREAM'**- at the Brilliant convention centre, Indore from **6th to 8th December 2019**. Get ready for a great fellowship with inspiring speakers and achievers. And also enjoy the delicious food and enthralling fun Indore is famous for. At the Institute you will have the opportunity to interact with our world leader President Mark Maloney and his gracious partner Gay. You will also have the opportunity to meet our senior leaders, form new friendships and renew old ones. Institute Chair PDG Raju Subramanian, Co-Chair Atul Gargav and the Institute team are all geared up to welcome you and host you to the event that you will cherish forever.

We welcome you to Indore, the city of the Holkars, the financial capital of Madhya Pradesh.

Dr. Bharat Pandya
RI Director, 2019-21

## Chairman's Message



My dear friends,

We are close to 800 registrations now.Bharat and I are overwhelmed by this response from you all. The Trustee Representative Seiji Kitasan from Japan will bring with him his wealth of knowledge and experiences. We will also have amongst us past Director and present Trustee, Jennifer Jones who will inspire us with her address and presentation. Some outstanding speakers have confirmed their presence on the occasion. Details of the same will be shared at a future date.

Be assured that you will enjoy this Institute and go back home carrying memories, learning, and thoughts to ensure that 'Rotary Connects the World'.We have negotiated packages for pre and post Institute tours which are uploaded on the Institute Website. You can also connect with the service provider directly, whose contact is given, and book the package most convenient to you.

Don't disappoint yourself by not registering. Rush to register before it is closed.

Also, block your accommodation in Radisson Blu Hotel before it is all sold out. We look forward to seeing you in Indore.

With warm regards,

T.N.Subramanian
Chairman, Rotary Zone Institute, 2019

## Incredible Indore Awaits You



Indore Rajwada


Lalbagh Palace


Omkareshwar Jyotirlinga


Annapurna Mandir


Daly College


Mandav

## TRAINING TEAM

| | |
|---|---|
| GETS | Chair: **J B Kamdar** |
| | Co-Chair: **Rajiv Pradhan** |
| GETS Partners Program | Chair: **Madhavi Pandya** |
| | Co-Chair: **Marlene Kamdar** |
| DGN Training | Chair: **Vijay Gupta** |
| | Co-Chair: **Arun Prakash Gupta** |
| DGN Spouses Program | Chair: **Sonal Sanghvi** |
| District Trainers' Seminar | Chair: **Jayant Kulkarni** |
| DG Review | Chair: **RID Kamal Sanghvi** |

## SCHEDULE OF EVENTS & TARIFFS

| REGISTRATION | | | |
|---|---|---|---|
| **Institute Registration** | | Couple | Single |
| Applicable till 31st Oct 2019 | | INR 25000 | INR 15000 |
| GETS (Couple) | 3rd - 5th Dec 2019 | INR 55000 | |
| DGs Review Meeting | 5th Dec 2019 | INR 7500 | INR 4000 |
| DGN Training Seminar | 5th Dec 2019 | INR 7500 | INR 4000 |
| Dist Trainers Seminar | 5th Dec 2019 | INR 7500 | INR 4000 |
| TRF Dinner | 5th Dec 2019 | INR 4500 | INR 2500 |
| TRF Seminar | 6th Dec 2019 (Morn) | INR 4500 | INR 2500 |
| **Hotel Accommodation** | | | |
| Radisson Blu Hotel | Double Executive | INR 8000 per night | |

Institute Brochure and the Registration Form are available on website for download at **www.rotaryinstitute2019indore.org**
For Institute Registration (Select any one method)
1 Please visit & complete online registration formalities.
2 You can download the Registration Form from website & send it to:

**PDG Bansi Dhurandhar**, Chair-Registration.
Microtrol Sterilisation Services Pvt. Ltd, A 101 & 102,
Tara Co-op Hsg Society, Srushti Complex, Saki Vihar Road,
Mumbai – 400072. Tel: 91 22 40579600


Brilliant Convention Centre

*For details and other Institute information please contact*
**PDG T. N. (Raju) Subramanian,** Institute Chair
Add: 303, Bhagyodaya, 79, Nagindas Master Rd., Fort, Mumbai- 400001
Email: rtn.subramanian@gmail.com Cell: 9322223732 / 9653623732

Rotary



ஒவாஹு தீவின் தென் கரையில் பிரசித்த பெற்ற வைக்கி கடற்கரை.

# அலோஹா ரோட்டரி

*ஹலோ! சொர்க்க பூமியை பார்க்க ஆசையா? ஹோனலூலு மாநாட்டுக்குத் தயாராகுங்கள்!*

டயானா ஷுபர்க்



அது ஒரு காலைப் பொழுது ஒவாஹு தீவின் வைகிகி கடற்கரையில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. சிலர் கடற்கரைக்கும் ஹோட்டலுக்கும் இடைப்பட்ட நிழலில் சூரியக்குளியலை அனுபவித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் குழந்தைகள் கரையிலும் தண்ணீரிலும் விளையாடிக் கொண்டிருந்தனர். சிலர் அந்த காலை நேரத்தில் காபியை சுவைத்துக்கொண்டிருந்தனர். சிலர் மிதக்கும் மரப்பலகையுடன் அலையுடன் மோதி விளையாடக் காத்திருந்தனர். தண்ணீருக்கடியில் மூழ்கி நீச்சலடிப்பவர்களுக்கு எளிதில் சுவாசிப்பதற்கான கருவி, அலைகளுடன் மோதி விளையாடுபவர்களுக்கான மரப்பலகை, மீன்பிடி உபகரணங்களை வாடகைக்கு விடும் கடைகளும் அருகில் இருந்தன. கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் காலைப் பொழுதில் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தண்னர். இவையெல்லாவற்றையும் விட மரப்பலகையில் நீச்சல் வீரர்கள் அலைகளுடன் மோதி விளையாடுவது கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

நானும் எனது குடும்பத்தினரும் கடற்கரை அழகை ரசித்துக் கொண்டிருந்தாலும் ஹோனலூலுவில் உள்ள சீன நகரத்தில் ரோட்டரி நண்பர்களை சந்திப்பதிலும் அவர்களுடன் மதிய விருந்தில் கலந்துகொள்வதிலுமே எனது சிந்தனை இருந்தது. 6 வயது மகள் பியா, கடல் நீரில் கால் வைப்பதும், கரைக்குத் திரும்புவதும் என்னையும் எனது கணவர் கிரெய்க்கை சுற்றி வருவதுமாக இருந்தாள்.

நாங்கள் ஹோனலூலுவுக்கு பயணம் செல்வது இது முதல் முறையல்ல. மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே இங்கு வந்து அதன் அழகை ரசித்திருக்கிறோம். இங்குள்ள பருவநிலையும், அழகான கடற்கரையும் எனது மகளுக்கு ரொம்பவே பிடித்திருந்தது. ஹோனலூவில் ஒவாஹு தீவுக்கு மீண்டும் செல்லப்போகிறோம் என்று தெரிந்ததும் அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை... என் செல்ல அம்மா என்று என்னை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தாள். அவள் கூறியதை நான் எப்படி மறுக்க முடியும்?

2020-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை ஹோனலூலுவில்



*ஹவாய் மொழியில் ஹொனு என்று அழைக்கப்படும் கடல் ஆமைகள் நல்ல அதிர்ஷ்டத்தின் அடையாளமாகும்.*

ரோட்டரி சர்வதேச மாநாடு நடைபெற விருப்பதால் இந்த முறை எனது பயணத்தின் நோக்கமே வித்தியாசமாக இருந்தது. மாநாடு நடைபெற இருப்பதால் நாங்கள் இந்த இடத்தைப் பற்றி ஆராய்ந்து தெரிந்துகொள்ளவே வந்திருந்தோம். எங்களுக்கு சொர்க்க பூமியான ஹோனலூலு தீவு பற்றியும், அதன் சுற்றுச்சூழல், வரலாறு என பல தகவல்களைக் கூறி வழிகாட்ட உள்ளூர் ரோட்டரி உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

ஹவாய் தீவில் அழகான கடற்கரை மட்டுமல்ல, பல்வேறு வரலாற்றுத் தகவல்களும் உள்ளன. அதை நேரில் அறிந்துகொண்டால்தான் சிறப்பாக இருக்கும்.

ஹோனலாலுவில் உள்ள புனித லூயிஸ் பள்ளியில் பிராட்போர்டு இகேமனு லும் ஐந்தாவது கிரேடு வகுப்பு மாணவர்களுக்கு பாடலும் நடனமும் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தாள். அந்த மாணவர்கள் அவரின் டிரம் இசைக்கு ஏற்றவாறு பாடி, நடனமாடினர். மே தின கொண்டாட்டத்திற்காக அவர்கள் ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தனர் என பின்னர் தெரியவந்தது. ஹவாய் தீவைச் சேர்ந்த மரப்பலகை நீச்சல் வீரர்கள் தங்கள் சாகசங்களை நிகழ்த்த மிகப் பெரிய அலை வேண்டி கடவுளை பிரார்த்திப்பதும், மாணவர்கள் ஒருவர் பின் ஒருவர் அலைகளில் நீச்சல் அடிப்பதையும் அடிப்படையாகக் கொண்ட பாடல் அது.

அடுத்து ஹூலா டான்ஸ். இது இடுப்பை அசைத்து வசீகரிக்கும் டான்ஸ் அல்ல. இது வித்தியாசமானது. பீலே என்ற பெண் கடவுளுக்கும் எரிமலைக்கும், மலைகளுக்கும், கடலுக்கும் நன்றி சொல்லும் ஒருவித நடனம். இதை கனோ காஸிமெரோ அற்புதமாக நிகழ்த்திக்காட்டினார். லும் போலவே காஸிமெரோவும் ஹவாயை பிறப்பிடமாகக் கொண்டவர். அந்நாட்டு கலாசாரத்தில் கைதேர்ந்தவர். தனது ஐந்தாம் வயதிலிருந்தே ஹூலா நடனம் பயின்றவர். ஹோனலூலு மாநாட்டிலும் இவரது நடனமும் இவரது சகோதரர் ராபர்ட் காஸிமெரோவின் பாடல் நிகழ்ச்சி களும் இடம்பெற உள்ளன.

1896-ஆம் ஆண்டில் பள்ளிகளில் ஹவாய் மொழி பேசுவதற்கு தடைவிதிக்கப்பட்டது. அங்கு மன்னர் ஆட்சி முடிவுக்கு வந்த மூன்று ஆண்டுகளில் அது அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டுவிட்டது. இதைத் தொடர்ந்து அந்த மக்களும் அமெரிக்க கலாசாரத்தை பின்பற்ற வேண்டியிருந்தது.

குழந்தைகளாக இருந்தபோது லும், காஸிமெரோ இருவரும் ஹவாய் பாடல், ஹூலா நடனம் ஆகியவற்றை வெறுத்தனர். ஹவாய் கலாசாரத்தை வெளிப்படுத்தினால் நண்பர்கள் கேலி செய்வார்களோ என்ற எண்ணம்தான். பின்னர் கல்லூரி நாட்களில்தான் அவர்கள் இருவருக்கும் ஹவாய் கலா சாரத்தின் மீது பிடிப்பு வந்தது. 1970-களில் ஹவாய் கலா சார மறுமலர்ச்சி ஏற்பட்டது. லும், காஸிமெரோ இருவரும் தங்கள்

நாட்டின் மொழி, இசை கலா சாரத்தில் மீண்டும் கவனம் செலுத்தத் தொடங்கினர். 1978-ல் அந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு ஹவாய் மொழி அரசு மொழியாக அங்கீகரிக்கப்பட்டது.

ஹூலா நடன நிகழ்த்தி முடிந்ததும் லும், காஸிமெரா இருவரும் எங்களை ராணி எம்மா சம்மர் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். நகரில் வெயிலிலும் தூசிகளுக்கு நடுவிலும் அலைந்து திரிந்த எங்களுக்கு அந்த இடம் குளிர்ச்சியுடன் இதமாக இருந்தது. இங்கு அனைவருமே ஒருவிதத்தில் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். எங்களுக்கு வழிகாட்டியாக இருந்த நபர் ஹோனலூலு பா ஹானா ரோட்டரியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவரின் மகன் என்று தெரிந்தபோது நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. லும், காஸிமெரோ இருவரும் அந்த ச ங்கத்தில் உறுப்பினர்கள். 19-ம் நூற்றாண்டில் ஹவாய் தீவுகளை ஒன்றிணைத்து ஆண்ட மன்னன் கமேஹமேஹா அணிந்திருந்த மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத் தினாலான தலைப்பாகை அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. முற்றிலும் இறகுகளாலான அந்த தலைப்பாகை பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது. ஹவாய் நாட்டவர்கள் இறகுகளுக்காக பறவைகளைக் கொல்வதில்லை. மரத்தின் மீது தேனை ஊற்றி விடுவார்கள். பறவைகள் சாப்பிட வரும் போது இறகுகளை மட்டும் பிடுங்கிவிடுவார்கள்.

ஹவாய் மக்களின் கலா சாரமே வித்தியாசமானது. ரோட்டரி உறுப்பினர்கள் எப்படி சேவை செய்வதையே முக்கிய பணியாகக் கொண்டுள்ளனரோ அதே போல ஹவாய் மக்களும் குடும்பமாக வாழ்வதிலும், அன்பு, அமைதி, கருணை ஆகியவற்றை பின்பற்றுவதில் முனைப்பு காட்டுபவர்கள். இணைந்து வாழ்வோம் என்பது டீ ஷர்டில் அச்சடிக்கப்பட்ட வாசகம் அல்ல, அவர்களின் மனவெளிப்பாடு என்கிறார் காஸிமெரோ.



*போக் துண்டுகளாகப்பட்டு மற்றும் மரைனேட் செய்யப்பட்ட கடல் உணவு - ஹவாய் உணவு வகைகளில் பிரசித்தி பெற்றதாகும்.*

*கடலுக்கு போக தயாராகும் டப்ளிங் துடுப்புகாரர்கள்.*



ஹவாய் தீவுகள் பார்ப்பதற்கு ரம்மியமாக இருப்பது மட்டுமல்ல: பல இடங்கள் திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் படம்பிடிக்க ஏற்றவையாக இருப்பது அதன் சிறப்பம்சமாகும். வைகிகி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த டோனி மற்றும் ஜோ கெடோன் இருவரும் ஹவாய் பாப் கலாசரத்தை எங்களுக்கு விளக்கினார்கள்.

எங்கள் பயணத்தின் இறுதிக்கட்டமாக அடர்ந்த காட்டுப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டோம். டன்டாலஸ் மலை உச்சிக்குச் சென்ற போது உடல் சிலிர்த்தது. அப்பப்பா எத்தனை வளைவுகள். கொஞ்சம் அசந்தாலும் ஆபத்துதான். அது ஒரு சாகச பயணம் என்றுதான் சொல்ல வேண்டும். மலை உச்சியிலிருந்து டையமண்ட் ஹெட், பஞ்ச்பௌல் கிரேடர், ஹோனலூலு பள்ளத்தாக்குப் பகுதியை பார்வையிட்டோம்.

லுவா விருந்துடன் எங்களது அன்றைய பயணம் முடிந்தது. பிறந்தநாள் கொண்டாட்டத்தைப் போல இருந்தது அந்த விருந்து. கபோலி என்னுமிடத்தில் கோ ஒலினா விடுதியில் படகில் சென்றபடியே விருந்து சாப்பிட்டோம். அப்போது வானில் சூரியன் மறையும் காட்சி மிக ரம்மியமாக இருந்தது. கரைக்கு திரும்பியதும் ஹவாய்க்கே உரிய பிரத்யேக உணவு வகைகளையும் ஒருகை பார்த்தோம். அவை பாரம்பரிய முறைப்படி மண் சட்டியில் தயாரிக்கப்பட்டிருந்தன.

பின்னர் ஹவாய் பல்கலைக்கழகத்தில் உயிரியல் பாடம் படித்துவரும் இரட்டையர்களான டினா மற்றும் கிறிஸ்டினா பூவுடன் ஹோனலூலு கலை அருங்காட்சியத்துக்குச் சென்றோம். டினா, கிறிஸ்டினா இருவரும் ரோட்டரி சங்க உறுப்பினர்களாவர். அவர்கள் இருவரும் ஒரே மாதிரி தோற்றமளித்தது மட்டுமல்ல, அவர்களின் நடை, உடை , பாவனை, பேச்சுக்களும் ஒன்றாக இருந்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க கைவினைப் பொருள்கள், ஓவியங்கள், அரங்குகள் பார்ப்பவர்களை பிரமிக்க வைத்தது. வைகிகியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள ககா அகோ என்னுமிடத்துக்குச் சென்றோம். அங்கு கடைகள், உணவு விடுதிகளில் சுவர்களில் சித்திரங்களை வரைந்து வைத் திருந்தனர். அந்த ஓவியங்கள் எங்களை கவர்ந்து இழுத்தன.

அடுத்து நாங்கள் சென்றது பேர்ல் ஹார்பர் நேஷனல் மெமோரியல். அந்த இடத்தில் அரிசோனா நினைவகத்தை பார்த்தபோது மெய்மறந்து போனோம். ஒவாஹுவில் சுற்றுலாப்பயணிகள் அதிகம் வருவது இந்த இடத்துக்குத்தானாம். ஆண்டுக்கு 2 மில்லியன் பேர் இங்கு வருகிறார்களாம். அப்படியென்ன அந்த இடம் என்கிறீர்களா? அது போர் நினைவுச் சின்னமாகும். பேர்ல் ஹார்பர் ரோட்டரி சங்கமும் ஜப்பானில் ஹிரோஷிமாவில் உள்ள ரோட்டரியும் இணைந்து 1982-ல் இங்கு ஒரு துணை சங்கத்தை நிறுவி இந்த இடத்தை போர் நினைவுச்சின்னம்




*1. ஹொனலுலு கலை அருங்காட்சி யகத்தின் உள்ள கபேயில் உணவருந்துகிறார்கள்.*

*2. ஹுலா நடனக் கலைஞர்.*

*3. சர்ஃபர் டியூக் கஹனமோகுவின் சிலை.*

*4. 'காக்கா' கோ சுவரோவியம்.*

*5. அலோஹாவின் மதுபானம்.*

*6. வண்ணமயமான சர்போர்டுகள் ஹவாய் கலாச்சாரத்தின் நினைவூட்டலாகும்.*











என்பதிலிருந்து அமைதிச் சின்னம் என்ற நிலையை உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. 1941-ஆம் ஆண்டு கடலில் போர்க்கப்பல் மூழ்கிய இடத்தில்தான் அரிசோனா நினைவகம் அமைந்துள்ளது. தற்போது சீரமைப்புப் பணிகளுக்காக மூடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் மீண்டும் திறக்கப்படும் என கூறப்படுகிறது. அன்று நடந்த போரில் கப்பல் மூழ்கியதுடன், ஆயிரத்துக்கும் மேலானவர்கள் உயிரிழந்தனர்.

எனது மகள் பியாவுக்கு இந்த வரலாறு புரியுமா என்று தெரியவில்லை. ஆனாலும், அந்த இடம் புனிதமான இடம் என்பதை குறிக்கும் வகையில் நெஞ்சில் கை வைத்தபடியே திரும்பிவந்தாள்.

ஒவாஹுக்கு வடக்கு பகுதியில் உள்ளது லானிகியா கடற்கரை. இங்கு கடல் ஆமைகள் அதிகம் என்பதால் இது ஆமைகள் கடற்கரை என்றுகூட அழைக்கப்படுகிறது. இங்குள்ள ஆமைகள் ஹோனு என்று செல்லமாக அழைக்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் 3 முதல் நான்கு அடி நீளமும் 200 முதல் 500 பவுண்டு எடையும் கொண்டவை. ஹோனலூலு மாநாட்டுக்கு வருபவர்கள் தவறாமல் பார்க்க வேண்டிய இடம் இது.

எங்களது சுற்றுப்பயணத்துக்கு நடுவே ஹோனலூலு பள்ளத்தாக்கு பகுதி ரோட்டரி சங்க உறுப்பினர் கிரீன், ஹோனலூலு பா ஹானா சங்கத்தைச் சேர்ந்த அவரது நண்பி டயானா டோன் இருவரும் சேர்ந்துகொண்டனர். இங்குள்ள















*ஒரு மைல் தொலைவிலுள்ள டயமண்ட் ஹெட் செங்குத்தான பாதை, அடைந்த பின் பிரமிக்க வைக்கும் காட்சிகள்.*



*ஒருவர் பூகி போர்டு உதவியுடன் அலைகளுடன் மோதி விளையாடுகிறார்.*

மக்கள் கிழக்கு, மேற்கு என்று சொல்வதில்லை. கிழக்கு பகுதியை டையமண்ட் ஹெட் என்றும் மேற்கு பகுதியை ஈவா (கடற்கரையை நோக்கிய பகுதி) என்றும் புவியியல் அடிப்படையில் கூறுகின்றனர்.

வழிநெடுக பல்வேறு கடற்கரைகளை பார்த்தவாறே நாங்கள் மொகுபு கலங்கரை விளக்கத்தை அடைந்தோம். அங்கிருந்து நீலவானத்தை பார்த்தபோது ரம்மியமாக இருந்தது. மேலும் இரண்டு கடல்களுக்கு நடுவே கம்பீரமாக அமைந்திருந்த கோலா மலையையும் பார்த்து ரசித்தோம். இங்கு தான் ஜுராஸிக் பார்க் உள்ளிட்ட பிரம் மாண்டமான படங்களை எடுத்தார்கள் என்றார் கிரீன். ஒரு வழியாக எங்கள் சுற்றுப்பயணம் நிறைவுக்கு வந்தது.



*மாலை நேர கடலோரத்தில் சூரியன் மறையும் ரம்மியமான காட்சி;*
*ஜூன் மாதம் வாருங்கள் அந்த கால் தடங்கள் உங்களுடையதாக கூட இருக்கலாம்.*



*கோலா மலைகள் ஒவாவின் இரண்டு தேசிய இயற்கை அடையாளங்களில் ஒன்றாகும்.*

நாங்கள் மீண்டும் எங்கள் இருப்பிடமான விஸ்கான்சினுக்குச் சென்றதும் பியா பள்ளிக்குச் செல்வாள். அவளது கின்டர்கார்டன் டீச்சர், அவளிடம் ஹவாய் பயணம் பற்றி கட்டுரை எழுதச் சொல்வார். இந்த முறை கடற்கரைகள் பருவநிலைகள் மட்டுமல்லாது, டெல் மற்றும் டயானாவுடன் நாங்கள் சென்ற இடங்கள் பற்றியும் அவள் நிச்சயம் குறிப்பிடுவாள். 6 வயது பியா, ஹவாய் பயணத்தை வெகுவாக ரசித்த போது, உங்களால் முடியாததா என்ன? மாநாட்டுக்கு தயாராகுங்கள் நண்பர்களே!.

© தி ரொட்டேரியன்
வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி



## சவால்களைச் சமாளிப்போம்!

**பீனா தேசாய், சமூக சேவகர்**

RC **ஆமதாபாத்-கன்காரியா** RID 3054

ரோட்டரி மாவட்டம் 3054-ன் மாவட்ட ஆளுநராகச் செயல் பட்டு வருகிறார் பீனா தேசாய். ஒரு பெண்ணான தம்மீது நம்பிக்கை வைத்துள்ள உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

இவருக்கு முழு பக்கபலமாக இருப்பவர் இவரது கணவரும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான ஆஷிஷ் தேசாய். பீனா, 2009-இல் ரோட்டரி உறுப்பினரானார்.

பீனாவின் மலரும் நினைவுகள்: நான் அப்போது சாதாரண உறுப்பினராக இருந்தேன். என் மகன் சாஸ்வத் தசைநார் கிழிந்து போனதால் அதற்காக சிகிச்சை பெற்று அப்போதுதான் குணமடைந்து வந்தான். ரோட்டரி நிகழ்ச்சிக்காக அவன் சுவிட்சர்லாந்து செல்ல நேர்ந்தது. எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆனால் அங்குள்ள ரோட்டரி சங்கம் அவனை நன்றாக கவனித்துக்கொண்டது. அவன் வீட்டில் இருப்பதுபோலவே உணர்ந்தான்.

குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்ட போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க முதலில் முன்வந்தது ரோட்டரி தான். போலியோ ஒழிப்புத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்தி வருவதும் ரோட்டரிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படி ரோட்டரியின் செயல் பாடுகளை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

மாவட்டத்தில் உள்ள 1,500 கிராமங்களில் குழந்தைகளுக்கிடையிலான பார்வைக்குறைபாடு நோயை போக்குவதில் நாங்கள் இப்போது கவனம் செலுத்தி வருகிறோம். ரோட்டரி இயக்குநர் பரத் பாண்ட்யாவின் வேண்டுகோளை ஏற்று தொற்று அல்லாத பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமுகாம்களை நடத்தி வருகிறோம்.

ரோட்டரிக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும், உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் சிறப்பு செயலி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். இது தவிர தனி குழு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளோம். அவர்களது முகவரியில் அவ்வப்போது தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்துகள் சொல்லி அவர்களை ரோட்டரியில் சேர அழைக்கிறோம். ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை 10 சதவீதமாவது உயர்த்துவதே எங்கள் நோக்கம். அதே சமயம் இருக்கும் உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

ரோட்டரி அறக்கட்டளைக்கு 5 மில்லியன் டாலர் நிதி திரட்ட வேண்டும் என்பது எனது இலக்கு. இது சவாலான காரியம் தான். ஆனாலும் மிகப்பெரிய திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டி வரும் ரோட்டரி உறுப்பினர்கள் அறக்கட்டளைக்கு தாராளமாக நிதி அளித்து உதவுவார்கள் என்பது எனது நம்பிக்கை என்கிறார் பீனா தேசாய்.

பீனாவின் மகன் சாஸ்வத் முன்னர் RSAMDIO தலைவராக இருந்தவர். மகள் ஆமதாபாத்-கன்காரியா RAC உறுப்பினராக இருக்கிறார்.

# ஆளுநர்களுடன் ஒரு சந்திப்பு

ஜெய்ஸ்ரீ

## இணைந்து செயல்பட்டால் சாதிக்கலாம்

**N மணிமாறன், கட்டிட கலைஞர்**
**RC தஞ்சாவூர் தெற்கு, RID 2981**



கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வரும் N மணிமாறன் 2005-ஆம் ஆண்டில் தற்செயலாக ரோட்டரியில் சேர்ந்தவர், தமது அனுபவத்தை நினைவுகூர்ந்தார்.

ரோட்டரி உறுப்பினர் ஒருவரின் மகள் எகிப்து நாட்டுக்குச் சென்றபோது தனது கைப்பை உள்ளிட்ட அனைத்தையும் தொலைத்துவிட்டு செய்வதறியாமல் நின்றிருந்தார். ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதி உதவிடும் இவரது வெளிநாடு வாழ் இந்திய நண்பர், துபாயில் இருந்து இரண்டு மணி நேரத்தில் எகிப்தில் தவித்த அந்த பெண்இந்தியா திரும்ப நிதியுதவி செய்தார். ரோட்டரி தொடர்பு மூலம் கிடைத்த உதவி எனக்கு வியப்பை அளித்தது என்றார் மணிமாறன்.

ரோட்டரி மக்களின் ஒற்றுமை உணர்வும், இணக்கமான செயல்பாடும்தான் எனக்கு உந்துதலாக இருக்கின்றன. ஏதாவது ஒரு குழந்தைக்கு கல்வி உதவித்தொகை வேண்டுமானால், அதை தனி ஒருவர் அளித்துவிடலாம். ஆனால், ரோட்டரிக்கு நிதியுதவி அளித்து அது குவிந்தால் நாம் எல்லோரும் இணைந்து பல பெரிய திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என்கிறார்.

மாவட்டத்தில் ஏரி, குளங்களைத் தூர்வாருவதற்கு இவர் முன்னுரிமை அளித்து வருகிறார். இதுவரை 100-க்கும் மேலான குளங்கள் தூர்வாரப் பட்டுள்ளன. பள்ளிகளின் வசதியை மேம் படுத்த தனது சங்கங்களுக்கு DDF மூலம் ரூ.50,000 நிதியுதவி அளித்துள்ளார் மணிமாறன். கிராமப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தவேண்டும் என்ற யோசனையும் இவரது பட்டியலில் உள்ளது.

ரோட்டரி அறக்கட்டளைக்கு 1 மில்லியன் டாலர் நிதி திரட்ட வேண்டும் என்பதும் புதிதாக 600 உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும், அதில் 100 பேர் பெண்களாக இருக்க வேண்டும் என்பதும் இவரது இலக்கு. இவரது திட்டம் நிறைவேற வாழ்த்துவோம்.

## பெண்களை ரோட்டரியில் ஊக்குவிக்க வேண்டும்

**சிவநாராயண ராவ், பள்ளி நிர்வாகி**
**RC குண்டூர் விகாஸ், RID 3150.**

2001-ஆம் ஆண்டு முதல் இவர் ரோட்டரியில் உறுப்பினராக இருக்கிறார். தனது குடும்பத்தினரையும் ரோட்டரியில் சேருவதற்கு மிகுந்த ஆர்வம் காட்டியவர். மனைவி அன்னபூர்ணா இவரது சங்க உறுப்பினர். மகள் ரிட்சா ஆதர்ஷ் ரோட்டரி சங்க உறுப்பினர். மகன் தான்சேன் ஹைதராபாத் ரோட்டரி சங்க உறுப்பினர். முன்னாள் DRR. மகன் தான்சேன், தமக்கு பொதுச் செயலாளராகவும் செயல்படுவதாக பெருமையுடன் குறிப்பிடுகிறார் சிவநாராயணராவ்.



விவசாயிகளுக்காக கருத்தரங்குகள் நடத்தி அவர்களுக்கு அரசு மானியங் கள் என்றால் என்ன? விவசாயத் தில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது எப்படி? என்பது போன்ற முக்கிய அம்சங்களை சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதே தமது குறிக்கோள் என்கிறார் ராவ். ரோட்டரியில் அதிக மகளிரை ஈடுபடுத்த வேண்டும், அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டும் என்பதும் அடுத்த கட்ட இலக்காகும் என்கிறார் இவர். நமது திட்டங்கள் தொய்வில்லாமல் தொட வேண்டுமானால் அதில் பெண்களின் பங்கு இருப்பது அவசியம் என்பது இவரது ஆணித்தரமான கருத்தாகும். குறைந்தபட்சம் 300 மகளிரை ரோட்டரியில் சேர்ப்பது இவரது உடனடி திட்டமாகும்.

உறுப்பினர்களின் எண்ணிக்கையை 1000-மாக அதிகரிக்க முயற்சி மேற்கொண்டு வருகிறார். ரோட்டரி அறக்கட்டளைக்கு 1 மில்லியன் டாலர் நிதி திரட்ட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

மாவட்டத்தில் WinS திட்டம் சீரிய முறையில் செயல் படுத்தப்பட்டு வருவதைக் குறிப்பிட்ட ராவ், அடுத்த 3 ஆண்டுகளில் அடுத்து வரும் ஆளுநர்கள் உதவியுடன் 1,000 பள்ளிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிட்டுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த மருத்துவ முகாமில் வயதான பெண்மணி ஒருவர் கண்புரை அறுவைச்சிகிச்சை மூலம் பார்வை பெற்று அதற்காக தம்மை பாராட்டியது மறக்கமுடியாத சம்பவமாகும் என்று குறிப்பிடு-கிறார் சிவநாராயண ராவ்.

# எழுத்தறிவு இயக்கத்தை விரிவுபடுத்துவோம்!



**கோபால் கெம்கா, மருத்துவ சுகாதாரத் தொழில்**
RC பாட்னா, மிட்-டவுன், RID 3250

நாங்கள் செயல்படுத்தி வரும் திட்டங்களில் பெரும்பாலானவை பள்ளிக் கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்புடையவை தான். ஏழை சமுதாயத்தினருக்கு நாங்கள் பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறோம். ரோட்டரி உறுப்பினர்களும் எங்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்கிறார் கோபால் கெம்கா.

எங்களிடம் 102 சங்கங்கள் தொடர்பில் உள்ளன. ஒவ்வொரு சங்கத்தினரும் குறைந்தபட்சம் இரண்டு அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சுகாதாரத்தைப் பேணும் வகையில் ஹாண்ட் வாஷ் நிலையங்களை அமைக்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள ரோட்டரி சங்கங்கள் இணைந்து 100 பள்ளிகளையாவது மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றியமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். சர்வதேச நிதியுதவி அல்லது DDF நிதியுதவி தவிர சங்கங்களுக்கு இடையே ரூ.1 கோடியிலான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். 30 சங்கங்கள் ஒன்றிணைந்து இதுவரை ரூ.60 லட்சம் செலவிலான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது என்று புன்னகையுடன் தெரிவிக்கிறார் கோபால் கெம்கா.

ரோட்டரி சங்க நடவடிக்கைகளில் மகளிரின் ஈடுபாட்டை ஆதரித்து வரும் கெம்கா, பெண் உறுப்பினர்களை அதிகம் சேர்க்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறார். மருத்துவரும் அறுவைச் சிகிச்சை நிபுணருமான இவரது மருமகளும் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார். மாவட்டத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 10 சதவீதம் உயர்த்த வேண்டும் என்பது இவரது இலக்கு. அதுமட்டுமல்லாமல் உறுப்பினர்கள் விலகாமல் கட்டிக்காத்து வரும் சங்கங்களுக்கு விருதுகளையும் அறிவித்துள்ளார் இவர்.

1994-ஆம் ஆண்டு முதல் இவர் ரோட்டரி உறுப்பினராக உள்ளார். தொழில் நிமித்தமான தொடர்புகளின்போது ஏற்பட்ட ஈர்ப்பால் இவர் ரோட்டரியில் சேர்ந்தார். ரோட்டரி மூலம் நிறைய நண்பர்களைப்பெற வேண்டும், அதன் மூலம் பெரிய அளவில் சேவை செய்ய வேண்டும் என்பதே இவரது விருப்பமாகும்.

தமது சங்கத்தின் மூலம் நிறைய உதவிகள் பெற்ற பார்வையற்றோர் பள்ளியில் உள்ள மாணவர்கள் நன்கு படித்து, இன்று நல்ல நிலையில் இருப்பது மிகுந்த மனநிறைவாத் தருவதாகக் குறிப்பிடுகிறார் கெம்கா.

# கிராமங்கள் முன்னேற வேண்டும்!



**ராஜேந்திர மதுகர் பாம்ரே, கட்டிட கலைஞர்**
RC மாலேகான் மிட்-டவுன், RID 3030

2004-ம் ஆண்டு முதல் ரோட்டரி உறுப்பினராக இருந்து வரும் ராஜேந்திர மதுகர் பாம்ரே கூறுகிறார்: 1997-ம் ஆண்டிலேயே ரோட்டரியில் சேர முயன்றேன். ஆனால், சிறு சிறு பிரச்னைகள் இருந்ததால் அது தாமத மாகியது. 40 வயதுக்கு குறைவான இளைஞர்கள் ரோட்டரியில் சேர வேண்டும் என்பது எனது விருப்பம். அது மட்டுமல்ல: அவர்களது மனைவிமார்களும் இதில் சேர்ந்து திட்டங்களைச் செயல்படுத்துவதில் தீவிர பங்காற்ற வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள பெரும் பாலான பிராந்தியங்கள் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்தவை. மேலும் வறட்சிப் பகுதிகள். எனவே நீர் மேலாண்மைத் திட்டங்களையும் கிராமங்களுக்கு உகந்த திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.

உறுப்பினர்கள் எண்ணிக்கையை 10 சதவீதம் அதிகரிப் பதிலும், ரோட்டரி சென்ட்ரல் உறுப்பினர்கள் பதிவை 100 சதவீதமாக நிலைநிறுத்தவும் திட்டமிட்டுள்ளோம். ஒவ்வொரு சங்கமும் குறைந்தபட்சம் ஒன்று அல்லது இரண்டு கிராமங்களை தத்தெடுத்து அங்கு RCC-க்களை நிறுவவேண்டும்.

கடந்த சில வருடங்களாக ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதி வழங்குவதில் நமது மாவட்டம் சுணக்கம் காட்டி வருவது வருத்தம் அளிக்கிறது. இந்த ஆண்டு 4 லட்சம் டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளோம். அதை எப்படியும் நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன் என்றார் ராஜேந்திர மதுகர் பாம்ரே.

வடிவமைப்பு:
N கிருஷ்ணமூர்த்தி

# RI தெற்காசிய அலுவலக அறிவிப்புகள்

**மை ரோட்டரியில் பதிவு செய்வதால் ஏற்படும் நன்மைகள்:**
ரோட்டரி சங்க நிர்வாகிகள், மை ரோட்டரி என்னும் மின்னணு தளத்தில் தங்களது உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள், மாநாட்டு விவரங்கள், மின்னணு முறையில் சந்தா சேர்த்த விவரங்களைத் தெரிவிக்கலாம்.

**மின்னணு சங்கம் மற்றும் ரோட்டரி சங்கம்:**
வழக்கமாக உள்ள ரோட்டரி சங்கங்களுக்கும் மின்னணு சங்கங்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ரோட்டரி அமைப்புக்கான சட்டவிதிகளில் மின்னணு சங்கம் தொடர்பான குறிப்புகள் நீக்கப்பட்டுவிட்டன. மின்னணு முறையில் செயல்படும் சங்கங்கள் தங்களை ரோட்டரி சங்கங்களாக பாவித்து செயல்படலாம்.

### Top 10 Giving Districts (2018-19)

| District | Total Contribution in US$ | World wide Rank | 2018-19 District Governor |
|---|---|---|---|
| 3190 | 3,054,327 | 1 | Suresh Hari S |
| 3141 | 2,597,241 | 2 | Shashi Sharma |
| 3011 | 1,513,904 | 9 | Vinay Bhatia |
| 3131 | 1,388,290 | 15 | Shailesh Palekar |
| 3232 | 1,169,580 | 22 | Babu Peram |
| 3142 | 1,147,028 | 29 | Ashes Ganguly |
| 3201 | 1,033,161 | 36 | A V Pathy |
| 3060 | 977,037 | 45 | Pinky Patel |
| 3150 | 848,437 | 54 | Ramesh Vangala |
| 3170 | 724,285 | 75 | Ravikiran Kulkarni |

**2018–19 ரோட்டரி ஆண்டில் இந்தியாவில் நிதி திரட்டப்பட்டதன் முக்கிய அம்சங்கள்.**

❖ உலக அளவில் ரோட்டரிக்கு நிதியளிப்பதில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் பங்கு 21.4 மில்லியன் டாலர் (இது தணிக்கை செய்யப்படாத கணக்கு விவரம்.)

❖ ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதி வழங்குவதில் இந்தியாவில் 7 மாவட்டங்கள் 1 மில்லியன் டாலர் தொகைக்கு மேல் கொடுத்துள்ளன.

❖ ரோட்டரி மாவட்டங்கள் 2981, 3132, 3142, 3182 உள்ளிட்டவை 100 சதவீதம் ரோட்டரி சங்கங்கள் அறக்கட்டளைக்கு நிதி வழங்கியுள்ளன. இந்தியா முழுவதும் சராசரியாக 69 சதவீத சங்கங்கள் ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதி வழங்கியுள்ளன.

❖ இந்தியா விலிருந்து 23 சதவீத உறுப்பினர்கள் நன்கொடையாளர்கள் என்ற வகையில் ரோட்டரி அறக் கட்டளைக்கு 2018–19ல் அதிக நிதி வழங்கியுள்ளனர்.

❖ **இந்தியாவில் AKS உறுப்பினர்கள் (2018–19)**
ஆஸா சிங் (RID 3132), நிஷால் இரானி, அமித் சந்திரா, டைஸீன் கொராக்கிவாலா, விஜயலஷ்மி போடார், கிஷோரிலால் ஜுன்ஜுன்வாலா, ஜேது லால்வானி (RID 3141), R தீனச்சந்திரன் (RID 3000), ரவீந்திர ரெட்டி மாரி (RID 3150), உதய் பிளானி (RID 3150), D ரவிசங்கர் மற்றும் அஜித் ராய் (RID 3190), மாடர்ன் எஜீக்கேஷனல் டிரஸ்ட் (RID 3142).

**TRF-க்கு நன்கொடையில் முதல் 5 சங்கங்கள்:**
RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ், RID 3190 ($ 1,956,993); RC பாம்பே, RID 3141 ($864,169); RC தானே லேக் சிட்டி, RID 3142 ($431, 146); RC பெங்களூர் இந்திரா நகர்; RID 3190 ($380, 933) மற்றும் RC ஹைதிராபாத் டெக்கான், RID 3150 ($264,834).

**FRCA-பதிவுபெற்ற சங்கத்தின் கவனத்துக்கு:**
கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் உள்ள ரோட்டரி அறக்கட்டளை பல்வேறு திட்டங்களுக்கான நிதியை எதிர்பார்ப்பதற்கு முன்பாகவே வழங்கியுள்ளது. கூடுதலாக அறக்கட்டளை நிதி வந்த போது முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்த நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

திட்டச் செலவுகளுக்கு நிதி வழங்குவதில் இடைவெளி வேண்டும் என்பதால் சம்பந்தப்பட்ட சங்கங்கள் தங்களை FCRA-ல் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம். எனவே நிதி தேவைப்படும் சங்கங்கள் தங்களை FRCA-ல் பதிவு செய்துகொண்டு அல்லது பதிவு புதுபித்தல் கடிதங்களை ரோட்டரி அறக்கட்டளை (இந்தியாவிடம்) விரைவில் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.■

# Asha Kiran... a ray of hope

(A program to send children back to school)

Rotary India Literacy Mission

8.4 crore children in India are out-of-school.
It's time to take action.
Join hands with RILM's Asha Kiran Program.
Shape the Future of millions of children.

Asha Kiran... a ray of hope, aims to send children back-to-school who are between 7 to 14 years and are :

- Drop outs
- Never Enrolled or
- Laggards





Subho studied in Jogeshgunj Asha Kiran Center, Sundarban, West Bengal

From being a fisherman,
Subho is now destined to dream big
Thanks for your contribution towards Asha Kiran.

## Child Development National Committee



PDG Dr. Rekha Shetty
Chair



PDG Dr. John Daniel
Member (South)



PDG Sharat Jain
Member (North)



PDG Sibabrata Dash
Member (East)



PDG Mohan Palesha
Member (West)



PDG Atul Gargava
Member (Central)

Dear Rotarians and Rotary Clubs in India,

1. **Light up a candle** as commitment to **send one child** or more **back to school**

2. **Take a photo or video** of yourself or in a group and exhibit your commitment on **RILM Facebook group** www.fb.com/groups/RotaryIndiaLiteracyMission/ with **#AshaKiran**

3. **Motivate** your club **members**, **friends** and **family members** to **sponsor** children under the **Asha Kiran program.**

**Let us together light up the flame of Literacy** through Asha Kiran.. a ray of hope and help children go back-to-school!

You can help **make their dreams** come true!

# Asha Kiran Footprints


**14** States

**33** NGO Partners

**37,436** Children Reached

**35,078** Children Mainstreamed

# SUPPORT A CHILD TODAY BY DONATING ₹ 2,500/-



**Bank details for donation**

| | |
|---|---|
| Name | : Rotary South Asia SFD & C Literacy Mission |
| Account Number | : 037201003120 |
| Bank | : ICICI Bank |
| IFSC | : ICIC0000372 |
| Branch | : 95, Sarat Bose Road, Kolkata - 700 026 |

Send following details to **admin@rotaryteach.org**

1. Payment details -
   I. NEFT /Cheque/DD No
   II. Date
   III. Amount of Donation
2. Donor details -
   I. Name
   II. Address
   III. Mobile No
   IV. E-mail id
   V. Rotary District
   VI. Rotary Club
3. Copy of PAN Card required for donation above ₹ 20,000.

**For online donation visit : www.rotaryteach.org**

All donations to RILM are tax exempted u/s 80G of Income Tax Act.

For program related query mail to **childdevelopment@rotaryteach.org**
For donation related query mail to **admin@rotaryteach.org**
**www.rotaryteach.org | 033-2486 3434/ 70031 48401**

Wordsworld

# கடந்து செல்லும் ஒரு வாழ்க்கை

சந்தியா ராவ்

*கற்பனை செய்யப்படாத ஓர் உலகத்துக்கான சாளரங்களைத் திறக்கும் புத்தகங்களுடைய பரிசு*


நான் M S தோனியுடைய ரசிகராக இருக்கப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்று, அந்தக் கணத்தை வாழ்வதன் முக்கியத்துவத்தைப்பற்றி அவர் எப்போதும் பேசுகிறார். அவருடைய விளையாட்டாகிய கிரிக்கெட்டுடைய பின்னணியில் பார்க்கும்போது, நேற்றைய வெற்றியோ தோல்வியோ நேற்றோடு முடிந்துவிடுகிறது, நாளை என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது என்பதை அவர் எப்போதும் சுட்டிக் காட்டுகிறார். ஆக, இந்தக் கணத்தில் போட்டியில் நூறு சதவிகிதம் இருப்பது தான் முக்கியம். இந்தத் தத்துவத்தை வாழ்க்கையில் பல இடங்களில் பொருத்திப்பார்க்கலாம். தனிப்பட்ட ஓர் அனுபவம், சமீபத்தில் என்னுடைய தாய் மரணமடைந்தார். அந்த நாளைக் கடந்துவர எனக்கு உதவிய ஒரு விஷயம், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அந்தக் கணத்தில் இருப்பதுதான்; மேலும் பலரும் இந்த அனுபவத்தைச் சந்தித்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

சோகம், நேரடியான துயரத்தைக் கையாளும் பின்னணியில், பல ஆண்டுகளாக வடக்குக் கரோலினாவில் ஒரு மருத்துவராக பணியாற்றி வரும் ஒரு நல்ல நண்பர் எனக்கு இரண்டு நூல்களை அனுப்பினார்: ஜேம்ஸ் வான் ப்ராக் எழுதிய துயரத்தைக் குணப்படுத்துதல்: எந்தவொரு இழப்புக்குப்பிறகும் வாழ்க்கையைத் திரும்பப்பெறுதல், ஓப்ரா வின்ஃப்ரெ எழுதிய எனக்கு உறுதியாகத் தெரிந்தவை.

முதலில், இரு நூல்களும் மிக நன்றாக எழுதப்பட்டிருந்தன. வான் ப்ராக் சொல்லும் விஷயங்களைப் புரிந்து கொள்வதற்குள் நம் மனம் திகைத்துப்போகும், ஆனால் அவர் அவற்றை நேரடியான, எளிய முறையில் தெரிவிக்கிறார். இன்னோர் உலகத்துக்குச் சென்றுவிட்டவர்கள், அதாவது, இறந்து விட்டவர்களுடன் தொடர்புகொள்வதுபற்றி அவர் பேசுகிறார், அதன்மூலம், இன்னும் வாழ்கிறவர்களுடைய உலகங்களில் தெளிவைக் கொண்டுவரலாம் என்கிறார். மரணத்துக்குப் பிந்தைய வாழ்க்கையைப் பற்றி முடிவற்ற கேள்விகளைக் கொண்டிருப்பவர்கள் உண்டு. நாம் ஏன் இறக்கிறோம்? மரணத்துக்குப் பிறகு என்ன நடக்கிறது? நம்முடைய உடலை உதறியபின் நாம் எங்கு செல்கிறோம்? என்னுடைய அன்புக்குரியவர் அந்த உலகத்தில் பாதுகாப்பாக இருக்கிறாரா? இவை, சோகத்தை அனுபவிக்கிற பெற்றோர், குழந்தைகள், நண்பர்களை முற்றுகையிடுகிற கேள்விகளில் சில. என்னுடைய இரண்டாவது பெற்றோரையும் இழந்து, ஒழுங்கற்று, நிலைதடுமாறி, வருத்தமாக உணரத் தொடங்கியபிறகுதான் இதை நான் அதிகத் தெளிவுடன் உணர்ந்தேன்.

வான் ப்ராக் ஓர் ஆன்மிக ஊடகராகப் பணியாற்றியபோதும், அவரை வாசிப்பது ஓர் அமைதியான, ஆற்றலூட்டுகிற, சிந்தனையை அளிக்கிற, அதேசமயம் உறுதி யளிக்கிற அனுபவமாக இருந்தது. சோகமான இழப்பின்மீது ஆதிக்கம் செலுத்தும் அம்சமாக மரணம் இருந்தாலும்,அதுமரணத்துடன் மட்டும் தொடர்புடையதில்லை என்ற உண்மையையும் இது அடிக்கோடிட்டுக் காட்டியது. பிரிவு, விவாகரத்து, வீட்டின் இழப்பு, வலி மிகுந்த ஒரு நோய், வாழ்வின் மையத்தில் வரும் நெருக்கடி, வயதாதல், செல்ல விலங்கு களுடைய மரணத்துடன் கூட அது தொடர்பு கொண்டிருக்கலாம். அவருடைய மற்ற நூல்கள், அவருடைய வாழ்க்கை, புலன்கள் காணாதவற்றைக் காண்கின்ற, ஊடகராகப் பணியாற்றுகிற அனுபவங்களைப் பற்றியவை, துயரத்தைக் குணப்படுத்துதல் என்பது இழப்பிற்குப்பின் நிகழ்பவற்றில் கவனம் செலுத்துகிறது, உணர்வுகளை விரிவாகப் பேசு கிறது, ஒவ்வொரு பகுதியின் நிறைவிலும் குணப்படுத்தலுக்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

அறிவியலை மட்டும் நம்புகிறவர் கள் இந்த வரையறையை அலட்சியப் படுத்தக் கூடும், ஆனால், "டேஜா வூ" என்ற சொல், எங்கோ இதற்கு முன் சென்றிருக்கிற, எதையோ இதற்கு முன் கண்டிருக்கிற/அனுபவித்திருக்கிற, பழக்கமானதாக, ஏற்கெனவே தெரிந்ததாகத் தோன்றுகிற ஒன்றைப் பற்றிய உணர்வைப் பொதுவாக விவரிக்கிறது. பெரும்பாலானோர் ஏதோ ஒரு கட்டத்தில் இந்த டேஜா வூ உணர்வைக் கண்டிருப்பார்கள். ஒருவரைச் சந்திக்கிறீர்கள், உடனே நன்கு பழகு கிறீர்கள், இதற்கு முன் நீங்கள் அவரை அறிந்திருந்ததுபோல. இதைப்பற்றி வான் ப்ராக் எழுதுகிறார், ஆன்மிகப் பார்வையில் பார்க்கும் போது, இரு ஆன்மாக்களுக்கிடையிலான கர்மக் கடமைகளை அடைய வேண்டும் என்பதற்காக தான் விவாகரத்து நடக்கிறது. ஓர் ஆன்ம ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்காக தான் ஆன்மாக்கள் ஒரு வாழ் நாளின் போது மீண்டும் பிறக்கிறார்கள். நீங்கள் கர்மா அல்லது ஆன்மா அல்லது மறுபிறப்பு அல்லது கடவுளை




நம்பாவிட்டாலும், உணர முடியாத ஒருவகையில் இது சரியாக இருப்பதாகத் தோன்றுகிறது. விவாகரத்து அல்லது ஒரு பிரிவுக்குப் பிறகு நிகழும் வலி மிகுந்த தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொள்ளல் மற்றும் குற்றச்சாட்டைச் சந்திக்கிறவர்களுக்கு இது உதவும்.

ஆசிரியர் தன்னுடைய தந்தையிடம், வயதானவராக இருப்பது உங்களுக்கு எதையேனும் கற்றுத்தந்திருக்கிறதா? என்று கேட்கிறார். நிச்சயமாக, என்று பதில்சொல்கிறார் அவர். என் வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்க எனக்கு நிறைய நேரம் கிடைத்தது, நான் திரும்பத்திரும்ப அதைப்பற்றிச் சிந்திக்கிறேன், இப்போது எனக்குத் தெரிந்தது அப்போது தெரிந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று சிந்திக்கிறேன். பல வழிகளில் நான் வாழ்க்கையை இயல்பாக எடுத்துக் கொண்டுவிட்டேன். வாழ்க்கை எவ்வளவு மதிப்புமிக்கது என்பதை யாரும் உணர்வதில்லை. அது மிக விரைவாக நடந்துவிடுகிறது இதைப் பற்றி நிதானமாகச் சிந்தித்தால், என்னுடைய ஆண்டுகளெல்லாம் எங்கு சென்றன, அவை எப்படி இந்த அளவு வேகமாகக் கடந்து சென்றன என்று நான் வியக்கிறேன்.

அன்பு எப்போதும் இறப்பதில்லை, அச்சம் என்பது ஒரு கற்பனைத் தோற்றம், நாம் எப்போதும் கற்பதை நிறுத்துவதில்லை, ஒவ்வொரு கணத்தையும் மதிக்க வேண்டும், நாம் நேசிப்பவர்களிடம் நம் மனத்தில் இருப்பதைச் சொல்லவேண்டும் என்பனவற்றை நினைவில் வைத்துக் கொள்ளுமாறும் இந்தப் புத்தகம் கேட்கிறது. நம்மால் பிரபஞ்சத்தைக் கட்டுப்படுத்த இயலாது, ஆனால், நம்மால் நம்மைக் கட்டுப்படுத்த இயலும், நம்முடைய கண்ணீரை, சிரிப்பைப் பகிர்ந்துகொள்ள இயலும். நம்மைப்பற்றி அதிகம் தெரிந்து கொள்ள, சோகத்தைச் சமாளிக்க உதவக்கூடிய சில பயிற்சிகளையும் அவர் பரிந்துரைக்கிறார், ஏனெனில், சோகத்தை நாம் சந்திக்கத் வேண்டும்.

ஓப்ரா வின்ஃப்ரேயுடைய புத்தகம் எல்லா வகைகளிலும் அதிக நேர்த்தி யானது: அதன் தோற்றம், அதில் சொல்லப்படும் யோசனைகளின் வீச்சு, எழுத்து. சிகாகோ ட்ரிப்யூன் திரை விமர்சகர் ஜீன் சிஸ்கெல் ஓப்ராவைக் கேட்ட ஒரு கேள்வியிலிருந்து இந்தப் புத்தகம் தொடங்கியது: உங்களுக்கு உறுதியாகத் தெரிந்தவை எவை? அவற்றை எனக்குச் சொல்வீர்களா?'' இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க அவர் செய்கின்ற முயற்சி, மகிழ்ச்சி, விரிதிறன், இணைப்பு, நன்றியுணர்வு, பிரமிப்பு, தெளிவு, ஆற்றலைப்பற்றி அவருடைய சொந்த வாழ்க்கையிலிருந்து கிடைத்த சிந்தனையைப் பகிர்ந்து கொள்ள நம்மை அழைக்கிறது.

வான் ப்ராகுடைய புத்தகத்தைப் போலவே, ஓபராவுடைய புத்தகமும் ஆன்மாவுடன் அதிர் வுண்டாக்குகிறது, ஆனால், அவருடைய புத்தகத்தைப் போலின்றி, இந்தப் புத்தகம் இந்த உலகத்தில் தங்குகிறது. ஏழைமையான சூழலில் வளர்ந்த, பல சிரமங்களுக்கு நடுவிலும் தனக்கான ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்ட அவருடைய சொந்த அனுபவங்களிலிருந்து அது எழுகிறது. உங்கள் கணவர் நான் உன்னைப் பாராட்டுகிறேன் என்று சொல்வதற்காகக் காத்திருப்பதை நிறுத்துங்கள் என்று எழுதுகிறார் அவர், நீங்கள் மிகச் சிறந்ததாய் என்று உங்கள் குழந்தைகள் சொல்வதற்காக, ஓர் ஆண் உங்களை அழைத்துச் சென்று திருமணம் செய்துகொள் வதற்காக, அல்லது, உங்கள் சிறந்த நண்பர் நீங்கள் மிகச்சிறந்த மதிப்புடையவர் என்று உங்களுக்கு உறுதிப்படுத்துவதற்காகக் காத்திருப் பதை நிறுத்துங்கள். உள்ளே பாருங்கள்: அன்பு செலுத்துதல் உங்களிடம் தொடங்குகிறது.'' டையிங் டு பீ மீ என்ற நூலின் ஆசிரியரான அனிதா மூர்ஜானி, மரணத்தைத் தொட்டுத் திரும்பிய தன்னுடைய அனுபவத்தைப்பற்றிய TEDx பேச்சில் இதைத் தான் தெரிவிக்கிறார். வாழ்தல்பற்றிய அவருடைய ஐந்து பாடங்கள், ஐயப்படுகிறவர்களிடம் கூட அதிர்வுண்டாக்குவது நிச்சயம்: அன்பின் மீது கவனம் செலுத்துங்கள், முதலில், உங்களை நேசியுங்கள்; வாழ்க்கையை அச்சமின்றி வாழுங்கள்; நகைச்சுவை, சிரிப்பு, மகிழ்ச்சியை ஏற்றுக்கொள்ளுங்கள்; வாழ்க்கை ஒரு பரிசு; எப்போதும் நீங்களாக இருங்கள்.




பல நேரங்களில், நான் வெளியில் துணிவாகத் தோன்றினாலும், என்னுடைய உள் வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கட்டுக்களுக்குள் தான் வாழ்ந்துள்ளேன் என்பதை நான் காலப்போக்கில் புரிந்து கொண்டேன். பிறர் என்னை விரும்ப மாட்டார்களோ என்று அஞ்சினேன். நான் எதையாவது மறுத்தால், மக்கள் என்னை நிராகரித்து விடுவார்கள் என்று அஞ்சினேன். நான் செய்தவை, சிந்தித்தவை, உணர்ந்தவை, சொன்னவை, ஏன், நான் சாப்பிட்டவை கூட நான் என்னோடு எங்கும் எடுத்துச் சென்ற அச்சத்துடன் இணைந் திருந்தன: உண்மையில் யார் என்பதை எப்போதும் அறியாத படி அது என்னைத் தடுக்க நான் அனுமதித்தேன். நாம் யாருக்கும் எதையும் நிரூபிக்க வேண்டியதில்லை, நமக்கு நிரூபித்துக் கொண்டால் போதும் என்ற உண்மையை சொல்கிறார்.

வாசிக்க வாசிக்க, ஓப்ரா உங்களை உள்நோக்கிப் பார்க்கச் செய்கிறார், உங்களுடைய சொந்த வாழ்க்கையை ஆராய வற்புறுத்து கிறார். எத்தனை முறை தோற்றாலும் மீண்டும் எழுந்து நிற்பேன் என்கிற குணம் தான் உண்மையான துணிச்சலின் அளவீடு. ஓபரா வின்ஃப்ரே உலகம் முழுக்கப் புகழ் பெற்றவர், அவர் வெற்றிகரமான பெண்ணாக திகழ்கிறார். அவர் அடிமட்டத்தில் தொடங்கி முன்னுக்கு வந்தவர்.

ஓப்ரா, வான் ப்ராக், அனிதா இவர்கள் எல்லாரும் சிறந்த கதைகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள், ஆனால், இதன் மூலம் நாம் நம்மைப் பற்றிச் சிந்திக்கும் படி அவர்கள் செய்ய வேண்டும், நம்முடைய சொந்த வாழ்க்கைகளைத் திரும்பிப் பார்க்க வைக்க வேண்டும். அதுதான் ஒரு நல்ல நூலுடைய உண்மையான அளவீடு.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



**RC வேதாராணியம்** — RID 2981
IPDG S பிரையோன் உப்பு சத்தியா கிரக நினைவு மண்டபத்தில் 35 ஏழை குடும்பங்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கினார். 25 ரோட்டரியன்கள் பங்கேற்ற இந்த திட்டத்திற்கான செலவு ரூ.10,000.

**RC கந்தர்வகோட்டை பாரத்** — RID 3000
மிஷன் மனநல வாழ்வு பயிற்சி மையத்திற்கு 2 மின்சார விசிறிகள் 1 சுவர் கடிகாரம் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மையத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மைக்கேல் ராஜ்.







**RC விசாக் தம்பதிகள்** — RID 3020
ரோட்டரியின் மதிப்பை மேம்படுத்தும் பொருட்டு, ஹனுமந்தவகா ஜங்ஷன் மலையில் அமைந்துள்ள 64 வீடுகளுக்கு உற்சாகமூட்டும் வண்ணங்கள் பூசப்பட்டன. ரோட்டரி பெயர் மற்றும் அதன் லோகோ அருகிலுள்ள ட்ராஃபிக் சிக்னல் நிறுத்தத்திலிருந்து தெரியும் வகையில் மலையின் மேல் வரையப்பட்டன. இந்த திட்டத்திற்கான செலவு ரூ.2.75 லட்சம்.

**RC டெல்லி சவுத்தெக்ஸ்** — RID 3011
சங்க உறுப்பினர்கள் அல்கான் இன்டர்நேஷனல் பள்ளியின் இன்டராக்ட் கிளப்புடன் இணைந்து கைலாஷ் காலனியில் பிரகதி கேந்திரா எனும் NGO நடத்தும் பள்ளிக்கு வருகை தந்து தையல் எம்பிராய்டரி பயிற்சி பெறும் 150 குழந்தைகள் மற்றும் 15 பெண்களுக்கு ஆடைகள், எழுது பொருள்கள் ஆகியவற்றை வழங்கினார்கள்.



# சங்க சேவைகள்

### RC அகோலா மிட் டவுன் — RID 3030

சோனாலா கிராமத்தின் ஜில்லா பரிஷத் பள்ளி மாணவர்களுக்கு சங்க உறுப்பினர்கள் நோட்டுக்குகளை வழங்கினார்கள். மேலும் DG ராஜேந்திர பம்ரே முன்னிலையில் தாலசீமியா குழந்தைகளுக்கான இரத்த தான முகாம் நடைபெற்றது.



### RC அம்ரேலி கிர் — RID 3060

இன்டராக்டர்களுடன் இணைந்து செவித்திறன் மற்றும் பேச்சு குறைபாடுள்ளவர்களுக்கான ஒரு பள்ளியில் மரம் நடுதல் நிகழ்வை நடத்தியது. தலைவர் பியூஷ் அஜ்மேரா மாணவர்களிடம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து பேசினார்.



### RC இந்தோர் மேக்னூட் — RID 3040

சங்கம் RC இந்தோர் அப்டவுனுடன் இணைந்து, நகரில் உள்ள போலீஸ் பயிற்சி மையத்தில் 200 மரங்களை நட்டனர். கூடுதல் SP ராஜேஸ்வரி மொஹோபியா, சங்க தலைவர் கன்ஷ்யம் சிங், PDG லோகேந்திர பாபாலால் மற்றும் பிற ரோட்டரியன்கள் கலந்து கொண்டனர்.



### RC ஜம்மு மிட்டவுன் — RID 3070

ஒரு குடிசை குடியிருப்பில் மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. சானிட்டரி பேட்கள் இளம்பெண்களுக்கு வழங்கப்பட்டது.



### RC மாண்ட்வி — RID 3054

ரோட்டரி ஆண்டை மங்களரமாக தொடங்க ரோட்டரியன்கள் 100 பசுக்களுக்கு புல் தீவனமளித்தனர். மாண்ட்வி கல்லூரி மற்றும் SV ஆர்ட்ஸ் காமர்ஸ் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து, அவர்கள் ஒரு வளாகத் தோட்டத்தை உருவாக்கினர், இது முதல் ஆண்டு மாணவர்களால் தங்கள் படிப்பை முடிக்கும் வரை பராமரிக்கப்படும்.



**RC சண்டிகர்** — RID 3080
காசநோயை ஒழிப்போம் பிரச்சாரத்திற்கான நடைபயணம் சுக்னா லேக்கில் PGIMER, குழந்தை மருத்துவப் பிரிவின் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்டது. PRIP ராஜேந்திர சாபூ, ரோட்டரக்டர்கள், பாராமெடிக்ஸ், பவன் வித்யாலயா மாணவர்கள் பொதுமக்கள் பங்கேற்ற நிகழ்வில் நிறுவனத்தின் இயக்குனர் Dr ஜகத் ராம் கொடியேற்றினர்.



**RC சுனம்** — RID 3090
பள்ளிகள், பூங்கா, தொழில்துறை பகுதிகள் நகரின் பிற பகுதிகள் உட்பட 13 வெவ்வேறு இடங்களில் 140க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன. ரோட்டரியன்களுக்கு பள்ளி மாணவர்கள் உதவினர். தலைவர் யஷ் பால் மங்லா, திட்டத் தலைவர் தேவிந்தர் B சிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.






**RC அம்பெர்நாத் ஸ்மார்ட் சிட்டி** — RID 3142
அங்கன்வாடி திட்டத்தின் கீழ், தனது முதல் "டிஜிட்டல் அங்கன்வாடியை" சிவன் கோயிலுக்கு அருகில் மேற்கொண்டது. தலைவர் திலீப் கோத்தவாடே தொடங்கிய திட்டத்தின், கட்டம்-1ல் மெத்தை, கல்வி படங்கள், குப்பைக் கூடைகள் மல்டிமீடியா ஸ்பீக்கர்கள் போன்றவற்றை நன்கொடையாக அளிப்பதன் மூலம் 28 அங்கன்வாடிகள் சீரமைக்கப்பட்டன. இந்நிகழ்விற்கு DGND மயூரேஷ் வர்கே தலைமை தாங்கினார்.




**RC கதூர்** — RID 3182
ஒரு மெகா திட்டத்தில், 8 தொலைதூர கிராம பள்ளிகளின் குழந்தைகளுக்கு ரூ.1.5 லட்சம் மதிப்புள்ள எழுது பொருள்களுடன் 300 ஸ்கூல்பேக்குகளை விநியோகித்தது.

**RC மிரா ரோடு** — RID 3141
மிரா காவ்னின் கிராமன் வித்யாலயா மாணவர்களுக்கு விளையாட்டு டி-ஷர்ட்கள் வழங்கப்பட்டன. உடல் மற்றும் மன எழுச்சிக்காக விளையாட்டு செயல்பாட்டில் பங்கேற்க அவர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள்.



# சங்க சேவைகள்

**RC பெரம்பவூர் சென்ட்ரல்** — RID 3201
அஸ்ரம் லோயர் பிரைமரி பள்ளியில் தலைவர் எல்டோ டி பால் “வின் எ ஸ்மைல்” திட்டத்தை தொடங்கி வைத்த நிகழ்வில் 250 மாணவர்களுக்கு பல் மற்றும் வாய் சுகாதாரப் பொருட்கள் வழங்கப்பட்டன.



**RC திருப்பூர் மிட்டவுன்** — RID 3202
வெள்ளக்கோவிலில் 3 அரசு பள்ளிகளுக்கு 2,000க்கும் மேற்பட்ட பாடப் புத்தகங்கள் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டன. ரோட்டரியன்கள் பள்ளி வளாகத்தில் 50க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளையும் நட்டனர்.





**RC மெட்ராஸ் சென்ட்ரல்** — RID 3232
தலைவர் சஞ்சய் துர்காவால் ஒரு அன்னெட்ஸ் (ரொட்டேரிகயன்களின் குழந்தைகள்) கிளப் தொடங்கப்பட்டது. மேலும், நீர் பாதுகாப்பு பற்றி முற்றிலும் குழந்தைகளால் படம் பிடிக்கப்பட்டு தொகுக்கப்பட்ட ஒரு வீடியோ வெளியிடப்பட்டது. தீம் மற்றும் ஸ்கிரிப்டை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆன் ஆஷா மெரினாவின் ஆதரவுடன் அன்னெட் கவுரி ரவிக்குமார் வழங்கினார்.



**RC திமாபூர்** — RID 3240
ரோட்டரியின் 114 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில் 100க்கும் மேற்பட்ட பழ மற்றும் அலங்கார மரக்கன்றுகளை சங்கம் நட்டியது. ரோட்டேரியன்கள் தன்னார்வலர்கள் உற்சாகமாக கலந்து கொண்ட இந்த பசுமை இயக்கம் ரோட்டரியின் சிறப்பை மேம்படுத்தியது.




**RC ஜபல்பூர் தெற்கு** — RID 3261
ராஜ்யசபா MP, PDG விவேக் டங்கா அவரின் சமூக வளர்ச்சிக்கான முப்பதாண்டு சேவைக்காக பாராட்டப்பட்டார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

# நன்றாக உறங்குங்கள்... எடையைக் குறையுங்கள்

ஷீலா நம்பியார்

இந்த ஆறு விஷயங்களைச் செய்தால் உங்கள் உடல் எடை 10 பவுண்ட் குறையும் என்பதுபோன்ற கட்டுரைகளைப் பார்த்திருப்பீர்கள். இது அப்படிப்பட்ட கட்டுரை இல்லை. இங்கு நாங்கள் ஆறு எதார்த்தமான பழக்கங்களை வழங்குகிறோம், இவற்றை ஒழுங்காகப் பின்பற்றினால், உங்களுடைய எடைக் குறைப்புத் திட்டம் சரியாகச் செயல்படும், இரவில் நன்கு தூங்குவீர்கள், அது உங்களுடைய எடை குறைய உதவும்.

தூக்கமும் எடையும் பிரிக்க இயலாதபடி தொடர்புடையவை. இரவில் நல்ல தூக்கம் இல்லாவிட்டால், மறுநாள் உடலால் சிறப்பாகச் செயல்பட இயலாது. பல நாட்கள் நல்ல தூக்கமில்லாமல் இருக்கிறவர்களுக்கு இதய நோய், உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, தோல் வயதாதல், எடை அதிகரிப்பு வரும் ஆபத்து உள்ளது. தூக்கமானது, லெப்டின், க்ரெலின் என்ற ஹார்மோன்களை மாற்றி உங்கள் பசி, பசியெடுத்தலைப் பாதிக்கிறது, இதனால் உணவின்மீது ஏக்கம் அதிகரிக்கிறது, குறிப்பாக, சர்க்கரை அதிகமுள்ள, கார்போஹைட்ரேட் அதிகமுள்ள, கொழுப்பு அதிகமுள்ள உணவை உடல் எதிர்பார்க்கிறது, பசி, களைப்பைப் பிரித்துப்பார்க்க இயலாதபடி உடலை மாற்றிக் குழப்புகிறது. மோசமான தூக்கத்தால், அன்றாட வாழ்க்கையில் தீர்மானமெடுக்கும் திறன் பாதிக்கப்படுகிறது. ஓர் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதில் தொடங்கி, நல்ல, தரமான உணவா, குப்பை உணவா என்று தேர்ந்தெடுப்பதுவரை அனைத்திலும் பிரச்னை வருகிறது. ஆகவே, இரவில் நன்கு தூங்குவதற்கு நீங்கள் மிகுந்த முக்கியத்துவம் தரவேண்டும்.

### மேம்பட்ட தூக்கத்துக்காக நீங்கள் இரவில் பின்பற்றக்கூடிய சில எளிய பழக்கங்கள், இதோ:

- இரவுணவு உண்ட பின் குறைந்தது 20 நிமிடங்கள் ஒரே இடத்தில் அமர்ந்திருக்க வேண்டாம்
- அடுத்த நாளுக்கான உணவுகளைத் திட்டமிடுங்கள்
- அடுத்த நாளுக்கான செயல்களைத் திட்டமிடுங்கள்
- கதகதப்பான நீரில் குளியுங்கள்
- நன்றியுணர்வுக் குறிப்பேடு ஒன்றை எழுதத் தொடங்குங்கள்
- தியானம் செய்யுங்கள் அல்லது, ஆழமாக மூச்சுவிடுதல்போன்ற மனத்தைத் தளர்வாக்கும் ஓர் உத்தியைப் பயன்படுத்துங்கள்

### இரவுணவுக்குப்பிறகு ஒரே இடத்தில் அமரவேண்டாம்

பெரும்பாலானோர் இரவுணவுக்குப் பிறகு TVக்கு முன்னால் அமர்ந்து விடுகிறார்கள், அல்லது, படுத்துத் தூங்கி விடுகிறார்கள். இது நல்லதில்லை. அதற்குப்பதிலாக, வீட்டைச்சுற்றி நடக்கலாம், நாயை வெளியில் அழைத்துச்செல்லலாம், இரவுணவுக்குப்பின் 30-60 நிமிடங்களுக்கு உடல் அசைந்து கொண்டே இருக்கும் படி ஏதாவது வேலை செய்யலாம். அலமாரி/சமையலறையைச் சுத்தப்படுத்துதல் அல்லது உங்கள் புத்தகங்களை மீண்டும் அடுக்கி வைத்தல் என்பது போன்ற சில எளிய வேலைகள்கூட உங்களைச் சுறுசுறுப்பாக்கலாம். உணவுக்குப்பிறகு ஒரே இடத்தில் அமர்ந்திருக்காமல் சுறுசுறுப்பாக இருந்தால், உங்களுடைய ரத்தத்தில் சர்க்கரை அளவு கட்டுக்குள் இருக்கும்.



### அடுத்த நாளுக்கான உணவுகளைத் திட்டமிடுங்கள்

உணவைத் திட்டமிடுவதற்கு மிகுந்த சிந்தனை, கவனம் தேவை, ஆனால், பல நேரங்களில் அது கவனிக்கப்படுவதில்லை. காலை நேரப் பரபரப்பில் நீங்கள் உங்களுடைய உணவைத் திட்டமிட முயலும்போது, நேரம் போதாததாலும் அழுத்தக் காரணியாலும் நீங்கள் சிறந்த தீர்மானங்களை எடுப்பதில்லை. கடைசி நேரத்தில், சூப் செய்வதற்குத் தேவையான உட்பொருள்கள் இல்லை அல்லது, நாள்முழுக்கத் தேவையான காய்கறிகள்/பழங்கள் இல்லை என்பதை நீங்கள் கண்டறியக்கூடும்.

உணவை முன்கூட்டியே திட்டமிட்டால், முந்தைய நாளே அவற்றுக்கான அடிப்படைத் தயாரிப்பு களைச் செய்துவைத்தால், மறுநாள் உங்களுக்கு நிறைய நேரம் கிடைக்கும், அலுவலகத்துக்குக் கிளம்புவதோ, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதோ எளிதாகும்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் காலை உணவுக்கு ஓட்மீல் சாப்பிடுகிறீர்கள் என்றால், இரவே அதைத் தனித்தனிக் கிண்ணங்களில் போட்டு ஊறவைக்கலாம், பழங்களை வெட்டிப் போடலாம், சிறிது பாதாம் பால் ஊற்றலாம், ஒட்டுமொத்தக் குடும்பமும் காலை உணவுக்கு எடுத்துக் கொள்ளும்படி அதைக் குளிர்பதனப்பெட்டியில் வைக்கலாம். தேவைப்பட்டால், கைப்பிடி விதைகள்/ பருப்புகள் மற்றும் இனிப்புக்குச் சிறிது பேரிச்சம்பழ சிரப் சேர்க்கலாம், காலை உணவு தயார்.

சமைத்த பீன்ஸைக் குளிர்பதனப் பெட்டியில் வைத்தால், சட்டென்று சாலட் தயாரிக்கலாம், அல்லது, வெட்டிய காய்கறிகளைத் தனித்தனிப் பாத்திரங்களில் உறைவிப்பானில் சேமிக்கலாம், காலைப்பரபரப்பைக் குறைக்க இவை உதவும்.

பல நேரங்களில், மறுநாளைப் பற்றிய பதற்றத்தில், அல்லது, உணவைத் தயாரிக்க அரைமணிநேரம் முன்பாக எழவேண்டும் என்ற கவலையால்கூட இரவுத் தூக்கம் பாதிக்கப்படலாம். இரவிலேயே பகுதியளவேனும் தயாராவதன்மூலம் காலைப் பழக்கத்திலிருந்து அழுத்தத்தைக் குறையுங்கள்.

### அடுத்த நாளுக்கான செயல்களைத் திட்டமிடுங்கள்

திட்டமிடுங்கள். எப்போது அலுவலகம் செல்வீர்கள்? எப்போது சமைப்பீர்கள்? எப்போது உடற்பயிற்சி செய்யப்போகிறீர்கள்? எப்போது மின்னஞ்சல்களைப் படிக்கப்போகிறீர்கள்? ஓய்வு நேரம் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?

பல நேரங்களில், ஒரு நாளில் என்ன செய்வது என்ற தெளிவான திட்டம் நம்மிடம் இல்லை, அதிகரிக்கும் இயங்குவிசை நம்மை அடித்துக்கொண்டு போய்விடுகிறது. நாம் திட்டமிட்டபடி எல்லாம் நடக்காமலிருக்கலாம், அதற்காகத் திட்டமிடாமல் இருக்கக்கூடாது. தேவைப்படும் அளவுக்கு அதில் நெகிழ்வைச் சேர்த்துக்கொள்ளலாம்.

உண்மையான வியூகம் எதுவும் மனத்தில் இல்லாமல், நேரத்தின் போக்கில் செல்கிறவர்களால் எதையும் சரியாகச் செய்ய இயலாது. எடுத்துக் காட்டாக, திடீரென்று சில மணி நேரங்கள் செய்வதற்கு எதுவும் இல்லாமல் போகலாம். இந்த நேரத்தில்தான் அவர்கள் தங்களையும் அறியாமல் நொறுக்குத்தீனிகளைச் சாப்பிடத்தொடங்குவார்கள். அதற்குப்பதிலாக, நெடுநாளாகக் காணாத ஒரு நண்பரைச் சந்தித்துப் பேசத் திட்டமிடலாம், மின்னஞ்சல்களைப் படிக்கலாம், சிறிது தூரம் நடக்கலாம். ஒரு திட்டத்தைத் தயாரியுங்கள்.

பின்மாலை நேரம், மறுநாளைப் பற்றிச் சிந்திப்பதற்கான ஒரு நல்ல நேரமாகும். இதை எளிமையாகக்கூடச் செய்யலாம்: 'நினைவூட்டிகளில்' ஒரு சிறிய குறிப்பை எழுதிவைக்கலாம், இதை மறுநாள் எடுத்துப்பார்க்கலாம். இதைச் செய்வதன்மூலம், முடியப் போகும் நாளை நம்பிக்கையுடன் முடித்துவைக்கிற ஓர் உணர்வும், மறுநாளுக்கான நோக்கமும் உங்களுக்குக் கிடைக்கும்.

### கதகதப்பான நீரில் குளியுங்கள்

தூங்கச்செல்லுமுன் கதகதப்பான நீரில் குளித்தால் மனம் தளர்வாகும், நல்ல தூக்கம் கிடைக்கும். கதகதப்பான நீரில் குளித்தபின் உடல் வெப்பநிலை குறைகிறது, இது நல்ல தூக்கத்துக்கு உதவுகிறது. தூங்குவதற்கு 1-2 மணிநேரம் முன்பாகக் குளிக்கவேண்டும், 10 நிமிடத்துக்குமேல் குளிக்க வேண்டிய தில்லை என்கிறது. தூக்கத்துக்கு முன் கதகதப்பான நீரில் குளித்தால் ஆழமான தூக்கம் சாத்தியமாகிறது.

### நன்றியுணர்வுக் குறிப்பேடு ஒன்றை எழுதத் தொடங்குங்கள்

ஒவ்வோர் இரவும் ஒரு நன்றியுணர்வுக் குறிப்பேட்டை எழுதினால் தூக்கம் மேம்படலாம் என்கிறது நேர்வித உளவியல் துறை ஆய்வு. நாள்முழுக்க எந்தெந்த விஷயங்களுக்காக நீங்கள் நன்றியாக உணர்கிறீர்கள் என்பதை எழுதுவதற்காக வெறும் 15 நிமிடங்களைச் செலவிட்டால், நல்ல தரமான தூக்கம் கிடைக்கிறது. இதனால், அதிக நேர்வித எண்ணங்கள் வருகின்றன, எதிர்மறை எண்ணங்கள் குறைகின்றன, சிறப்பாக, தூங்கும் நேரத்தில் இது நல்ல பலன் தருகிறது. எதிர்மறை உணர்வுகளை அசைபோடுவதை இது தடுக்கிறது. இதனால், விரைவில் தூங்கலாம், அதிக நேரம், நன்றாகத் தூங்கலாம்.

### தியானம் செய்யலாம் அல்லது மனத்தைத் தளர்வாக்கும் ஓர் உத்தியைப் பயன்படுத்தலாம்

நிறைவாக, படுக்கையில் படுக்கி றீர்கள், கண்களை மூடுகிறீர்கள், சிந்தனைகளைக் குழப்பமான திசை களில் அலையவிடாமல், மனப் பூர்வமான, தியான நிலைக்குச் செல்லுங்கள், ஆழமாக மூச்சுவிடுங்கள். மூச்சில்மட்டும் கவனம் செலுத்துங்கள். உங்கள் மனம் அலைய விரும்பும், பல எண்ணங்கள் எட்டிபொபார்க்கும். மெது வாகக் கவனத்தை உங்கள் மூச்சுக்குத் திரும்பக் கொண்டுவாருங்கள், அது ஆழமாகவும் மெதுவாகவும் ஆவதைக் கவனியுங்கள். தியானம் மற்றும் மனமுழுமை ஆகியவை அழுத்தத்தைக் குறைப்பது கண்டறியப்பட்டுள்ளது, ஆழமான மூச்சுவிடல் பாராசிம்பதெடிக் நரம்பு அமைப்பைத் தூண்டி உங்களை அமைதிப்படுத்துகிறது, அதனால் நன்கு தூக்கம் வருகிறது.

இதன் ஆசிரியரை *sheelanambiar@gmail.com* என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம்.
*Website:www.drsheelanambiar.com*

**ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தா செலுத்தும் வழிகள்:**

*இப்போது நீங்கள்* **ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தாவை** *ஆன்லைன் மூலமும் செலுத்தலாம். எங்கள் வங்கி விவரம்:*

Bank : HDFC Bank
SB Account

Branch : Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

*ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், உங்கள் சங்கப்பெயர், சங்கத் தலைவர்/செயலாளர் பெயர், பணம் செலுத்திய தேதி, எவ்வளவு செலுத்தினீர்கள் மற்றும்* UTR *எண் இவற்றை மறக்காமல் எங்களுக்கு இமெயில் செய்து விடுங்கள்.*

*சந்தாவை உங்கள் வங்கியில் காசோலை அல்லது ரொக்கமாக கட்டினால் உங்கள் சங்கப் பெயரை மட்டும் அங்கு குறிப்பிடுங்கள்.* "Rotary club of" *என்பதை தவிர்க்கவும்.*

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,205,049 |
| Clubs | : | 35,927 |
| Districts | : | 538 |
| *Rotaractors | : | 157,520 |
| Clubs | : | 9,520 |
| *Interactors | : | 567,387 |
| Clubs | : | 24,669 |
| RCC | : | 10,615 |

As on Aug 15, 2019

## Membership Summary

As on Aug 1, 2019

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 112 | 4,591 | 209 | 46 | 239 | 219 |
| 2982 | 68 | 3,048 | 163 | 69 | 117 | 54 |
| 3000 | 132 | 5,191 | 482 | 234 | 691 | 208 |
| 3011 | 85 | 3,587 | 865 | 47 | 119 | 25 |
| 3012 | 95 | 3,783 | 963 | 59 | 134 | 57 |
| 3020 | 71 | 4,168 | 221 | 58 | 467 | 350 |
| 3030 | 92 | 4,848 | 619 | 91 | 327 | 210 |
| 3040 | 93 | 2,079 | 230 | 33 | 138 | 143 |
| 3053 | 65 | 2,891 | 522 | 12 | 60 | 96 |
| 3054 | 125 | 5,711 | 928 | 82 | 330 | 475 |
| 3060 | 99 | 4,125 | 545 | 60 | 130 | 140 |
| 3070 | 105 | 3,100 | 392 | 49 | 164 | 58 |
| 3080 | 84 | 3,475 | 324 | 92 | 237 | 111 |
| 3090 | 81 | 2,001 | 49 | 36 | 39 | 122 |
| 3100 | 79 | 1,949 | 120 | 12 | 80 | 146 |
| 3110 | 123 | 3,940 | 392 | 32 | 55 | 104 |
| 3120 | 80 | 3,375 | 448 | 32 | 63 | 52 |
| 3131 | 134 | 5,281 | 1,142 | 99 | 319 | 91 |
| 3132 | 96 | 3,742 | 388 | 40 | 222 | 157 |
| 3141 | 104 | 5,678 | 1,352 | 113 | 274 | 88 |
| 3142 | 97 | 3,275 | 633 | 81 | 206 | 64 |
| 3150 | 95 | 3,604 | 367 | 63 | 255 | 115 |
| 3160 | 77 | 2,679 | 186 | 32 | 48 | 83 |
| 3170 | 129 | 5,688 | 670 | 63 | 356 | 165 |
| 3181 | 86 | 3,648 | 352 | 58 | 275 | 115 |
| 3182 | 84 | 3,124 | 224 | 32 | 283 | 97 |
| 3190 | 125 | 4,873 | 658 | 129 | 374 | 54 |
| 3201 | 145 | 5,488 | 390 | 98 | 141 | 49 |
| 3202 | 129 | 4,978 | 276 | 80 | 452 | 47 |
| 3211 | 141 | 4,448 | 290 | 8 | 98 | 129 |
| 3212 | 100 | 4,071 | 322 | 101 | 304 | 145 |
| 3231 | 85 | 3,708 | 355 | 54 | 226 | 355 |
| 3232 | 125 | 5,315 | 913 | 125 | 354 | 85 |
| 3240 | 89 | 3,088 | 402 | 55 | 478 | 188 |
| 3250 | 102 | 3,857 | 672 | 65 | 222 | 181 |
| 3261 | 71 | 2,536 | 332 | 13 | 114 | 43 |
| 3262 | 93 | 3,355 | 414 | 40 | 81 | 77 |
| 3291 | 146 | 3,637 | 731 | 85 | 147 | 610 |
| **India Total** | **3,842** | **147,935** | **18,541** | **2,478** | **8,619** | **5,508** |
| 3220 | 72 | 1,979 | 271 | 81 | 212 | 73 |
| 3271 | 87 | 1,363 | 226 | 61 | 19 | 18 |
| 3272 | 137 | 1,707 | 290 | 52 | 40 | 43 |
| 3281 | 212 | 5,775 | 874 | 222 | 101 | 192 |
| 3282 | 154 | 4,768 | 585 | 137 | 50 | 44 |
| 3292 | 120 | 4,729 | 722 | 123 | 142 | 114 |
| **S Asia Total** | **4,624** | **168,256** | **21,509** | **3,154** | **9,183** | **5,992** |

*Source: RI South Asia Office*


# On the racks

**Hachette India has come out with a treasure trove of old classics under the category Hachette Essentials, which are collector's items. Here is a taste of four great and award-winning writers — Thomas Keneally, Margaret Artwood, Alice Walker and Viet Thanh Nguyen, whose immortal works have been freshly published.**

## The Sympathizer

Author : **Viet Thanh Nguyen**
Price : **₹499**


Winner of the 2016 Pulitzer; Andrew Carnegie Medal for Excellence in Fiction; Edgar Award for Best Novel, this is a powerful story of love and friendship, and a skilfully written espionage novel. The narrator, a Vietnamese army captain, is a man of divided loyalties, being a half-French, half-Vietnamese communist sleeper agent in America after the end of the Vietnam War. Hailed as a "remarkable debut novel" and "a new classic of war fiction", *The Sympathizer* promises exciting reading.




## The Color Purple

Author : **Alice Walker**
Price : **₹399**


Set in the deep American South between the wars, this book relates the powerful and poignant story of Celie, a young black girl, born into poverty and segregation. Raped repeatedly by the man she calls 'father', she has two of her children taken away from her and is trapped into an unhappy marriage. But then she meets a woman who has taken charge of her own destiny and slowly Celie's transformation begins. A global bestseller, it has inspired generations of readers. This is what the celebrated writer, Chimamanda Ngozi Adichie says about *The Color Purple:* "A lush celebration of all that it means to be female, to be a black female, and like the best of celebrations, it is an honest one."




## Schindler's Ark

Author : **Thomas Keneally**
Price : **₹999**

Many of us have been deeply moved by Steven Spielberg's powerful film *Schindler's List*, that walked away with as many as seven Oscars in 1994, including best picture, best director, best actor (Liam Neeson) and best supporting actor (Ralph Fienns). That movie was the adaptation of the brilliant book *Schindler's Ark*, written by Thomas Keneally, about Oskar Schindler, a heavy-drinking, womanising member of the Nazi party. But under the dark shadow of the Auschwitz concentration camp he risks everything, including his life, to whisk away to safety the Jews working for him. And this too from right under the nose of the dreaded SS in Adolf Hitler's Germany.




It was only in 1982 that Keneally's book brought to international attention the incredible story of this brave businessman, who World War II turned into an angel of mercy. The book went on to win the Booker Prize. In 1993, when *Schindler's List* was made, Oskar Schindler and his wife were named Righteous Among the Nations.

The book materialised after Keneally visited in 1980 a luggage store in Beverly Hills, California, looking for a briefcase. The store was run by one of Schindler's survivors Leopold Pfefferberg. "It was beneath Pfefferberg's shelf of imported Italian leather goods that I first heard of Oskar Schindler," writes Keneally. The fascinated man went on to interview 50 of Schindler's survivors from seven nations, and the result was this gem of a classic.

## The Blind Assassin

Author : **Margaret Artwood**
Price : **₹499**

Canadian writer Margaret Artwood is the talented and versatile writer of some 40 works that include fiction, poetry, critical essays, and her books have been published in over 35 countries. *The Blind Assassin* won the 2000 Booker Prize. It is a remarkable book where Iris Chase, and her sister Laura, grow up motherless in a small town in Southern Ontario. The aging Iris recalls her life's events and relationships, including her unhappy marriage to Toronto businessman Richard Griffen. Artwood is a remarkable storyteller and critics have lauded this book for the many layers hidden in its pages, which readers have to peel off one by one.



Compiled by Rasheeda Bhagat

# இருண்ட திரையரங்கங்களில் தொடங்கி ஆடம்பர மல்ட்டிப்ளெக்ஸ்கள் வரை...

LBW

TCA ஸ்ரீநிவாசராகவன்

அறுபதாண்டுகளாக, வாழ்க்கை பல சுவையான திருப்பங்களைக் காட்டி வந்திருக்கிறது. 1967ல் நான் பள்ளிப்படிப்பை நிறைவு செய்த போது, கல்லூரியில் நான் என்ன படிப்பேன் என்று எனக்குச் சுத்தமாகத் தெரிந்திருக்கவில்லை. தில்லிப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப்பிரிவில் மதிப்புமிக்க படிப்பொன்றில் நான் சேர்ந்தது பெரிய விபத்து தான். பின்னர், அங்கு நான் முதுநிலைப்படிப்பை நிறைவு செய்த போதும், அடுத்து என்ன செய்யப்போகிறேன் என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஒரு MNC பதிப்பக நிறுவனம் பொருளாதாரப் பிரிவு ஆசிரியராக எனக்கு நல்ல வேலையை வழங்கிய போது, அந்த முதல் வாய்ப்பை நான் ஏற்றுக்கொண்டேன். சில ஆண்டு களில் அது அலுத்துப் போனது, அப்போதும், என் வழியில் வந்த முதல் நல்ல வேலையை நான் ஏற்றுக்கொண்டேன். 1980ல் நான் ஒரு பத்திரிகையாளரானேன். நான் செய்தித்தாளில் ஆங்கிலப் பட விமர்சனங்களை எழுதுகிறேன் என்று என் தந்தையிடம் சொன்னபோது, அவர் மிகவும் ஏமாந்து போனார். அவருடைய முகத்தில் தெரிந்த வலிப்பார்வையை நான் என்றும் மறக்க மாட்டேன். அவர் சினத்தால் பேச்சற்று நின்றார், அது சரியான சினம் தான்.

ஆனால், திரைப்பட விமர்சகராக இருந்த அந்த ஆறு மாதங்களை நான் என்னுடைய வாழ்க்கையின் மிகச்சிறந்த கணங்களாக எண்ணுகிறேன். பளபளப்பான, சிறிய திரையரங்கங்களில் காலை பத்து மணிச் சிறப்புக்காட்சிகளுக்காக நான் செல்வேன், ஆம், 10am தான். எல்லாரும் அலுவலகம் செல்வது போல் நான் திரையரங்கம் சென்றேன். இடைவேளைகளில் அவர்கள் எங்களுக்கு சான்ட்விச்களும் பியரும் தருவார்கள். அந்தச் சிறு திரையரங்குகள் என் கண்ணைத் திறந்தன. அதுவரை நான் பார்த்த இந்தியத் திரையரங்கங்கள் எல்லாம் துர்நாற்றமடிக்கும். அவை வெறும் குப்பைக்கூடங்கள். ஆனாலும் நாம் அந்தத் திரையரங்குகளுக்குச் சென்றோம். நமக்குத் தெரிந்த தந்திரம், விடாமல் திரையையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும், கீழே குனிந்தால் குப்பையும் சிகரெட் துண்டுகளும் தான் கிடக்கும்.

இன்னொருமுறை, 1960களில், தில்லியின் மிகப்பழைய திரையரங்க மொன்றில், முதியவர் ஒருவர் தன் பேரனிடம், 'இங்கேயே இருக்கைக்குக் கீழே சிறுநீர் கழித்துக் கொள்' என்று சொன்னதை நாங்கள் கேட்டோம். உடனே நாங்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டோம். சென்னையில், பெண்கள் அமர்வதற்கென்று தனியாக ஒரு சிறிய பிரிவைக் கொண்ட ஒரு திரையரங்கம் இருந்தது. விளக்குகள் போடப்படும்போது, அந்தப் பகுதியைக் கருப்புத் திரையால் மூடிவிடுவார்கள், அந்த அளவு ஆண்களையும் பெண்களையும் பிரித்துவைத்தார்கள். கல்கத்தா ஓரளவு பரவாயில்லை. அங்கு சில திரையரங்கங்களில் மதுபானக்கூடங்கள் இணைக்கப்பட்டிருந்தன. தில்லியில் சேவைத் திரையரங்கங்கள் இருந்தன. அவை உண்மையில் பெரிய கூடங்கள், மேலே அஸ்பெஸ்டாஸ் கூரை, கீழே இரும்பு இருக்கைகள். தில்லியின் சூட்டில் நீங்கள் மேலிருந்தும் கீழிருந்தும் வறுக்கப்படுவீர்கள்.

அப்போதெல்லாம் கருப்புச் சந்தையும் நன்கு புகழ்பெற்றிருந்தது. திரையரங்க வரவேற்பாளர் ஒருவரைத் தெரிந்துவைத்திருப்பது மதிப்பின் அடையாளமாக இருந்தது, ஏனெனில், அவருக்கு ஒரு தொகையைக் கொடுத்தால் எப்போது வேண்டுமானாலும் படம் பார்க்கலாம்.

ஆனாலும் நாம் திரையரங்குகளுக்குச் சென்றோம், காரணம், அரங்கம் எப்படியிருந்தாலும், படம் நன்றாக இருக்கும். ஒரு திரையரங்கத்தில் வெளியிலிருந்து நாமேதான் உள்ளே இருக்கையைக் கொண்டுசெல்லவேண்டும், அதையும் நாம் ஏற்றுக்கொண்டோம். பொதுமக்களுக்கான இடங்களில் நாற்காலிகளுக்குப் பதில் செங்கற்கள் இருக்கும், படம் முடிந்ததும் அவற்றை வெளியில் கொண்டுவந்து வைத்து விடவேண்டும்.

அப்போதெல்லாம், அரசாங்கம் நுழைவுக் கட்டணத்தை நிர்ணயித்தது, மூன்று அல்லது நான்கு அல்லது ஐந்து படிநிலைகளாக அது அமைந்தது: முன் வரிசை, நடு வரிசை, பின் வரிசை, பால்கனி, டிரெஸ் சர்க்கிள், என்று பல நிலைகள் இருந்தன.

தில்லித் திரையரங்கமொன்றில் ஒரு வரிசையில் இரண்டு இருக்கைகள் மட்டும் தான் இருக்கும். அந்த வரிசைக்கு நுழைவுக்கட்டணம் அதிகம். ஏனெனில், திரையரங்க வரவேற்பாளர்கள் ஒவ்வொரு காட்சிக்கும் அந்த இருக்கைகளை வாங்கிவிடுவார்கள், நாம் வாராவாரம், ஆண்டுதோறும் திரைப்படம் பார்த்தது அதற்காக இல்லை. TVக்கு முன்னால், வேறு எந்தப் பொழுதுபோக்கும் இல்லை, காதலுக்கு இடமில்லை.

தற்போது, பெரும்பாலான பழைய திரையரங்குகள் இடிக்கப் பட்டு, அலுவலகங்கள், பல அங்காடி அரங்கங்கள், விடுதிகள் வந்து விட்டன. பல புதிய திரையரங்குகள் மல்ட்டிப்ளெக்ஸ்களில் உள்ளன, புகை நிரம்பிய, சூடான, வியர்க் கின்ற, துர்நாற்றமடிக்கின்ற மிகைப்படுத்தப்பட்ட பழங்காலக் கூடங்களைவிட இவை மிகச் சிறந்தவை என்பதை நான் ஏற்றுக்கொள்ளவேண்டும். அத்துடன், இணையம், ஃபேஸ்புக், ட்விட்டர் வந்துவிட்டதால், எல்லாரும் திரைப்பட விமர்சகர்களாகிவிட்டார்கள்.■

# சுவராஸ்யமான செய்திகள்



### ஜூபிடரின் புகைப் படங்களால் சமூக ஊடகங்களில் சலசலப்பு

நம்முடைய சூரியக் குடும்பத்தின் மிகப் பெரிய கோளைச் சுற்றிவரும் NAS அவின் ஜூனோ விண்கலம் வியாழனுடைய அருமையான பல புகைப் படங்களை அனுப்பி வருகிறது, இதனால், மர்மமான இந்தக் கோளை இதற்குமுன் யாரும் பார்த்திராத கோணங்களில் ஆய்வாளர்கள், விண்வெளி ஆர்வலர்கள் காணத் தொடங்கியுள்ளார்கள். சமீபத்தில் வெளியான ஜூபிடருடைய புகைப்படமொன்று சமூக ஊடகங்களில் சலசலப்பை உண்டாக்கி யுள்ளது. அந்தக் கோளின் சுழலும் மேகங்களுக்கிடையில் சில விலங்குகள், மனிதர்கள், பொருட்கள் பதுங்கியிருப்பதாக நூற்றுக்கணக்கானோர் ட்விட்டரில் எழுதியுள்ளார்கள்.



### UAE லாட்டரியில் ரூ 29 கோடி வென்ற இந்திய விவசாயி

ஹைதராபாதைச் சேர்ந்த நெல் விவசாயி விலாஸ் ரிக்கலா துபாயில் வேலை தேடிச் சென்றார். வேலை ஏதும் கிடைக்காமல் திரும்பி வந்தார். அப்போது அவர் கையில் ரூ 20,000 குலுக்கல் சீட்டொன்று இருந்தது, துபாயில் நடைபெற்ற ஒரு மாபெரும் குலுக்கலில் அதன்மூலம் 4மில்லியனுக்குமேல் வென்றார் அவர். இதற்குமுன் ரிக்கலா துபாயில் ஓட்டுநராகப் பணியாற்றினார். தன் பெயரில் மூன்று சீட்டுகளை வாங்குவதற்காக அவர் தன் மனைவியிடம் ரூ20,000 கடன் வாங்கியிருந்தார்.



### எகிப்திய மட்பாண்டத் திலிருந்த 4,500 ஆண்டு வயதான யீஸ்டைக் கொண்டு ரொட்டி செய்த இயற்பியலாளர்

சூப்பர் மார்க்கெட்டில் வாங்கும் ரொட்டித் துண்டுக்கும், ஆயிரக்கணக் கான ஆண்டுகளுக்குமுன்னிருந்த உட்பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு ரொட்டித்துண்டுக்கும் என்ன வேறுபாடுகள் இருக்கும் என்று அறிய விரும்பினார் அமெரிக்க இயற்பியலாளர் சீமஸ் ப்ளாக்லெ. இதற்காக, பழங்கால எகிப்தியப் பொருட்களி லிருந்து சேகரிக்கப்பட்ட 4,500 ஆண்டுகள் வயதான யீஸ்ட் ஒன்றைக்கொண்டு ரொட்டியொன்றைச் செய்தார் அவர். ப்ளாக்லெயின் சுவைப் பரிசோதனையின்படி, பழங்கால ரொட்டி இப்போதைய ரொட்டியைவிட இன்னும் சுவையாக உள்ளதாம்.

### வனௌடு கிராமத்தில் கடவுளாக வழிபடப்படும் எடின்பர்க் பிரபு



வனௌடுவிலுள்ள தன்னா தீவின் யௌஹ்னனென் கிராமத்தைச் சேர்ந்த வர்கள், பிரிட்டிஷ் அரசியின் கணவரான இளவரசர் ஃபிலிப்பை வழிபடுகிறார்கள். இளவரசர் ஃபிலிப் இயக்கத்தைப் பின்பற்றுகிறவர்கள், இந்தப் பிரபு தங்களுடைய ஆன்ம முன்னோர்களில் ஒருவருடைய வழிவந்தவர் என்று நம்புகிறார்கள். இவர்களில் சிலர், மார்ச் மாதத்தில் இந்தப் பசி ஃபிக் நாட்டைச் சேதப்படுத்திய புயல், 2016ல் அவருடைய வருகைக்கான இயற்கையின் ஒரு நாடகத்தனமான முன்னோட்டம் என்று நம்புகிறார்கள்.



### உறுப்பு மாற்றுக்காக மனித-எலிக் கலப்பினங்களை உருவாக்கவுள்ளது ஜப்பான்

ஜப்பான் அரசுடைய அறிவியல் அமைச்சகம், மக்களுடைய பயன்பாட்டுக்காக செய்யக்கூடிய உறுப்புகளைக் கொண்ட விலங்கு-மனிதக் கலப்பினங்களை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஆய்வுக்காக அறிவியலாளர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. டோக்யோ மற்றும் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்களைத் தலைமை தாங்கி இயக்கி வரும் ஜப்பானிய ஸ்டெம் செல் அறிவியலாளர் ஹிரோமிட்சு நகௌசி, சுண்டெலி மற்றும் எலியின் கருப்பைகளுக்குள் மனித செல்களை வைத்து விலங்கு-மனிதக் கலப்பினங்களை உருவாக்கவும், இவற்றின் உறுப்புகளை மனித நோயாளிகளுக்கு மாற்றவும் திட்டமிட்டுள்ளார்.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Rotary News Tamil published on 1st of every month

ADVT



Rotary
District 3012



# ACT
# ANNES CAN TEACH

**An initiative of the R'annes of District 3012**

Rotarians worldwide contribute man hours worth millions of dollars as volunteer hours for service in all six focus areas of Rotary. While assessing the needs and challenges of Government schools in District 3012, we realised that one of the biggest challenge they face is scarcity of teachers, this ignited the thought of tapping the talent, compassion, empathy and motherly love of Annes. "WE can use the energy of our Annes as volunteers to fill this gap" said the first lady of the district Rtn. Reena Gupta thus ACT ( ANNES CAN TEACH ) was born. Annes would voluntraily go to government schools to take care of students on aspects of Life skills, social skills, health, hygiene, basic general knowledge and citizenship. The sense of gratification is the motivating factor for the entire ACT team and we all hope that we would be able to bring smiles on many faces.



**Shikha Vats**
District Chair ACT



**Reena Gupta**
Advisor, ACT Committee



**Deepak Gupta**
District Governor















